இந்திய இலக்கியச் சிற்பிகள்

# பரிதிமாற் கலைஞர்

(வி.கோ.சூரியநாராயண சாஸ்திரியார்)

வி.சு.கோவிந்தன்



# பரிதிமாற் கலைஞர்

(வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார்)

உள் அட்டையில் காணும் சிறபக் காட்சியில பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை மனனா சுத்தோதனருக்கு நிமிததிகர் மூவர் விளககுகினறனர் அவர்களுக்குக் கீழே அமாந்து அந்த விளக்கத்தை எழுதுகிறார் ஓர் எழுததா எழுதும் கலையைச் சித்தரிக்கும் முதல இநதியச சிறபம் இதுவாகவே இருககலாம நாகாாஜுன மலைச் சிறபம் கி பி இரணடாம நூறறாணடு

(பட உதவி நேஷனல மியூசியம், புதுதில்லி)

இந்திய இலக்கியச் சிற்பிகள்

# பரிதிமாற் கலைஞர்

(வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார்)

வி.சு.கோவிந்தன்

சாகித்திய அகாதெமி

*Parithimar Kalaignar:* Original monograph by V.S. Govindan, Sahitya Akademi, New Delhi, 2007, Rs.25.

© சாகித்திய அகாதெமி
முதல் பதிப்பு: 2007

**சாகித்திய அகாதெமி**

இரவீந்திர பவன், 35, பெரோஸ்ஷா சாலை,
புது தில்லி 110001

விற்பனை
'ஸ்வாதி' மந்திர் சாலை, புது தில்லி 110 001

மத்தியக் கல்லூரி வளாகம், பல்கலைக்கழக நூலகக் கட்டடம், டாக்டர் அம்பேத்கர் வீதி, பெங்களூர் 560 001

குணா பில்டிங்ஸ், 443, அண்ணாசாலை, தேனாம்பேட்டை, சென்னை 600 018.

ஜீவன் தாரா பில்டிங், நான்காவது மாடி, டைமண்ட் ஹார்பர் சாலை, கல்கத்தா 700 053

172, மும்பய் மராத்தி கிரந்த சங்கிரகாலய சாலை, தாதர், மும்பய் 400 014.

விலை: ரூ. 25

**ISBN 81-260-2463-1**

அச்சு: ஸ்ரீ விக்னேஷ் பிரிண்டர்ஸ், சென்னை.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | முன்னுரை | 7 |
| 1. | வேள்வியான வாழ்வு | 9 |
| 2. | நாடகமே உலகம் | 29 |
| 3. | கவிதைக்காலம் | 54 |
| 4. | செம்மாந்த உரைநடை | 76 |
| 5. | பரிதியின் விரிதிரை | 94 |
| | முடிவுரை | 105 |
| | பின்னிணைப்புகள் | 110 |

# முன்னுரை

**சாகித்ய** அகாதெமி இந்திய மொழிகள் அனைத்திலும் வெளி யிடும் இந்திய இலக்கியச் சிற்பிகள் வரிசையில் வி.கோ. சூரிய நாராயண சாஸ்திரியார் (பரிதிமாற் கலைஞர்) அவர்களைக் குறித்து நூல் எழுதும் வாய்ப்புக்கிடைத்ததற்காக மகிழ்கிறேன். 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றி, தாம் வாழ்ந்த 33 ஆண்டுகளுக்குள் எண்ணற்ற அரும்பணிகள் பல புரிந்தவர் பேராசிரியர் வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார்.

சூரியநாராயண சாஸ்திரியாரின் மகன்வழிப் பேரன் என்ற முறையில் அவர் படைத்த நூல்களையும், அவர் பயன்படுத்திய நூல்களையும், அவருடைய கையெழுத்தையும் நிழற்படங்களை யும் பாதுகாத்து வைத்தது இந்நூலுக்குப் பயன்பட்டது. சாஸ்திரி யாரின் 'நாடகவியல்' குறித்து எம்ஃபில் ஆய்வேடு அளிப்பதற் காக, 1985ஆம் ஆண்டு பற்பல இடங்களுக்கும் சென்று மேலும் பல சான்றுகளைச் சேகரித்தேன் சாஸ்திரியாரின் வாழ்க்கை வரலாற்றை, 1902ஆம் ஆண்டு வெளிவந்த 'நாடகவியலுரை' என்ற நூலில் சாஸ்திரியாரின் இயற்றமிழ் மாணவர் ந. பலராம ஐயர் அவர்களும், 1939ஆம் ஆண்டு சாஸ்திரியாரின் மூத்த மகனாகிய டாக்டர் வி. சூ. நடராஜன் அவர்களும் சுருக்கமாகப் படைத்துள்ளனர். 1950ஆம் ஆண்டு டாக்டர் ந. சுப்பிரமணியன் அவர்கள் சாஸ்திரியாரின் வாழ்க்கை வரலாற்றை விரிவாக எழுதி யுள்ளார். இவை எல்லாம் இந்நூல் படைக்க மிக உதவின.

இப்பணியைச் செம்மையாகச் செய்யப் பணித்த இறைவ னுக்கு நன்றி. பரிதிமாற் கலைஞருக்கு 2006ஆம் ஆண்டு உரிய அங்கீகாரம் வழங்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றி. இந்நூலை எழுத எனக்கு வாய்ப்பு நல்கிய சாகித்ய அகாதெமி

யினர்க்கும், இச்செயலில் என்னை நெறிப்படுத்திய மதுரை காமராசர் பல்கலைக்கழகப் பேராசிரியர் டாக்டர் இரா. மோகன் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றி. என் செயல்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வரும் என் துணைவி பிரபாகோவிந்தன் அவர்களுக்கும் என் இதயப்பூர்வமான நன்றி.

மதுரை **வி.சு. கோவிந்தன்**
27.09.2006

# 1

# வேள்வியான வாழ்வு

## *பிறப்பும் கல்வியும்*

**''சீரியலும் செந்தமிழ்வான் சேர்ந்துகலைத் தேசுவிரி**
**சூரியநா ராயணப்பேர்த் தோன்றல் இப்பாரில்**
**வரலாற்று நூலால் வளம்பெறப் போற்றித்**
**தரலாற் றழைக்கும் தமிழ்''**

என்று புலவர் வே.முத்துசாமி ஐயர் பகர்வார் ''நவீன தமிழிலக்கிய வரலாற்றாராய்ச்சிக்கு அவர்(சூரிய நாராயண சாஸ்திரியார்) வாழ்க்கைச் சரிதத்தையும் நூல்களையும் நுணுகிக் கற்றல் இன்றியமையாதது'' என்பார் டாக்டர் க.கைலாசபதி. தாம் வாழ்ந்த முப்பத்து மூன்று ஆண்டுகளுக்குள் அரிய தமிழ்ப்பணிகள் புரிந்த சூரியநாராயண சாஸ்திரியாரின் வாழ்க்கை வரலாறு, படிப்பவர்க்கு வியப்பைத்தரும்; புத்துணர்ச்சி ஊட்டும்.

சூரியநாராயண சாஸ்திரியாரின் முன்னோர்களைப் பற்றி அறிந்து கொண்டால் சாஸ்திரியாரின் பண்புகளையும் படைப்புகளையும் நன்கு விளங்கிக் கொள்ளலாம். இவருடைய மூதாதையருள் ஒருவர் அண்ணா தீக்ஷிதர் என்ற யக்ஞபுரீசுவர தீக்ஷிதர். இவர் 'கண்ட்ரமாணிக்கம் பிரகத்சரணம்' என்ற பிரிவைச் சார்ந்த அந்தணர் இவர் இந்தியாவில் உள்ள புனிதத் தலங்கள் அனைத்திற்கும் சென்று வழிபட்டு வேள்விகளை இயற்றியதால் 'தீக்ஷிதர்' என்ற பட்டம் புனைந்து கொண்டவர். இவருடைய மரபில் இவருக்கு ஐந்தாவது தலைமுறையாகத் தோன்றியவர் கோவிந்த சாஸ்திரியார். இவருடைய காலத்தில் வேள்வி இயற்றும் வழக்கம் குறைந்துவிட்டதாலும் சாஸ்திரங்களில் இவர் வல்லவராயிருந்ததாலும் 'தீக்ஷிதர்' என்ற பெயரை மாற்றிச் 'சாஸ்திரி' என்ற பெயரை மேற்கொண்டார்.

கோவிந்த சாஸ்திரியார் வடமொழி அறிவிற் சிறந்தவர்; உயர்ந்த ஒழுக்கமும் தெய்வபக்தியும் நிரம்பியவர். இவர் மதுரைக்கு அருகேயுள்ள விளாச்சேரி என்னும் சிற்றூரில் வாழ்ந்துவந்தார். சிவபக்தியிலும் சைவசாஸ்திர ஆராய்ச்சியிலும் சிறந்து விளங்கியவர். மதுரை சோமசுந்தரக்கடவுளையும் மீனாட்சியம்மை யையும் நாள்தோறும் தரிசிப்பவர். தம்மை அணுகியவர்களுக்கு வடமொழியைக் கற்றுக்கொடுத்து, நெறிதவறாது வாழ்ந்து வந்தார். சூரியநாராயண சாஸ்திரியார் தம்தந்தையாரை ''இல்லற இயல் வழாதிருந்த புலவர்'' என்று 'அவயவ அறிக்கை' எனத் தாம் புனைந்த செய்யுளில் குறிப்பிடுவார்.

கோவிந்த சாஸ்திரியாருக்குத் தீக்ஷா குரு ஒருவர் கிடைத்தார். அவரே மாங்குடி மணியசிவனார் ஆவார். மணியசிவனார் அனுபூதி பெற்றவர் சித்திகள் பலவும் கைவரப்பெற்றவர். சூரியநாராயண சாஸ்திரியார் தாம் இயற்றிய 'மணிய சிவனார் கலவெண்பா' வில் இவரை ''அட்டாங்கயோகம் பயின்றான்'' என்று குறிப்பிடுவார். இவருக்குச் சீடர்கள் பலர். இவருடைய சீடர்களைப்பற்றிச் சூரிய நாராயண சாஸ்திரியார் தம்முடைய ''ஸ்ரீ மணியசிவனார் சரித்திரம்'' என்னும் நூலில் விளக்கியுள்ளார். இச்சீடர்களுள் தலைமையானவர் கோவிந்த சாஸ்திரியார். மணியசிவனாரிடம் சிவதீக்ஷையும் ஞானோபதேசமும் பெற்றுக் கோவிந்த சாஸ்திரியார் கோவிந்த சிவனார் எனப் பெயர் பூண்டார்.

கோவிந்த சிவனாரும் பற்பல யோகப்பயிற்சி கைவரப்பெற்றவர். மூச்சினை அடக்குதல், நீர் மேல் நிற்றல், நெருப்பில் நடத்தல் முதலிய அரிய செயல்களைச் செய்தவர். ''நல்யோகம் பயின்ற கோவிந்த பரமாசிரியன்'' என்று ''அவயவ அறிக்கை'' என்ற தம் செய்யுளில் சூரிய நாராயண சாஸ்திரியார் குறிப்பிடுவார்.

இவர் வேதம் முழுவதும் அறிந்தவர். மந்திரங்களை ஐயந்திரிபறக் கற்றதனால் தன்னிகரின்றி விளங்கியவர். இவருக்கு மூன்று மக்கள் பிறந்தனர். மூத்தவர் சுந்தரேச சாஸ்திரியார்; இரண்டாமவர் ஆனந்தவல்லி அம்மையார், மூன்றாமவரே உயர் தனிச்செம்மொழி கண்ட சூரியநாராயண சாஸ்திரியார்.

விளாச்சேரி கோவிந்த சிவனாரின் மகனாகிய சூரியநாராயண சாஸ்திரியார், மதுரைக்கு அருகேயுள்ள விளாச்சேரியில் 1870

ஆண்டு ஜூலை மாதம் 6 ஆம் நாள் (பிரமோதூத ஆண்டு ஆனி மாதம் 24 ஆம் நாள் சித்திரை நக்ஷத்திரத்தில்) புதன் கிழமையன்று பிறந்தார்.

சூரியநாராயணன் தமிழ்ப்பள்ளியில் சேர்ந்து தமிழும் ஆரம்பக் கணிதமும் கற்றார். தம் தந்தையாரிடம் வடமொழியை வரன் முறையாகக் கற்றார். 1880 ஆம் ஆண்டு பசுமலைக் கல்லூரியில் (தற்பொழுது அமெரிக்கன் கல்லூரி) சேர்ந்து கல்வி கற்றார். இளமையிலேயே வடமொழியின் மீது ஆர்வமும் திறமையும் பெற்றிருந்த சூரிய நாராயணன் தமிழ்ப்பயிற்சியில் சிறிது கவனம் செலுத்தாது இருந்தார். பசுமலைக்கல்வி நிலையத்தில் பணிபுரிந்த தமிழாசிரியர், இவருக்குத் தமிழ் ஆர்வத்தை ஊட்டி, தமிழை நன்கு பயிலச் செய்தார். இக்காலகட்டத்தில் சூரியநாராணன் மதுரை யானை மாவுத்தர் பாலகிருஷ்ண நாயுடு என்பவரிடம் சிலம்பம், மல்யுத்தம் போன்ற கலைகளைக் கற்றார்.

மேற்படிப்பை முன்னிட்டு மதுரை நகரிலிருந்த ஜில்லா உயர்நிலைப்பள்ளியில்(Zillah High School, Madurai)சேர்ந்தார். தமிழில் தன் மகனுக்கிருந்த ஆர்வத்தைக் கண்ட கோவிந்த சாஸ்திரியார் மதுரைக் கலாசாலையில் ஆசிரியராயிருந்த மகா வித்துவான் சு.சபாபதி முதலியாரிடம் சூரியநாராயணனைத் தமிழ் பயில 1885இல் சேர்த்தார். மகாவித்துவான் சபாபதி முதலியார் மிகப்பெரும்புலவர். வடமொழியும் ஆங்கிலமும் நன்கு கற்றவர் கணித நூல், தர்க்கநூல் மற்றும் அறிவுநூல் பயின்ற அருங் கலைக்குரிசில். சாஸ்திரியார் ''பாவலர் விருந்து'' நூலில் கையறு நிலையாக,

> **''ஆங்கிலகீர் வாண வருமொழிக டாம்பயின்றோய்!**
> **தாங்கு கணிதம்வல தார்க்கிகர்தங் கோமானே''**

என்று கூறுவார் இருபத்து இரண்டாண்டுகள் கல்வி நிலையத்தில் பணிபுரிந்த விட்டு 1880 ஆம் ஆண்டில் பணியினின்றும் ஓய்வு பெற்றவர் சபாபதி முதலியார்.

இவர் 'திருப்பரங்கிரிக்குமரன் அந்தாதி', 'திருக்குளந்தை வடிவேலன் பிள்ளைத்தமிழ்', 'மதுரை மாலை' போன்ற சிறந்த

நூல்களை இயற்றியுள்ளார். திருப்பரங்கிரிக்குமரன் அந்தாதி யமகமாக அமைத்து பாடப்பெற்றது. சோமசுந்தரக்கடவுள் மீது நூறு சிலேடை வெண்பாக்களால் இயற்றப்பட்டது 'மதுரை மாலை'.

இத்தகைய பண்பாளரிடம் சாஸ்திரியார் தம் 15ஆம் அகவையில் தமிழ் கற்கத் தொடங்கினார். சாஸ்திரியாரோடு இவரிடம் தமிழ் பயின்றவர்கள் இருபதின்மர்.தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்களையும் சங்க இலக்கியங்களையும் ஏறத்தாழ நான்காண்டுகள் இவரிடம் சூரியநாராயணன் பயின்றார். தமிழ்ச் செய்யுட்களை விரைந்து பாடும் தன்மையையும் பெற்றார். சபாபதி முதலியாருக்குத் தமிழை நன்கு பயிலும் சூரியநாராயணன் மீது அளவு கடந்த அன்பு உண்டு. இவர் கேட்கும் அறிவினாக்கட்குச் சூரியநாராயணன் பகரும் அரிய விடைகளைக்கேட்டு, சபாபதி முதலியார் இவரைப்புகழ்ந்து மெய்யுறத் தழுவிக்கொள்வார். இதனை, சாஸ்திரியார் தமது 'பாவலர் விருந்து' எனும் நூலில் கையறுநிலையில்,

> ***"...........................................................நின்***
> ***செம்மை வினாக்கட்குச் சிற்சிலகா லெம்விடைகேட்***
> ***டெம்மைத் தழீஇயவுனை யெவ்வுலகிற் காண்குதுமோ!"***

என்று குறிப்பிடுவார்.

அந்நாளில் மதுரை ஜில்லா உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியரா யிருந்த ஜான்பாலகிருஷ்ண நாயுடு என்பவர். சூரியநாராயணன் உயரிய நடையில் எழுதிய கட்டுரையைப்பாராட்டி, "பகலவா! நீ எழுதிய எழுத்தெல்லாம் இருளாயிருக்கிறதே" என்றாராம்.

1889ஆம் ஆண்டு, தம்முடைய பத்தொன்பதாம் அகவையில் சாஸ்திரியார் இயற்றிய தோத்திர நூல் "மாலா பஞ்சகம்". இந்நூல் கிடைக்கப் பெறவில்லை. யாழ்ப்பாணத்து ஆறுமுக நாவலர் எழுதிய, 'சாதன சதுஷ்டய தர்ப்பணம்' என்னும் சிறு நூலுக்கு, சபாபதி முதலியாரும் சாஸ்திரியாரும் இணைந்து 'சாதனசதுஷ்டய தர்ப்பண வச்சிர சூசிகா' என்ற கண்டன நூல் வெளியிட்டனரென்பர்.

சாஸ்திரியார் 1890ஆம் ஆண்டு சென்னைப்பல்கலைக்கழகத்தில் எப்.ஏ. தேர்வில் முதல்வராகத் தேர்ச்சிபெற்று, பாஸ்கர சேதுபதி அரசர் உதவிச்சம்பளமும் பெற்றார். சென்னைக் கிறித்தவக்

கல்லூரியில் பி.ஏ. வகுப்பில் சேர்ந்தார். சோமசுந்தர முதலியார் என்னும் செல்வந்தரின் மகனாகிய விசுவநாத முதலியார் சாஸ்திரியாரின் நெருங்கிய நண்பர். இந்நட்பினால் முதலியாரும் சாஸ்திரியாரைச் சென்னைக்கு அழைத்துச் சென்று கிறித்தவக் கல்லூரியில் பி.ஏ. வகுப்பில் தானும் சாஸ்திரியாருடன் சேர்ந்தார். இருவரும் சென்னையில் ஒரு வீட்டின் மாடியில் தங்கிக் கல்லூரியில் பயின்றனர்.

அக்காலத்தில் சென்னையில் உயர்கல்வி கற்க விரும்பும் மாணவர்கட்குப் பயன்பட்டு வந்த கல்லூரிகள், மாநிலக்கல்லூரி, கிறித்தவக்கல்லூரி மற்றும் பச்சையப்பன் கல்லூரி ஆகிய மூன்றுமே.

சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் அப்பொழுது முதல்வராக விளங்கியவர் ஸ்காட்லாந்து நாட்டைச் சார்ந்த டாக்டர் வில்லியம் மில்லர் ஆவார். இவர் மிகப்பெரும் செல்வந்தர். தம்முடைய வருவாயை எல்லாம் கல்லூரிக்காகவே செலவு செய்தார். அக்கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கு அவர் மீது மிகுந்த மரியாதையும் அன்பும் உண்டு. டாக்டர் மில்லர் அவர்கள் சென்னைச் சட்டசபையில் ஓர் உறுப்பினர். சென்னைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகப் பதவி வகித்தார். மாணவர்களிடம் அவர் எவ்வித வேறுபாட்டையும் காட்டாது, அனைவரையும் ஒன்றாகக் கருதுபவர். மாணவர்களிடம் சரிசமமாய்ப் பழகுவார். ஏழை மாணவர்களுக்குப் பற்பல உதவிகளைச் செய்வார். கல்வியைப் பரப்புவதையே தம்முடைய வாழ்வின் நோக்கமாகக் கருதினார். இவர் இல் வாழ்க்கையின் இன்பங்களைத் துறந்தவர் என்பதைச் சாஸ்திரியார், ''மெல்லியலார் தம் வலையில் வீழாக் குருமணி'' என்று 'பாவலர் விருந்து' என்ற நூலில் 'ஆசானுருநிலை' என்பதில் குறிப்பிடுவார். சாஸ்திரியார் தம் தமிழாசிரியர் சபாபதி முதலியாருக்கு அடுத்து, தம் ஆங்கில ஆசிரியர் டாக்டர் மில்லர் அவர்களைப் பெரிதும் மதித்தார்.

கல்லூரியில் பயிலும்போதே சாஸ்திரியார் மனஉறுதியுடனும், அஞ்சாமையுடனும், தமிழார்வத்துடனும் விளங்கினார். இவற்றை விளக்கும் இரு நிகழ்ச்சிகளைக் காண்போம்.

கல்லூரி தொடங்கிய முதல் நாள் பி.ஏ. வகுப்பில் வருகைப்பதிவு எடுத்துக்கொண்டு வந்த டாக்டர்·மில்லர், 'சூரியநாராயணன்' என்ற நீண்ட பெயரைப்படிக்க இடர்ப்பட்டு, 'உமது பெயரைச் சற்று மாற்றிக் கொள்ள முடியுமா?' என்று கேட்டார். சூரியநாராயணனும்

'அவ்வாறே செய்கிறேன்' என்று கூறினார். மறுநாள் வருகைப்பதிவு எடுத்து வந்த டாக்டர் மில்லர் அவர்களுக்கு இவர் பெயரைப் படிப்பது மேலும் இடர்ப்பாடாயிற்று. 'சூரியநாராயணன்' என்ற பெயர் 'சூரியநாராயண சாஸ்திரி' என்று மாற்றப்பட்டிருந்தது. இந்த நீண்ட பெயரைப்படிக்க இடர்ப்பட்டுக் காரணம் வினவிய டாக்டர் மில்லரிடம் சாஸ்திரியார். 'தங்கள் கூறியபடி என் பெயரை மாற்றிக் கொண்டேன்; நீங்கள் பெயரைக் குறுக்கிக் கொள்ளச் சொல்ல வில்லையே' என்றாராம். சாஸ்திரியாரின் அஞ்சாமையையும், அறிவுக்கூர்மையையம் கண்ட டாக்டர் மில்லர். இவரிடம் பேரன்புகாட்டத் தொடங்கினார்.

பிறிதொருநாள் டென்னிசன் (Tennyson) இயற்றிய 'ஆர்தரின் இறுதி' (Morte D' Arthur) என்ற பாடலின் ஒரு பகுதியை டாக்டர் மில்லர் நடத்தி வந்தார். அப்பகுதி வருமாறு: இறக்குந்தறுவாயில் உள்ள ஆர்தர் அரசனை அவன் மனைவியருடன் படகொன்றில் வைத்து நதியில் விடுகின்றனர். துடுப்புக்களை அசைத்துச் செல்லும் அப்படகை ஓர் அழகிய அன்னப்பறவைக்கு உவமையாகப் புலவன் கூறுகிறான்.

*'So said he, and the barge with oar and sail*
*Moved from the brink, like some full - breasted swan'*

இப்பகுதியை நடத்திவந்த டாக்டர் மில்லர், சாஸ்திரியாரைப் பார்த்து, 'தமிழின் பெருமையை எப்பொழுதும் பேசுகிறாயே! இது போன்ற உவமை தமிழ் இலக்கியத்தில் வந்துள்ளதா? சொல் பார்ப்போம்!' என்றார் உடனே சாஸ்திரியார். 'டென்னிசனுக்கு எட்டு அல்லது ஒன்பது நூற்றாண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டுள்ள கம்பராமாயணத்தில் படகின் செலவிற்கு மட அன்னத்தின் அசைவைக் கம்பர் உவமையாக்குவார். இதே உவமையைத்தான் டென்னிசனும் பிற்காலத்தில் ஆண்டுள்ளார்.

**விடுநதி கடிதென்றான் மெய்யுயி ரனையானு**
**முடுகின நெடுநாவாய் முரிதிரை நெடுநீர்வாய்க்**
**கடிதினின் மடவன்னக் கதியது செலநின்றா**
**ரிடருற மறையோரு மெரியுறு மெழுகானார்.**

என்பதே அப்பாடல்' என்றார். கம்பராமாயணம் அயோத்தியா காண்டம் கங்கைப்படலத்தில் வரும் காட்சி இது. இராமன் சீதை இலக்குவன் ஆகியோர் கங்கையை ஓடத்தாற் கடக்கின்றனர். குகன் படகை ஓட்டும் காட்சிக்குக் கம்பர் அமைத்துள்ள பாடலாகும். தம்முடைய மாணவனின் பதிலைக்கேட்ட டாக்டர் மில்லர், அவருடைய தமிழறிவைக் கண்டு வியந்தார். அவர் மீது மிகுந்த அன்பும் அவருடைய வளர்ச்சியில் பற்றும் கொள்ளத் தொடங்கினார். டாக்டர் மில்லரிடம் ஷேக்ஸ்பியர் நாடகங்களைக் கற்றதனால், சாஸ்திரியாருக்கு நாடகத் தமிழின் மீது மிகுந்த ஆர்வம் உண்டாயிற்று. ஷேக்ஸ்பியரின் சோக முடிவுடன் கூடிய நாடகங்களே சாஸ்திரியாரை 'மானவிஜயம்' எனும் தீயிறுதி நாடகம் எழுதத் தூண்டியது எனலாம். சாஸ்திரியார் கல்லூரியில் பயிலும்போதே ''விவேகசிந்தாமணி'' என்னும் இதழில் கட்டுரைகள் எழுதத் தொடங்கினார்.

சாஸ்திரியார் 1892ஆம் ஆண்டு நிகழ்ந்த பி.ஏ தேர்வில் தமிழிலும் வேதாந்த தத்துவ சாத்திரத்திலும் பல்கலைக்கழக அளவில் முதல்வராகத் தேறினார். 1893ஆம் ஆண்டு பி.ஏ. பட்டம் பெற்றார். பல்கலைக்கழக அளவில் தமிழில் முதல்வராக வருபவர்க்கு வழங்கப்படும் பாஸ்கர சேதுபதி அரசர் பெயரால் நிறுவப்பட்ட பொற்பதக்கத்தையும் பரிசாகப் பெற்றார்.

அக்காலத்தில் தமிழறிஞர் யாழ்ப்பாணம் சி.வை. தாமோதரம் பிள்ளை (1832-1901) அவர்கள் சென்னையில் வாழ்ந்து வந்தார். இவர் சுன்னாகம் குமாரசாமிப் புலவருடைய மாணவர். இவர் சென்னைப் பல்கலைக்கழகத்தில் முதன் முதலில் 1858ஆம் ஆண்டு பி.ஏ. தேர்வில் தேறிய இருவருள் ஒருவர். கலித்தொகை, சூளாமணி, தணிகைப்புராணம் முதலிய இலக்கியங்களையும் தொல்காப்பியம். வீரசோழியம், இலக்கணவிளக்கம், இறையனார் அகப்பொருள் முதலிய இலக்கண நூல்களையும் முதன்முதலாகப் பதிப்பித்தவர். சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பாடப்புத்தகக் குழுவின் தலைவராக இருந்தார்.

பல்கலைக்கழக அளவில் தமிழில் முதல்வராகத் தேர்ச்சி பெறுபவரைத் தம் இல்லத்திற்கு அழைப்பார் சி.வை. தாமோதரம் பிள்ளை. தாமும் அவர்களுக்கு ஒரு தேர்வு நிகழ்த்தி அவர்களின் தமிழறிவின் தகுதியைச் சோதித்துப் பரிசுகள் வழங்குவார்.

அவ்வாறே தாமோதரம் பிள்ளை, சாஸ்திரியாரைத் தம் இல்லத்திற்கு அழைத்தார்.

மிகப்பெரும் புலவரான தாமோதரம் பிள்ளையிடமிருந்து அழைப்பு வந்தவுடன் சாஸ்திரியார் தம் நண்பராகிய ஆபதோத்தாரண ஐயரை உடன் அழைத்துச் சென்றார். தாமோதரம் பிள்ளைக்கும் சாஸ்திரியாருக்கும் இடையே பொதுவான செய்திகளைப் பற்றி உரையாடல் நிகழ்ந்தது. சங்ககாலத் தமிழில், 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஓர் அந்தண இளைஞன் அச்சமின்றி ஆழ்ந்த கருத்துக் களைக் கோவைப்படுத்தி உரையாடியதைக்கண்ட பிள்ளையவர்கள் மனமகிழ்ந்தார். இவ்விளைஞன் தமிழ்த்தாயின் தவப்புதல்வன் என்பதனை உணர்ந்தார். உரையாடலில் கூட இத்தமிழ்நடை சாஸ்திரியாருக்கு இயல்பாக அமைந்தது என்பதையும் அறிந்தார்.

தாமோதரம்பிள்ளை, சாஸ்திரியாருக்கு முறைப்படி ஒரு வினாத்தாள் கொடுத்து ஒருமணி நேரத்தில் விடையளிக்குமாறு கூறினார். அந்த வினாத்தாளை சாஸ்திரியார் அரைமணி நேரத்தில் முடித்துக் கொடுத்தார். தம்மை வந்து மறுநாள் காணுமாறு சாஸ்திரி யாருக்கு விடைகொடுத்தனுப்பினார் தாமோதரம்பிள்ளை. மறுநாள் சாஸ்திரியாரைக் கண்ட தாமோதரம்பிள்ளை. 'உமது விடைகள் உயரிய செந்தமிழ் நடையில் புதுக்கருத்துக்களைக் கொண்டு விளங்குகின்றன. உம்மைத் ''திராவிடசாஸ்திரி'' என்று அழைத்தலே சாலப்பொருந்தும்' என்றார். மேலும் சாஸ்திரியாரின் மொழி பெயர்ப்புத் திறனை அறிய விரும்பி, ஆங்கிலக் கவிதைப் பகுதியைத் தமிழில் செய்யுள் வடிவமாக மொழி பெயர்க்குமாறு பணித்தார்.

ஷேக்ஸ்பியர் இயற்றிய 'வெனிஸ் வர்த்தகன்' (Merchant of Venice) என்ற நாடகத்தில் இசைபற்றிக் கூறியுள்ள.

*'The man that hath no music in himself*
*Nor is not mov'd with concord of sweet sounds*
*Is fit for treasons, stratagems and spoils;*
*The motions of his spirit are dull as night,*
*And his affections dark as Erebus;*
*Let no such man be trusted'*

என்ற பகுதியைத் தாமோதரம்பிள்ளை எடுத்துக் கொடுத்தார். சாஸ்திரியார் உடனே,

**"கன்னலங் கனிந்த பாடற் காயக னல்ல னேனு**
**மின்னிசை கேட்டு நெஞ்ச மினகிடா திருப்பான் வஞ்ச**
**மன்னவர் துரோக மாதி மாபாவஞ் செய்யத் தக்கா**
**னன்னவன் றனைநம் பாம லகற்றிட வேண்டு மன்றே."**

என்று மொழி பெயர்த்துக் கொடுத்தார். இப்பாடலைத் தாம் பிற்காலத்தில் இயற்றிய 'கலாவதி' நாடகத்தின் 15ஆம் செய்யுளாக அமைத்துக் கொண்டார். தாமோதரம்பிள்ளை மிக மகிழ்ந்து, தாம் பதிப்பித்துள்ள இலக்கண இலக்கிய நூல்களைத் தம் கையெழுத்திட்டு அன்பளிப்பாக வழங்கினார்.

சாஸ்திரியார் பயன்படுத்தியுள்ள நூல்களைக் கண்ணுறும்போது, தன் பெயரை அவர் புத்தகத்தின் முதல்தாளில் எழுதியிருப்பதைக் காணலாம். அதன்கீழ் அப்புத்தகத்தைப் பெற்ற தேதியையும் குறிப்பிடுவார். புத்தகத்தின் இறுதிப்பக்கத்தில் அந்நூலைப்படித்து முடித்த தேதியைக் குறிப்பிடுவார். சில நூல்களில் இறுதிப்பக்கத்தில் படித்து முடித்த தேதிக்குக் கீழே மற்றொரு தேதியும் காணப்படும். அஃது அந்நூலை அவர் இரண்டாம் முறையாகப் படித்த தேதியாகும். நூலின் முதல் தாளில் தமது பெயரைச் 'சூரியநாராயணன்', 'சூரிய நாராயண சிவா', 'சூரிய நாராயண சாஸ்திரி', 'சூரியநாராயண சாஸ்திரியார்' எனப்பலவிதமாக எழுதியுள்ளார்.

தாமோதரம்பிள்ளை வழங்கிய 'இறையனார் அகப்பொருள்' நூலின் முதல் தாளில்

**'உண்மையைச் சொலப்புகுந்தா லுத்தம நேசர்களிப்**
**பண்மிகு புத்தகந்தான் பரசிவக்கொழுந் தாய்வந்த**
**சண்முகத் தேவைஞான சற்குருபரனை வாழ்த்துந்**
**தண்மையார் சூரியநா ராயணச்சிவன் றன்னதாமால்'**

என்று எழுதிக் கையெழுத்தும் இட்டுள்ளார்

சாஸ்திரியாரின் கவிதைநடை எளிமையாகவும் வசனநடை கடினமாகவும் திகழ்வது கண்ட தாமோதரம்பிள்ளை, 'இதே உயரிய வசனநடையில் ஒரு நூல் எழதித்தருமாறு வேண்டுகிறேன்' என்றார். அவருடைய வேண்டுகோளின்படி இயற்றப்பட்ட புதினமே

'மதிவாணன்', **'மதிவாணன்' நூலின் உயரிய செந்தமிழ் நடைக்கு இதுவே காரணம்.** 'ஞானபோதினி' மாத இதழில் 1897ஆம் ஆண்டு முதல் 'மதிவாணன்' வெளிவரத் தொடங்கியது. 1902ஆம் ஆண்டு நூல் வடிவாக அச்சிடப்பட்டது. 'மதிவாணன்' நூலாக வெளி வரும்முன் தாமோதரம்பிள்ளை மறைந்தது சாஸ்திரியாருக்கு மிக மனவருத்தத்தை அளித்தது தாமோதரம்பிள்ளையின் மறைவுக்காக வருந்தித் தாம்பாடிய நான்கு இரங்கற்பாக்களின் இறுதிப்பாடலின் கடைசி இரண்டடிகளில்,

**'தாமோ தரம்பிள்ளை சால்பெடுத்துச் சாற்ற,எவர்**
**தாமோ தரமுடையார் தண்டமிழ்ச்செந் நாப்புலவீர்'**

என்று குறிப்பிடுவார்.

*ஆசிரியப்பணி*

1893ஆம் ஆண்டு பட்டமளிப்பு விழாவையொட்டி டாக்டர் மில்லர் தத்துவ சாத்திர ஆசிரியர் பணியைச் சாஸ்திரியாருக்கு அளித்தார். அக்காலத்தில் பிறதுறை ஆசிரியர்களைவிட தமிழாசிரியர்களுக்கு ஊதியம் குறைவு. சாஸ்திரியார், தமிழ் மீதுள்ள ஆராக்காதலால், ஊதியம் குறைவானாலும் தமக்குத் தமிழாசிரியப் பணியையே நல்குமாறு வேண்டினார். இவரது தமிழார்வத்தைக் கண்டு வியந்த டாக்டர் மில்லர். இவருக்குத் தமிழாசிரியர் பதவியை அளித்து, தத்துவசாத்திர ஆசிரியருக்குரிய ஊதியத்தை வழங்கினார். சூரியநாராயண சாஸ்திரியார் 1893ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள். தமது இருபத்து மூன்றாம் அகவையில் கிறித்தவக் கல்லூரியில் உதவித் தமிழாசிரியர் பணியை மேற்கொண்டார். கல்லூரி அளவில் தமிழாசிரியர் பணியை விரும்பி மேற்கொண்ட முதல் பட்டதாரி இவரே. 1895ஆம் ஆண்டில் கிறித்தவக் கல்லூரியில் தலைமைத் தமிழாசிரியராகப் பதவி உயர்வு பெற்றார். சாஸ்திரியார் தமிழாசிரியர் பணிமேற்கொண்டது தமிழ்த்தாயின் நல்லூழ் என்றே கருதவேண்டும்.

இந்தியா ஆங்கிலேயரிடம் அடிமைப்பட்டிருந்த அக்காலத்தில், மாணவர்கள் வேலை பெறுவதற்குரிய தகுதியாக ஆங்கிலத்தைக் கருதினார்கள். எனவே கல்விநிலையங்களில் மாணவர்கள் தமிழ்மீது

ஆர்வம் அதிகம் கொள்ளவில்லை. அக்காலத்தில் கல்லூரி அளவில் தமிழ்ப்பாடப்பகுதிகள் இப்போது இருப்பதை விடக்கடினமாகும். ஆங்கிலம் படிப்பதும் ஆங்கிலத்தில் பேசுவதுமே சிறப்பு என்று கருதிய அக்காலத்தில் தமிழுக்கு உரிய மரியாதை கிடைக்காதது வியப்பன்று. தமிழ் மட்டுமே அறிந்திருந்த பெரும்பாலான தமிழாசிரியர்களுக்கு மாணவர்களிடத்தில் தமிழார்வத்தைத் தூண்டுவது இயலாத காரியமாக இருந்தது. சாஸ்திரியாரோ தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மும்மொழிப் புலமை படைத்தவர். அதோடு உளவியலையும் (Psychology) நன்கு பயின்றவர்.

அக்காலத்தில் பி.ஏ. மாணவர்களுக்கு நன்னூல், யாப்பருங்கலக் காரிகை, தண்டியலங்காரம் போன்ற இலக்கணநூல்களும் கம்ப ராமாயணம், பெரியபுராணம், சங்கநூல்கள் போன்ற இலக்கியங் களும் பாடப்பகுதிகளாக அமைந்திருந்தன. இலக்கணத்தையும் இலக்கியத்தையும் சுவைகுன்றாது, மேலும் கற்கவேண்டும் என்ற அவாவைத் தூண்டும் விதமாகச் சாஸ்திரியார் கற்பிப்பார். சமகாலக்கருத்துக்களைப் பண்டைய இலக்கியம் கொண்டும், தமிழர்பண்பாடு, நாகரிகம், மொழி வரலாறு ஆகியவற்றை ஆராய்ச்சி முறையில் வரலாற்றுச் சான்றோடும் விளக்குவார்.

சாஸ்திரியார் பாடம் நடத்தும் பொழுது வகுப்பில் மாணவர் கூட்டம் அதிகமாக இருக்கும். பிற வகுப்பு மாணவர்கள்கூட, தங்கள் வகுப்புக்களைப் புறக்கணித்து விட்டு சாஸ்திரியாரின் வகுப்பில் கூடி விடுவார்கள். சாஸ்திரியார் தம் வகுப்புகளில் கையாளும் நடையே பண்டைய உரையாசிரியர்களின் வசனநடைதான். அந்நடை அவருக்கு இயல்பாக அமைந்திருந்தது. வகுப்பில் தமிழ்ச்செய்யுள் களை நல்ல குரல்வளம் மிக்க மாணவர்களைக் கொண்டு இசையுடன் படிக்கச் செய்வார். இசையோடு படிப்பதால் கவியின் உள்ளக் கிளர்ச்சியை உள்ளபடி உணர இயலும் என்பார்.

'ஒருமுறை சீவகசிந்தாமணி கோவிந்தையாரிலம்பகம் பாடஞ் சொல்லிய சமயத்து,

**'நாம வென்றிவேல் நகைகொள் மார்பனைக்**
**காம னேஎனக் கன்னி மங்கையர்**
**தாம ரைக்கணாற் பருக'**

என்னும் பாடலின் பொருள்கூறும் அமையத்து 'தாமரைக் கணாற்பருக' - தாமரைபோலும் கண்ணாற்பருக எனவும் மங்கை யராதலால் வெளிப்படையாகப் பார்க்க அஞ்சி, தாம்+அரைக்கணால் பருக-அஃதாவது ஜாடையாக அரைக்கண்ணால் பார்க்க எனவும், தாம்+மரைக்ணால்(மான்போலும் கண்ணால்) பருக எனமூன்றாவது ஒரு பொருளும் கொடுத்தார்!' என்பார் சாஸ்திரியாரின் மாணவரான வ.சு. செங்கல்வராய பிள்ளை.

சாஸ்திரியார் கல்லூரியில் பணிபுரியத் தொடங்கியபோது, மாணவர்களில் பலரும், சாஸ்திரியாரின் வயதை ஒத்தவர்களாகவே இருந்தனர். எனவே மாணவர்களின் அறிவினாக்களையும் குறும்பான வினாக்களையும் சாஸ்திரியார் எதிர்கொள்ள நேர்ந்ததில் வியப்பில்லை.

ஒரு நாள் பி.ஏ.வகுப்பிற்குச் சாஸ்திரியார் யாப்பிலக்கணம் நடத்திக் கொண்டிருந்தார். அப்போது ஒரு மாணவர், 'எழுத்து அசை, சீர், தளை, அடி, தொடை என்பனவற்றைப்பற்றி விளங்குமாறு எடுத்துக்கூறினீர்கள். அடிகளையும் தொடைகளையும் பற்றி விவரித்த பின் மேல் விவரிப்பதற்கு யாது உளது?' என்று குறும்பாக வினவினார். செந்தமிழ்க் கொண்டலாகிய சாஸ்திரியார் உடனே, 'தொடையிலக்கணத்திற்குப் பிறகு எவ்விலக்கணம் கூறப்படும் என்று ஐயுற்ற நுமக்கு மற்றொருநாள் விளக்குமாற்றால் விளக்குதும்' என்று விடையளித்தார். விளக்குமாற்றால்=விளக்கிக் கூறவேண்டிய முறைப் படி(விளக்கும்+ஆற்றால்) என்பது ஒருபொருள்; துடைப்பத்தால் என்பது மற்றொரு பொருள்.

வகுப்பில் ஒழுக்கத்தையும் நன்னடத்தையையும் சாஸ்திரியார் வற்புறுத்துவார். என்றைக்கும் ஒழுங்கீனத்திற்கு இடம் கொடுப்ப தில்லை. ஒரு முறை சாஸ்திரியாரின் இலக்கண வகுப்பைக் கவனிக்காது இருந்த ஒரு மாணவரை, 'நமது சொற்பொழிவைப் பொருட்படுத்த விரும்பாத நீ இவணிருந்த எழுவாய்; நீ ஈண்டு இருத்தலால் உனக்கோ பிறர்க்கோ பயனிலை; இவணிருந்து உன்னாற் செயப்படுபொருளிலை. ஆதலால் வகுப்பினின்றும வெளியேறுக' என்று நயம்பட நவின்றார்.

சி.வை. தாமோதரம் பிள்ளையைப் போலவே இடையீடின்றி இறுதிவரை சாஸ்திரியாருக்கு நெருங்கி நண்பராய் விளங்கியவர் மு.சி.பூரணலிங்கம் பிள்ளையவர்கள். இவருக்குத் தமிழ் இலக்கிய

வரலாறு மீது அதிக ஆர்வமுண்டு. எனவே சென்னைக் கிறித்தவக் கல்லூரி நூலகத்தில் இவர்குறிப்புகள் எடுத்துக் கொண்டிருந்த போது, சாஸ்திரியாருக்கும் இவருக்கும் நட்பு உண்டாயிற்று. சாஸ்திரியார் மொழி வரலாற்றில் கவனத்தைச் செலுத்த, பூரணலிங்கம் பிள்ளை இலக்கிய வரலாற்றில் நாட்டம் கொண்டார். 1929 இல் தாம் ஆங்கிலத்தில் எழுதிய தமிழ் இலக்கியம்(Tamil Literature) என்ற நூலைப் பூரணலிங்கம் பிள்ளை அவர்கள் சாஸ்திரியாருக்கு உரிமையாக்கினார்.

திராவிட மொழிகளின் வளர்ச்சியில் பற்றுக் கொண்டிருந்தவர்களுள் குறிப்பிடத் தகுந்தவர் சர்.எஸ்.சுப்பிரமணிய ஐயரவர்கள். மதுரையைச் சார்ந்த இவர் சென்னை உயர்நீதி மன்றத்து நீதிபதியாக விளங்கினார். இவருடைய நற்குணங்களால் ஈர்க்கப்பட்ட மக்கள் இவரை, 'மயிலை முனிவர்' என்று அன்போடு அழைத்தனர். இவரைக்காண சாஸ்திரியார் அடிக்கடி செல்வார். அப்போது சாஸ்திரியாருடன் பூரணலிங்கம் பிள்ளையவர்களும் சாஸ்திரியாரின் இயற்றமிழ் மாணவர்களுள் ஒருவரான ந.பலராம ஐயரவர்களும் செல்வார்கள். இவர்களுடைய கருத்துக்களின்படி, கிறித்தவக் கல்லூரியில் நிறுவப்பட்டிருந்த தமிழ்மொழி முன்னேற்றச் சங்கம் புதுப்பிக்கப் பட்டது. 1899ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 5 ஆம் நாள் 'திராவிட பாஷா சங்க' த்தின் கூட்டம் சர். எஸ்.சுப்பிரமணிய ஐயர் அவர்களின் தலைமையில் சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் நடைபெற்றது. இச்சங்கம் ஒரு சில ஆண்டுகளே நன்கு நடைபெற்றது. சாஸ்திரியார் தம்முடைய 'தமிழ் மொழியின் வரலாற்றில்' '.... நன்மக்கள் சிலர் முற்புகுந்து, தமிழ் தெலுங்கு மலையாளம் கன்னடம் துளுவங்கள் ஆகிய அனைத்தையும் போற்றுவோம் என எழுந்து 'திராவிட பாஷா சங்கம்' என்னும் பெயர் புனைந்துகொண்டு சின்னாள் உழைத்தனர். இவர்கள் சில ஆங்கில சாஸ்திரச் சொற்களை மேற்கூறிய பாஷைகளில் மொழிபெயர்த்து அச்சிட்டு வெளியிட்டனர். அதன்மேல் துயிற்பெருந்தேவி இச்சங்கத்தையும் பற்றிக் கொண்டனள். ஆகவே சென்னைத் 'திராவிட பாஷா சங்க'மும் தூங்குவதாயிற்று. இஃது என்று எழுமோ? அறியேம். இதுவும் விரைவின் எழுக' என்று குறிப்பிடுவார்.

கிறித்தவக்கல்லூரியில், 'கிறித்தவக்கல்லூரி இதழ்' ஒன்று ஒவ்வொரு மாதமும் வெளிவரும். அந்த இதழில் ஆங்கிலக் கட்டுரை

களை மட்டுமே வெளியிடுவது வழக்கம். சாஸ்திரியாரின் நன் முயற்சியால் தமிழ்க் கட்டுரைகளும் இந்த இதழ் வாயிலாக வெளிவரத் தொடங்கின. சாஸ்திரியார் இயற்றிய சில தனிப் பாசுரங்களும் சில கட்டுரைகளும் 'மான விஜயம்' என்னும் செய்யுள்நாடகமும் இந்த இதழ் வாயிலாக வெளிவந்தன.

கல்லூரியில் பயிலும் மாணவர்களுள் இயல்பாகவே தமிழறிவும் தமிழார்வமும் உடைய மாணவர்களைத் தமது இல்லத்திற்கு அழைத்து அவர்களுக்கு 'இயற்றமிழ் மாணவர்கள்' எனப் பெயரும் சூட்டினார் சாஸ்திரியார் அவ்வாறு கல்விபயின்ற மாணவர்கள் பன்னிருவர்.

சாஸ்திரியார் சென்னையில் தங்கசாலைத் தெருவில் தங்கியிருந்த இல்லத்தின் உரிமையாளர் செங்கல்வராய முதலியார். அவருடைய மகன் சரவணமுதலியார்; சாஸ்திரியாரின் இயற்றமிழ் மாணவர்; கிறித்தவக்கல்லூரியில் பி.ஏ. வகுப்பில் பயின்று வந்தார். அவ்வாண்டு அவர் தேர்வு எழுதும் சமயம் சாஸ்திரியார் தேர்வாளர் குழுவில் உறுப்பினராக இருந்தார். தமது இயற்றமிழ் மாணவன் தமிழ்த் தேர்வு எழுதும் போது, தான் தேர்வாளராக விளங்குவது சரியன்று என்று கருதிய சாஸ்திரியார், தமக்குப்பதில் உ.வே.சாமிநாத ஐயரவர்களை நியமித்துக் கொள்ளலாம் என்று பல்கலைக்கழகத்திற்குத் தெரியப் படுத்தினார் தம்முடைய மாணவனின் பெருமையை விட, பொருட் பயன்பெரிதல்ல என்று கருதிய இவருடைய தன்னலங் கருதாத் தகைமை வியந்து போற்றற்குரியது.

வ.சு.செங்கல்வராயபிள்ளை, கிறித்தவக் கல்லூரியில் பயின்றவர்களில் தமிழில் முதல்வராகத் தேறினார் அக்கல்லூரியைச் சார்ந்த ஆர்.வி.கிருஷ்ணய்யர் ஆங்கிலத்தில் முதல்வராகவும் தமிழில் இரண்டாமவராகவும் தேறினார். கல்லூரி அதிகாரிகள் தமிழுக்குக் கொடுக்க வேண்டிய பரிசை ஆர்.வி.கிருஷ்ணய்யருக்குக் கொடுப்ப தென முடிவு செய்தனர். சாஸ்திரியார் டாக்டர் மில்லரிடம் வாதாடி, தமிழ்ப்பரிசைத் தமிழில் முதல்வராகத் தேறிய செங்கல்வராய பிள்ளைக்கே கொடுக்குமாறு செய்தார். இந்நிகழ்ச்சியால் சாஸ்திரியாரின் தமிழார்வமும் நேர்மைக்காகப் போராடும் நெஞ் சுறுதியும் வெளிப்படுகின்றன.

நாகைப்பட்டினம் வேதாசலம் பிள்ளை(பிற்காலத்தில் மறைமலை யடிகள் என்று விளங்கியவர்) சென்னைக் கிறித்தவக் கல்லூரியில்

உதவித் தமிழாசிரியர் பதவிக்கு நேர் காணலுக்கு வந்திருந்தார். அக்கல்லூரியில் தலைமைத் தமிழாசிரியராக விளங்கிய சாஸ்திரியார் வேதாசலம் பிள்ளையிடம் 'குற்றியலுகரத்திற்கும் முற்றியலுகரத் திற்கும் உதாரணம் தருக' என்றார். 'எனக்குத் தெரியாது' என்று விடையிறுத்தார் வேதாசலம் பிள்ளை. 'நாளைக்கே நீர் வேலையில் வந்து சேர்ந்து கொள்ளலாம்' என்று சாஸ்திரியார் கூறினார். (எனக்கு=குற்றியலுகரம்; தெரியாது=முற்றிய்லுகரம்)

சாஸ்திரியாரைப் பற்றி அவருடைய மாணவராகிய வ.சு.செங்கல்வராயபிள்ளை, '...அதிநிபுணர். மாணவர்களுடைய கண்ணையும் கருத்தையும் தமது கலைப்புலமையால் ஒருங்கே கவரும் ஆற்றல் வாய்ந்தவர். அருமையான பலசெய்திகளை வகுப்பில் சரமாரியாகப் பொழிந்த கொண்டல். இவர் வகுப்பில் தமிழ்க்கூறு ஒரு மணி ஒருநிமிடமாக ஓடிவிடும்' என்று கூறுகிறார்.

ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராக இருந்த டாக்டர் ஜி யூ.போப் அவர்கள்வேலையிலிருந்து விலகி ஓய்வு பெற்றார். தமக்குப்பின் அப்பதவியை வகிக்கத் தகுதியானவர் சாஸ்திரியாரே என்பதை உணர்ந்த போப், சென்னைக் கவர்னரான ஆம்ட்ஹில் வழியே சாஸ்திரியாரின் கருத்தறிய விழைந்தார். சாஸ்திரியார் தமது உடல்நலம் குன்றியுள்ள காரணத்தால் வெளிநாடு செல்ல மறுத்து விட்டார்.

### *இல்வாழ்க்கை*

சாஸ்திரியாரின் பத்தொன்பதாம் அகவையில் அவருக்குப் பழனியில் திருமணம் நடந்தது அவரது மனைவியின் பெயர் முத்து சுபலஷ்மி அம்மாள். சாஸ்திரியாருக்கு, ஆனந்தவல்லி என்ற பெண் குழந்தையும், நடராஜன், சுவாமிநாதன் ஆகிய ஆண்மக்களும் பிறந்தனர்.

### *தமிழ்ப்பணி*

சாஸ்திரியார் பற்பல துறைகளிலும் ஈடுபட்டு ஆக்கப்பணிகள் பல புரிந்துள்ளார். மாணிக்கவாசகரும் ஆதிசங்கரரும் முப்பத்து இரண்டு ஆண்டுகளே வாழ்ந்தனர். அதேபோல் முப்பத்து மூன்று ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்த சாஸ்திரியாரின் தமிழ்ப்பணிகள் நம்மை வியக்க வைக்கின்றன.

சாஸ்திரியாரால் இயற்றப்பட்டு இன்று நமக்குக் கிடைக்கும் நூல்கள் பன்னிரண்டு. அவற்றுள் 'ரூபாவதி அல்லது காணாமற்போன மகள்', 'கலாவதி', 'மானவிஜயம்', 'தனிப்பாசுரத்தொகை', 'பாவலர் விருந்து - முதல்நாள்', 'நாடகவியல்', 'மதிவாணன்', 'தமிழ் மொழியின் வரலாறு' 'ஸ்ரீ மணியசிவனார் சரித்திரம், 'சித்திரகவி விளக்கம்' ஆகிய பத்து நூல்களும் சாஸ்திரியாரின் வாழ்நாளிலேயே பதிப்பிக்கப்பட்டு வெளிவந்தன. 'தமிழ்வியாசங்கள்' 'தமிழ்ப்புலவர் சரித்திரம்' ஆகிய இரண்டு நூல்களும்அவரது மறைவுக்குப் பிறகு பதிப்பிக்கப்பெற்றன.

சாஸ்திரியார் இயற்றி அல்லது இயற்ற நினைத்து கிடைக்கப் பெறாத நூல்கள்; 'குணவதி', 'சீதாபகரணம்', பார்வதீபரிணயம்' 'உமைதிருமணம்' (குமாரசம்பவத்தின் முதல் ஏழு சருக்கத்தின் மொழிபெயர்ப்பு-செய்யுள் நூல்) 'அவ்வைக்காட்சி' (புதுவழியால் யாக்கப்பட்டுள்ளதோர் இனிய செய்யுள் நூல்-மெய்க்கோள் பல விளக்குவது) 'சூர்ப்பணகை' (பிரகசனம் என்னும் ஒரு வகை நாடகம்) 'முத்திராராட்சசம்' (ஏழு அங்கங்களாலாகிய நாடகம்-இந்நாடகத்தின் முதல் அங்கத்தின் முதற்களமும் இரண்டாம் களமும்கிடைத்துள்ளன) 'இன்னுமா?' (கதை) 'இழிசினர் வழக்குரை வரையறை', 'வித்தியா விருத்தி' ஆகிய பத்து நூல்களுமாகும்.

சாஸ்திரியார் இயற்றிய உரைநடை நாடகங்கள் 'ரூபாவதி அல்லது காணமற்போன மகள்' மற்றும் 'கலாவதி' ஆகிய இரண்டு நாடகங்களாகும் 'மானவிஜயம்' செய்யுளால் இயன்ற நாடகம். நாடக இலக்கணங்களை விளக்கும் நூல் 'நாடகவியல்'.

சாஸ்திரியார் பற்பல கவிதைகளும் புனைந்துள்ளார். 'தனிப் பாசுரத் தொகை', 'பாவலர் விருந்து - முதல்நாள்', 'சித்திரகவி விளக்கம்' ஆகிய நூல்கள் இவரது கவிதைப் பணிக்குச் சான்று பகர்வன. மேலும், தம்முடைய நாடகங்களுள் இவர் இயற்றியுள்ள இசைப்பாடல்களும், கவிதைப் பணிகளாகும்.

சாஸ்திரியார் 'மதிவாணன்' என்ற புதினத்தைப் படைத்துள்ளார். 'தமிழ்மொழியின் வரலாறு' என்னும் மொழி ஆய்வு நூல் புனைந்துள்ளார். 'ஸ்ரீமணியசிவனார் சரித்திரம்' என்னும் வாழ்க்கை வரலாற்று நூல் வகுத்துள்ளார்.

இவர் பற்பல நேரங்களில் எழுதிய கட்டுரைகள் 'தமிழ்ப்புலவர் சரித்திரம்' என்றும் 'தமிழ்வியாசங்கள்' என்றும் பதிப்பிக்கப் பட்டுள்ளன.

*பிறபணிகள்*

இவ்வாறு நூல்கள் படைப்பது தவிர, சாஸ்திரியார் பற்பல ஆக்கப்பணிகள் புரிந்துள்ளார். சபாபதி முதலியார் இயற்றியுள்ள 'திருக்குளந்தை வடிவேலன் பிள்ளைத்தமிழ்', 'மதுரை மாலை' ஆகிய நூல்களையும், 'கலிங்கத்துப்பரணி', 'நளவெண்பா' ஆகிய நூல்களையும் பதிப்பித்துள்ளார். 'திருவுத்தரகோசமங்கை மங்களேசுவரி பிள்ளைத் தமிழை'யும், மழவை மகாலிங்க ஐயரின் 'இலக்கணச்சுருக்கத்தை'யும் தாண்டவ ராய முதலியாரின் 'பஞ்சதந்திர'த்தையும் பதிப்பித்தார். தாமும் தம் இயற்றமிழ் மாணவர்களும் இயற்றிய நூல்களையும் சாஸ்திரியார் பதிப்பித்தார். 'நாமகள் சிலம்பு', 'தமிழ்மகள் மேகலை', 'இன்பவல்லி', 'ஞானதரங்கிணி', 'கலைமகள் கலாபம்', மற்றும் 'கலாநிதி' ஆகிய பெயர்களில் பற்பல நூல்களைச் சாஸ்திரியார் பதிப்பித்தார்.

சாஸ்திரியார், தம் சமகால நூலாசிரியர்கள் இயற்றியுள்ள பற்பல நூல்களுக்குச் சிறப்புரைகளும், பாயிரங்களும் வழங்கியுள்ளார்.

மு.சி. பூரணலிங்கம் பிள்ளையுடன் இணை ஆசிரியராக 'ஞானபோதினி' இதழைச் சாஸ்திரியார் தாம் இறக்கும் வரை நடத்தி வந்தார்.

சாஸ்திரியார் தயார் செய்து வைத்திருந்த எட்டாம், ஒன்பதாம் வாசகப்புத்தகங்கள் அவரது மறைவுக்குப்பின் அச்சுவாகனம் ஏறின. சாஸ்திரியார் 'சென்னைச் செந்தமிழுரைச்சங்கம்' என்ற சங்கத்தை நிறுவி, அதன் வழி கல்லூரித் தமிழ்ப்பாடங்களுக்கு உரை எழுதியுள்ளார். நீதிநெறி விளக்கத்தின் முதல் ஐம்பத்தொரு பாடல்களுக்கு உரை வகுத்துள்ளார்.

சாஸ்திரியார் ஆங்கிலச் சொற்களுக்கு ஏற்ற தமிழ்ச் சொல்லாக்கங்களும் செய்துள்ளார்.

1901ஆம் ஆண்டு மதுரைத் தமிழ்ச்சங்கம் தொடங்கப் பெற்றபோது, சாஸ்திரியார் கலந்து கொண்டு சொற்பொழி

வாற்றினார். மேலும் தாம் எழுதும் கட்டுரைகளில், தமிழ்ச்சங்கம் இன்னின்ன துறைகளில் ஈடுபட வேண்டுமெனக் குறிப்பிட்டு வந்தார்.

அ. மாதவையாவின் 'பத்மாவதி சரித்திரம்' பற்றிக் கிறித்தவக் கல்லூரி இதழில் ஆங்கிலத்தில் விமர்சனக்கட்டுரை எழுதியுள்ளார் சாஸ்திரியார்.

1902ஆம் ஆண்டு, கல்லூரிப் பாடத் திட்டத்திலிருந்து தமிழை விலக்குவதற்குச் சென்னைப்பல்கலைக்கழகம் முடிவெடுத்தது. இதை உணர்ந்த சாஸ்திரியார், மு.சி. பூரணலிங்கம் பிள்ளையுடன் சேர்ந்து முயற்சி செய்து இத்தீர்மானத்தைத் தோற்கடித்தார். ஆசிரியர் சங்கத்தில் தமிழ் வென்றது.

1902ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 'செந்தமிழ்' இதழ் தொடங்கப் பெற்ற பொழுது, தமிழின் சிறப்புப்பற்றி 'உயர்தனிச் செம்மொழி' என்ற கட்டுரையை அவ்விதழில் சாஸ்திரியார் எழுதினார். தமிழைச் செம்மொழி என்று முதன்முதலில் மெய்ப்பித்து அறிவித்தவர் வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார்தான்.

### *இறுதிக்காலம்*

எலும்புருக்கி நோய்வாய்ப்பட்டிருந்த சாஸ்திரியார் 1903ஆம் ஆண்டு ஜூன் மாதத்திலிருந்து ஆறு திங்கட்களுக்குக் கல்லூரியிலிருந்து ஓய்வெடுத்துக் கொண்டார். அக்காலத்தில் எலும்புருக்கி நோயைக்குணப்படுத்த மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை.

''அந்தோ! இத்தகைய பெருமை வாய்ந்த புலவருக்குக் கடவுள் நீண்ட ஆயுள் கொடுக்கவில்லை. 1903ஆம் வருடம் அவரது 33வது வயதில் நோய்க்கிரையாகி, நாளுக்கு நாள் தேகம் இருமலினால் மெலிவடைந்து 'ஐயா! இருமல் எம்முடன் பெருமல் (பெருமல் = பெரியமற்போர்) செய்கிறதே!' எனக்கூறி இருமிக் கொண்டே பாடஞ்சொல்லுவார். இறுதிநாள் வரையில் அவர் வீட்டில் தமிழ் முழக்கமே! அவர் பேசுவதை வியந்து கேட்பவர் ஒருபால்; அவர் எழுதின குறிப்புகளைப் பெயர்த்து எழுதுபவர் ஒருபால்; அவர் ஆணையின்படி நூல் எழுதுபவர் ஒருபால்; ஆக அவர் இல்லம் எப்பொழுதும் தமிழ் மகள் குலவி நடமிடு கோயிலாக விளங்கும்'' என்று சாஸ்திரியாரின் மாணவர் வ.சு. செங்கல்வராயபிள்ளை கூறியுள்ளார்.

இறுதிநாளில் டாக்டர் மில்லர் இவர் இல்லத்திற்கு வந்து, சாஸ்திரியாரின் கரங்களைப் பற்றிக் கண்களில் ஒற்றிக்கொண்டார். ''எனது புருவத்து ரோமங்கள் என் கண்களை மறைக்கின்றன. இவ்வாறு வயது முதிர்ந்தும் யான் இன்னும் உயிரோடிருக்கிறேன். உலக இன்பங்களை அனுபவியாத குறுகிய காலத்தே தமிழ்ப்பணி பல செய்த நீர் பல நாள் உலகில் வாழ வேண்டியிருக்க, எமன் உம்மைக்கொண்டு போவது எத்துணைக்கொடுமை'' என்று மில்லர் வருந்தி அழுதார். ஜேம்ஸ்ரஸ்ஸல் (Bursar, Christian College) அவர்கள், ''சூரிய நாராயணா! மனிதனை விடச் சிறந்தவர் (கடவுள்) கைகளில் உன்னை ஒப்புவிக்கிறேன்'' என்று வருந்திக் கூறினார்.

சூரியநாராயண சாஸ்திரியார் 1903ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் இரண்டாம் நாள் திங்கட்கிழமை, தாம் குடியிருந்த லிங்கிச் செட்டித் தெரு இல்லத்தினின்று, தமது முப்பத்து மூன்றாம் அகவையில் இறைவன் திருவடி சேர்ந்தார். மாணவர்களும், ஆசிரியர்களும் ஆயிரக்கணக்காய், சென்னை லிங்கிச் செட்டித் தெருவில் கூடித் துக்கம் மேற்கொண்டனர்.

சாஸ்திரியாரின் மறைவுக்கு வருந்தி, பற்பல இதழ்கள் சாஸ்திரியாரின் தமிழ்ப்பற்றையும், அவர் தமிழுக்காக உயிர் நீத்தமையையும் சிறப்பித்து எழுதின. ஆங்கில நாளேடாகிய 'இந்து' இதழ் சாஸ்திரியாரின் மறைவுக்கு வருந்தி, ''தமிழ் மீது இவர்(சாஸ்திரியார்)கொண்ட காதலினால் அதிகமாக உழைத்ததும், தமிழ் இலக்கியப்படைப்புகளில் இவர் காட்டிய அதிக ஆர்வமுமே இவர் இளம் வயதாகிய முப்பத்து மூன்று வயதில் இறந்தமைக்குக் காரணமாகும். கல்லூரியில் தமிழ்ப் பண்டிதராக விளங்கிய ஒரு சில ஆண்டுகளிலேயே, இவர் மாணவர்களிடம் மொழிப்பற்றை உருவாக்கி, அவர்கள் புதுவகையான நூல்கள் படைப்பதற்குக் காரணமாக விளங்கினார். இவருடைய எழுத்துக்கள் தமிழுலகைச் சார்ந்த அனைவராலும் ஒரே மனதாகப் போற்றப்பட்டன'' என்று எழுதியது.

'விவேக சிந்தாமணி', 'இந்து நேசன்' 'விவேகபாநு', 'ஞான போதினி' ஆகிய இதழ்கள் சாஸ்திரியார் மறைவு குறித்து வருந்தி எழுதின.

கிறித்தவக் கல்லூரி மாத இதழ் சாஸ்திரியாரின் மறைவுக்கு வருந்தி ஒரு குறிப்பு வெளியிட்டது. ''.........தமிழாசிரியர் பதவியை

இக்கல்லூரியில் - அநேகமாகக் கல்லூரி அளவில் மேற்கொண்ட முதல் பட்டதாரி இவரே.....தாம் கற்றுக் கொடுக்கக் கூடிய துறையில் மாணவர்க்கு ஆர்வத்தை ஏற்படுத்துவதே ஓர் ஆசிரியனுடைய வெற்றிக்கு அளவுகோல் என்றால், கடந்த பத்தாண்டுகளில் மாநிலத்தில் இவரைவிடச் சிறந்த ஆசிரியர் வேறு எவரும் இல்லை எனலாம்'' என்று கிறித்தவக் கல்லூரி இதழ் குறிப்பிட்டது.

சாஸ்திரியாரின் இயற்றமிழ் மாணவருள் ஒருவரான வ.சு.சண்முகம்பிள்ளை, சாஸ்திரியாரின் மறைவுக்கு வருந்திக்கூறும் போது, 'தத்துவ சாத்திரத்தில் முதுகலைப் பட்டம் பெற சாஸ்திரியார் பயின்றுவந்தார். அவருடைய இறுதி ஊர்வலத்தில் கண்ணுக்கு எட்டிய தொலைவுவரை மாணவர்களும் ஆர்வலர்களும் அவர் வாழ்ந்த லிங்கிச்செட்டி தெருவில் நிறைந்திருந்தனர்' என்பார்.

வ.சு. செங்கல்வராயபிள்ளை அவர்கள், ''தற்கால நாடகத் தமிழுக்குப் பிதா இவர் தானே. நாடக இலக்கணத்தைத் தமிழ் உலகிற்குத் தந்த புலவர் இவர் தானே! இவர் இயற்றிய கலாவதிக்கு நிகரான நாடகத் தமிழ் நூல் நானிலத்துண்டோ! இவருடைய தனிப்பாசுரத் தொகை போல் இனிப்பான நூலொன்றினிப் பாரிலுண்டோ? இவர்தம் மதிவாண நூலின் செந்தமிழ் போல நெஞ்சிற் பதிவாகும் நூலொன்று வருமோ இனித்தான்? மானவிஜயம் போன்ற தேனமுத நூல்தான் தேடிற் கிடைக்குமோ? எழுபது ஆண்டிருந்த ஒருவர் தமிழணங்கிற்குச் செய்யும் திருப்பணி யெல்லாம் முப்பது ஆண்டில் முடித்த பெருந்தகையல்லவோ? அவர் புகழ் ஞாயிறுள்ளளவும் நானிலத்திலகு மன்றோ?''என்று கூறியுள்ளார்.

சாஸ்திரியாரின் பெருமையை உணர்ந்த திரு.வி.கலியாண சுந்தரனார், ''.....சாஸ்திரியாரால் இயற்றப்பட்ட நூல்கள் தமிழ் அன்னையின் அணிகள். அவைகளுள் ஒன்று 'தமிழ் மொழியின் வரலாறு'. தமிழ் நாட்டில் தமிழ் மொழி வரலாற்றுக்கு வழிகாட்டியவர் சூரிய நாராயண சாஸ்திரியாரென்னும் பரிதிமாற் கலைஞரே. அவர் நீண்ட நாள் உலகில் வாழ்ந்திருந்தால் தமிழ் அன்னை இழந்த அரியாசனத்தில் இவர்ந்திருப்பாள்; முத்தமிழும் ஆக்கம் பெற்றிருக்கும்''என்று கூறுவார்.

# 2
# நாடகமே உலகம்

*நாடகப்பணி*

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்த சூரியநாராயண சாஸ்திரியார் நாடகத் தமிழின் மீது மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். இவருக்கு அமைந்த கல்விப் பயிற்சியும் இதற்கு ஒரு காரணமாயிற்று. வடமொழி, ஆங்கிலநாடக ஈடுபாடு இதற்கு உறுதுணையானது. சாஸ்திரியார் படைத்துள்ள ‘நாடகவியல்’ என்னும் நாடக இலக்கண நூலும் ‘ரூபாவதி அல்லது காணாமற் போன மகள்’, ‘கலாவதி’, ‘மான விஜயம்’ ஆகிய மூன்று நாடகநூல்களும் நமக்குக் கிடைத் திருக்கின்றன. இவற்றைப் பற்றி விரிவாகக் காண்போம்.

சாஸ்திரியார் தம்முடைய ‘தமிழ் மொழியின் வரலாறு’என்னும் நூலில், "ஒழுக்க நிலை வகுக்கப் புகுந்த ஆரியரும் சைனரும் நாடகக் காட்சியாற் காமமே அறிவினும் மிகப் பெருகுகின்றதென்ற போலிக் கொள்கை யுடையராய்த் தமது நூல்களிற் கடியப்படுபவவற்றுள் நாடகத்தையுஞ் சேர்த்துக் கூறினர். அக்காலத்திருந்த அரசர்களுக்குத் துர்ப்போதனை செய்து நாடகத் தமிழைத் தலையெழ வொட்டாது அடக்கி வந்தனர். ஔவையாரும், திருவள்ளுவரும் ஒருங்கே புகழ்ந்த இல்லற வாழ்க்கையையே தீவினையச்சத்தின் பாற்படுத்துக் கூறுஞ் சைனர்கள் நாடகத் தமிழைக் கடிந்தது ஓராச்சரியமன்று" என்று கூறுகிறார்.

பதினேழாம் நூற்றாண்டில் பொது மக்கள் இக்கலைக்குப் புதுவடிவம் கொடுத்தனர். மக்கள் கலையாக மீண்டும் மலர்ந்த நாடகம், பள்ளு, குறவஞ்சி, நொண்டி நாடகம், கீர்த்தனை நாடகம் எனப் பல்வேறு வகைகளாக வளர்ந்தது. இவ்வகை நாடகங்கள் பாடல்களை அங்கமாகக் கொண்டு அக்கால மக்களின் வாழ்வியலை விளக்குவனவாக அமைந்தன.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தெருக் கூத்துக்கள் தலைதூக்கின. நாடகமேடை இல்லாமல் நடிகர் தெருக்களில், வெட்டவெளிகளில், களத்து மேடுகளில் ஆடுவதே தெருக்கூத்து. இந்நூற்றாண்டின் முதற்பகுதியில் ஜமீன்தார்கள், நிலக்கிழார்களின் ஆதிக்கம் ஓங்கியது. மக்களுக்கு இறையுணர்வும் மிகுந்தது. நிலக்கிழார்களின் ஆதரவுடன் இக்கூத்துக்கள் மழை பொழியவும், திருமணம் நிகழவும், மக்கட்பேறு பெறவும் விழாக்காலங்களில் நிகழ்த்தப்பட்டன. இக்கூத்துக்கள் கல்வியறிவு அதிகமற்றவர்களால் நடத்தப்பட்டன. பாமரமக்களால் பெரிதும் விரும்பப்பட்ட இதனைக் கற்றவர்கள் அறவே ஒதுக்கினர். காலப்போக்கில் இவை தரம் குறைந்தனவாக மாறின. நகைச்சுவை என்ற பெயரில் இருபொருள் பொதிந்த உரையாடல்களும் காமச்சுவை மிகுந்த காட்சிகளும் அமைக்கப்பட்டன. காப்பியக் கதைகளும் மனம் போனபடி திரிக்கப்பட்டன.

சாஸ்திரியார் தம்முடைய 'தமிழ்மொழியின் வரலாறு' என்னும் நூலில், ''பண்டிதராயினார் கடிந்து நாடகத்தமிழைக் கைவிடவே, அது பாமரர் கையகப்பட்டு இழிவடைந்து தெருக்கூத்தளவிலே நிற்கின்றது'' என்று குறிப்பிடுவார்.

இக்கால கட்டத்தில் நாடகம் பற்றிய மக்கள் கருத்தினைப் பம்மல் சம்பந்த முதலியார், ''...தமிழ் நாடகங்கள் ஜீவனத்திற்காக அவைகளை ஆடுபவர்கள் கையிற்பட்டு ஹீனஸ்திதியை யடைந்ததாகும். அவர்களில் பெரும்பாலர் நன்னடக்கை யில்லாதவர்களாயும் கல்வி அறிவு இல்லாதவர்களும் துர்மார்க்கர்களாயுமிருந்த படியால் நாடகமாடுவதே நிந்தைக்கு ஆளாயது. ஒருவனை இழித்துச் சொல்லவேண்டியிருந்தால் 'அவன் கூத்தாடியாயிருக்கிறான்' என்று சொல்லத் தக்க ஸ்திதிக்கு வந்துவிட்டது. அக்காலம் ஏகதேசமாய் நடத்தப்பட்ட தமிழ்நாடகங்கள் குலஸ்திரீகள் பார்க்கத்தக்க வகையாய் நடத்தப்படவில்லை என்று உறுதியாய்க் கூறலாம். அன்றியும் மற்றொரு முக்கியமான காரணம், கற்றறிந்தவர்கள் நடத்தத்தக்க நாடகங்கள் இல்லாமையே'' என்று தமது 'நாடகத்தமிழ்' என்ற நூலில் குறிப்பிடுவார்.

1891 ஆம் ஆண்டு தமிழ்நாடக வரலாற்றில் இரு முக்கிய நிகழ்வுகள் நடந்தன. ஆங்கில மொழியறிவு பெற்ற பம்மல் சம்பந்த முதலியார் தமது சுகுண விலாஸ சபையை 1891 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல்நாள் நிறுவினார். அதே ஆண்டு பெ.சுந்தரம்

பிள்ளை செய்யுளால் இயன்ற 'மனோன்மணீயம்' என்னும் நாடக நூலை வெளியிட்டார். அச்சுத் தொழிலின் வளர்ச்சியால் நூல்கள் அச்சிடப்பட்டன. இக்கால கட்டத்தில் சாஸ்திரியாரும் நாடகங்களில் ஆர்வம் செலுத்தி நாடக நூல்களையும் நாடக இலக்கண நூலையும் வெளியிடத்தொடங்கினார்.

### *நாடகவியல் எழுந்தது*

தமிழ் நாடகங்கள் படிக்கவும் நடிக்கவும்பட வேண்டும் என்று சாஸ்திரியார் விரும்பினார். "நாடகத்தை நடித்துக் காட்டுதல் அதனை இயற்றுவோர்க்கு இன்றியமையாத துணைக் கருவியாகும்" என்று நாடகவியல் நூலில் கூறுவார். தமிழ் நாடகம் தெருக்கூத்தாக விளங்கி நலிவதைத் தமது 'தமிழ்மொழியின் வரலாறு' என்னும் நூலில் சாடியுள்ளார். நாடகத்தை வெறும் பொழுதுபோக்குக் கலை நிலையிலிருந்து இலக்கியமாக உயர்த்தப் பாடுபட்டார்.

தமிழ், வடமொழி, ஆங்கில நாடக இலக்கணங்களை அறிந்தவர் களால்தான் சிறந்த நாடகங்களைப் படைக்க இயலும் என்று சாஸ்திரியார் கருதினார். ".. நாடகவிலக்கண மணுத்துணையுமறியாத சில புல்லறிவாளர் தோன்றித் தாமும் நாடக மெழுதுவான் புக்குக் குன்று முட்டிய குரீஇப் போலப் பெரிதுமிடர்ப்பட்டு எழுதியதையும் வெளியிட வெள்கி மாழாந்து திரியா நின்றார். இப்போலிகள் நாடக விலக்கணங்கற்றுத் தருக்கடங்கி யுறுதிகூடுதல் கருதியும், எந்தம் இயற்றமிழ் மாணவர்க்கு நாடகத்தமிழும் அறிவுறுத்தல் கருதியுஞ் சூத்திரமு முரையுமாக நாடக வியலென்று தலைக் குறியிட்டு ஆங்கில கீர்வாண வமைதிகளை யநுசரித்து ஒரு நூல் செய்துளேம்" என்று கலாவதி நாடக முகவுரையில் கூறியிருப்பது சாஸ்திரியாரின் எண்ணத்தை விளக்குகிறது.

பிறமொழிகளில் உள்ள சிறப்பான மரபுகளின் வழியே தமிழை வளர்க்க வேண்டும் என்று சாஸ்திரியார் கருதினார். தமது 'தமிழ் மொழியின்வரலாறு' என்னும் நூலில் "சென்ற சில்லாண்டுகளாக, நாடகத் தமிழ் அறிவுடையோர் சிலரது உதவிகொண்டு தலையெடுத்து வளராநின்றது. இதற்கு வடமொழி நாடகப் பயிற்சியும் ஆங்கில நாடகப்பயிற்சியும் மிகப் பயன்படுபனவாயின. இவ்வாறு புதுவழியிற் புனையப்பட்டு வெளிப்படும் நாடகங்கள் இன்னும் அதிகரித்தல் வேண்டும். இவற்றை யொழுங்கு படுத்துதல் கருதியாம்

'நாடகவியல்' என்றதோர் இலக்கண நூல் செய்திருக்கின்றனம்'' என்று சாஸ்திரியார் கூறுகிறார்.

மேலும் அதே நூலில், ''பழையன கழிதலும் புதியன புகுதலு மாகிய இவ்விரண்டும் பாஷை யியக்கத்திற்குரிய இரண்டு கால் களென மதிக்கப் படுகின்றன. இவ்வுண்மையை யுய்த்துணர்ந்து தமிழ்ப் பாஷையின்கட் செய்ய வேண்டிய சீர்திருத்தங்களை யுடனே மேற்கொள்ளுதல் தமிழ் மக்கள் கடனாம்''என்றும் சாஸ்திரியார் குறிப்பிடுகிறார். அத்தகைய சீர்திருத்த முயற்சியே நாடகவியலாக மலர்ந்தது.

*பதிப்புக்கள்*

1897ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் சாஸ்திரியார் தம்முடைய இயற்றமிழ் மாணவர்களுக்கு நாடகத் தமிழை அறிவுறுத்தும் பொருட்டு இன்றியமையாத சில இலக்கணங்களை மட்டும் இயற்றித் தொகுத்து நூற்றுப் பன்னிரண்டு நூற்பாக்களாக வெளியிட்டார். தமிழக ஆவணக்காப்பகத்தில் இந்நூலின் படி உள்ளது.

பின்னர் இதனை முற்றிலக்கண நூலாக, இருநூற்றெழு பத்திரண்டு நூற்பாக்களாக யாத்து 1901 இல் முழுமுதற் பதிப்பாகச் சாஸ்திரியார் வெளியிட்டார். சாஸ்திரியாரின் மாணக்கரான ந.பலராம ஐயரின் உரையுடன் இந்நூல் 1934 இல் வெளியிடப் பட்டது.

*உரைகள்*

''.....இதனைச் சின்னாண் முன்னரே உரையொடும் வெளியிட விரும்பிய யாம், இன்னுஞ்சில விடயங்களை விரித்தும் விளக்கியுங் காட்டியிருத்தலின் நூல் எதிர்பாராத வண்ணம் பெரிதும் விரிந்துள்ளது. ஆகவே உரையெழுது தற்கருத்து இப்போழ்தத்தின் அறவே யொழிக்கப்பட்டது. இந்நூலினைப் பயன்படுத்துநர் உரையின் இன்றியமையாமை காண்பரேல் அதனை எமக்கு அறிவிப்பாராக. அங்ஙனம் அன்னார் செய்வரேல் நூற்கு உரை கடிதின் எழுதி வெளிப்படுத்தத் துணிவாம்'' என்று நூலின் முகவுரையில் சாஸ்திரியார் குறிப்பிடுகிறார். ஆயின் இந்நூலுக்கு இறுதிவரை சாஸ்திரியார் உரை எழுதவில்லை.

1903 ஆம் ஆண்டு நாடகவியலின் முதல் இரு இயல்களான பொதுவியல்பும் சிறப்பியல்பும் பி.ஏ. தேர்வுக்குப் பாடமாக வைக்கப்பட்டன. எனவே சாஸ்திரியாரின் இயற்றமிழ் மாணாக்கரான ந. பலராம ஐயர் 1902ஆம் ஆண்டு இவ்விரு இயல்களுக்கு மட்டும் உரையெழுதி வெளியிட்டார். அவ்வுரைநூலில் நூலாசிரியர் வரலாற்றை இவர் எழுதியுள்ளார். 1934ஆம் ஆண்டு நூல் முழுவதற்கும் ந. பலராமஐயர் அவர்களே உரையெழுதினார்.

''ஆசிரியர் தமது நூலினையச்சிட்டு முடித்த பின்னர் நூலின்கட் செய்ய வேண்டுமென்று கருதியிருந்த சில திருத்தங்களையும் பாடபேதங்களையும் இப்புதுப் பதிப்பில் உரிய இடங்களில் செய்து அவற்றிற்கேற்ப உரையும் வரைந்துள்ளேன்'' என்று ந. பலராம ஐயர் தமது முன்னுரையில் குறிப்பிடுகிறார்.

### *நூலின் அமைப்பு*

முதற்கண் உரிமையுரையும் அடுத்து, சாஸ்திரியாரின் நீண்ட முகவுரையும், அடுத்து உரையாசிரியர் ந. பலராம ஐயரின் முன்னுரையும் இடம்பெற்றுள்ளன. பாயிரம், நூல் ஆகியவற்றுடன் தொடங்கும் 'நாடகவியல்', பொதுவியல்பு, சிறப்பியல்பு, உறுப்பியல்பு, நடிப்பியல்பு என்ற நால்வகை இயல்களோடு அமைந்துள்ளது.

### *உரிமையுரையும் முகவுரையும்*

சாஸ்திரியார் தமது தமிழாசிரியரான மதுரையம்பதி மகா வித்துவான் சு. சபாபதி முதலியாருக்கு இந்நூலை உரிமையாக்கி யுள்ளார்.

27.12.1901ல் தாம் எழுதிய முகவுரையில் நாடகவியலின் பெயர்க் காரணத்தை, ''காட்சி நூலாகிய நாடகங்களின் இலக்கணங்களை ஒரு சேரத் தொகுத்துக் கூறுதலின் இந்நூல் நாடகவியலென்னும் பெயர்த்தாயிற்று'' என்று கூறுகிறார். வடமொழியில் ரூபகங்கள் என்று கூறுவனவற்றை அடியார்க்கு நல்லார் முதலிய உரையாசிரியர்கள் நாடகங்கள் என்பதால் தாமும் அவற்றை நாடகங்கள் என்றே கூறுவதாக மொழிகிறார்.

நாடகத்தின் தோற்றத்தினை ஆராய்ந்து கூறும் சாஸ்திரியார் நாடக நூல்கள் அனைத்தும் நடிக்கப்படக் கூடியனவாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார். நடிப்பவனின் திறமையாலேயே நாடகம் முழுமை பெறுகிறது என்பது அவர் கருத்து.

நாடகவியல்நூல் எழுதத் தமக்கு உதவிய தமிழ், வடமொழி நூல்களைப் பட்டியலிடுகிறார். பற்பல ஆங்கில நூல்களின் உதவியை நாடியதால், விரிவஞ்சி அவற்றைப் பட்டியலிடவில்லை என்றும் கூறுகிறார். நூல் எழுதிய காரணத்தையும், உரைதேவையென்று பிறர் கருதினால் உரை எழுதப்படும் என்றும் தெரிவிக்கிறார்.

## *உரையாசிரியரின் முன்னுரை*

உரையாசிரியர் ந. பலராம ஐயர், தமது முன்னுரையில் நூலாசிரியர் நாடகவியலை எழுதுங்கால் பிறமொழி இலக்கணங் களை ஆய்ந்து, "....அவற்றின்கண் ஏற்பனவற்றை எடுத்துக்கொண்டு காலதேய வேற்றுமைக்கேற்ப இன்றியமையாத இலக்கணங்களையும் தமது மதிநுட்பத்தாற் கூட்டி முறைப்படுத்திச் செவ்விய திட்ப நுட்பஞ் செறிந்த சூத்திரங்களான் இயற்றியருளினர்" என்பார். தாம் உரை எழுதிய வரலாற்றையும் சாஸ்திரியார் செய்ய நினைத்திருந்த திருத்தங்களைத் தாம் செய்திருப்பதையும் கூறுகிறார்.

## *பாயிரம்*

மரபுக்கேற்ப விநாயகர் வணக்கத்துடன் பாயிரத்தைத் தொடங்கித் தமிழ்க் கடவுளான முருகப்பெருமானை வணங்குகிறார். அடுத்து நாமகள் வணக்கம், நடராசர் வணக்கம், ஞானகுருவாம் தமது தந்தை கோவிந்தசிவனார் வணக்கம் ஆகியன அமைகின்றன. அவையடக்கப்பாவினை அடுத்துத் தான் இந்நூலை இயற்றிய காரணத்தை,

> **"ஆதியி னியன்ற வருந்தமிழ்க் கலையு**
> **ணாடகத் தமிழி னல்லிலக் கணம்பல**
> **காணப் பெறாமை கருத்தினிற் றேறி**
> **இந்நா ணிலைமைக் கேற்ப வடநூற்**
> **பாற்படு மியல்பினு மேற்புலப் புலவோர்**
> **கூறு மியல்பினுங் கொள்ளற் பாலன**
> **கொண்டுரைத் தாமிதைக் கொள்ளுப பெரியோர்"**

என்று கூறுவார். ஆக்கியோன்பெயர் என்பதனுடன் பாயிரம் முடிகிறது.

## *'நாடகவியல்' நூல்*

நாடகவியல் நூல், பொதுவியல்பு, சிறப்பியல்பு, உறுப்பியல்பு, நடிப்பியல்பு என்று நான்கு பகுதிகளாக அமைந்துள்ளது.

## *பொதுவியல்பு*

பொதுவியல்பு நூற்று ஏழு நூற்பாக்களைக் கொண்டுள்ளது. கதை, நாற்பொருள், சந்தி, சுவை, பொருத்தம், நடை, கவிகூற்று, பாத்திரம் ஆகிய எட்டுப் பிரிவுகளை இதன்கண் ஆசிரியர் விளக்குகிறார். பொருத்தம் என்பதனை விளக்கும்போது,

**"பொருத்த மென்ப தொற்றுமை யுடைமைய ஃ**
**திடனுங் காலமுஞ் செயலு மெனமூ**
**விதப்படு மென்பர் மேற்றிசை வாணர்"**

(நூ 61)

என்பார். இதனை முதல், கரு, உரி என்றும் கூறலாம். இஃது அரிஸ்டாடில் கூறிய Unity of place, time and action. இந் நூற்பாவால் குறிக்கப்படும் மேற்றிசை வாணர் என்பவர் யவனர்.

பாத்திரங்களின் வகை, பிரிவுகள் ஆகியவற்றை விளக்கியபிறகு, கதையின் முடிவு தீப்பொருளிறுதியாகவும் அமையலாம் என்கிறார்.

**"தீப்பொரு ளிறுதி செப்புங் காலை**
**நாடகத் தலைவ னவிலருந் தீமை**
**யடைத லன்றி யாருயி ரிழத்தலு**
**மறைவதென் றுரைத்தன ராங்கில மொழியோர்"**

(நூ. 112

நாடகம் இயற்றமிழாகும் என மொழிந்து பொதுவியல்புக்குரிய புறனடையுடன் பொதுவியல்பை நிறைவு செய்கிறார்.

*சிறப்பியல்பு*

சிறப்பியல்பை ஐம்பத்தாறு நூற்பாக்களால் விளக்குகிறார். சிறப்பியல்பு, சாதி, உபசாதி, ஒழிபு என்ற மூன்று உட்பிரிவுகளாக விளங்குகிறது.

ஒழிபு என்ற பகுதியுள் நாடகத்தின் பற்பல வகைகளை விளக்குகிறார். ஒரு நாடகத்துள்ளே மற்றொரு நாடகம் வருவதை உள்நாடகம்' என்பார் Trilogy என்ற முந்நாடக வகைக்குப் பல கிரேக்க நாடகங்கள் எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. இதனை,

**"ஒருபெரு விடயத் துற்றிடு நல்ல**
**முதலிடை கடையெனு மூன்று பகுதியுந்**
**தனித்தனி மூன்று நாடக மாகக்**
**கோவைப் படுத்துக் கூறலு முண்டதை**
**முந்நா டகமென மொழிந்தனர் மேலையோர்"**

(நூ. 162)

என்று கூறுவார். சிறப்பியல்பிற்குரிய புறனடையுள், "மதிப் புலவாணர் கூறின கொண்டு கூறா கொளலே" என்று முடிப்பார்.

*உறுப்பியல்பு*

உறுப்பியல்பு ஐம்பது நூற்பாக்களைக் கொண்டது. நாடகத்தின்கண் பொருந்திய பகுதிகளின் பண்பைக் கூறுவது உறுப்பியல்பு. அது வாழ்த்து, நடாத்துநர், முன்னுரை, குறிப்பு, அங்கம், களம், கூற்று, கூத்து, பின்னுரை, ஒழிபு ஆகிய பத்துப் பிரிவுகளின் வழி விளக்கப்படுகிறது. உறுப்பியல்பிற்குரிய புறனடையுடன் உறுப்பியல்பு நிறைவு பெறுகிறது.

*நடிப்பியல்பு*

நடிப்பியல்பு நாற்பத்தொன்பது நூற்பாக்களைக் கொண்டுள்ளது. மெய்ப்பாடுகளின் இயல்பு விளங்கவும், விறல் காண்போருக்குப் புலப்படுமாறும், நாடகப் பாத்திரத்துடன் நடிகன் ஒன்றுபட்டு, சுவைக்குத்தகுந்த அவிநயம்காட்டி, நாடகச்சாலையை அழகுற அமைத்து, ஆராயத்தக்க பாவகைகளுடன் நடிப்பதை நடிப்பியல்பில்

கூறுகிறார். நடிப்பியல்பு மெய்ப்பாடு, விறல், ஒற்றுமை, அவிநயம், நிலை, நாடகசாலை ஆகிய ஆறு உட்பிரிவுகளுடன் விளங்குகிறது. பொதுவாகப் புதுமைகளை வரவேற்கும் சாஸ்திரியார், இடக்கராக வரும் புதுமைகளை விலக்குகிறார்.

**"இன்னிதழ் சுவைத்த லிணைவிழைச் சோடு**
**மெண்ணெ யாட்டுமற் றிடக்க ரெல்லா**
**மெடுத்துக் காட்டும் வழக்கா றில்லை"**

(நூ. 255)

நடிப்பியல்புக்குரிய புறனடையோடு நடிப்பியல்பு முடிகிறது. இறுதியாக, நாடகவியலுக்குப் புறனடை அமைத்து நிறைவு செய்கிறார் சாஸ்திரியார்.

## நாடகவியலுள் மேற்கோள்கள்

தமிழ் இலக்கண, இலக்கியப் பரப்பில் ஆழ்ந்த பயிற்சியுடைய சாஸ்திரியார், சில நூற்பாக்களை மேற்கோள் நூற்பாக்களாக அமைத்துள்ளார். ஏழு நூற்பாக்கள் முழுமையாக எடுத்தாளப் பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக,

**"கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும்**
**உணர்வுடை மாந்தர்க் கல்லது தெரியின்**
**நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே"**

(நூ. 256)

நடிப்பியல்பில் அவிநயத்தின் சிறப்பை விளக்கும் இந்நூற்பா, தொல்காப்பிய மெய்ப்பாட்டியற் புறனடைச் சூத்திரமாகும். பதினொன்று நூற்பாக்களைப் பகுதி நூற்பாக்களாக அமைத்துள்ளார் சாஸ்திரியார். எடுத்துக்காட்டாக, நடிகன் பாத்திரத்தோடு ஒன்றி நடிக்க வேண்டும் என்று கூறும்போது

**"..........**
**அவனே தானே யாகிய அந்நெறி**
**ஏகனாகி........."**

(நூ. 233)

என்று சிவஞானபோதப் பத்தாம் சூத்திரப் பகுதியை மேற்கோளாக எடுத்தாண்டுள்ளார்.

## *நாடகவியலுள் மும்மொழி நாடக இயல்புகள்*

சாஸ்திரியார் தமிழ், வடமொழி, ஆங்கில நாடக இயல்புகளைக் கலந்து அவர் வாழ்ந்த காலத்திற்குத் தக நூலை அமைத்துள்ளார்.

தமிழில் கிடைக்கப்பெறும் நாடகம் பற்றிய ஆதாரங்களை ஆய்ந்து சாஸ்திரியார் பயன்படுத்தியுள்ளார். பொதுவியல்பில் மூவகைக் கதையை யோனி என்பார். இஃது அடியார்க்கு நல்லாரின் சிலப்பதிகார உரையில் கூறப்பெறும் விளக்கமே. தமிழ்ப்பாடல் இயல்புகளைத் தழுவியே இசைப்பாடல்கள் பற்றிய நூற்பாக்களை அமைத்துள்ளார். வீரசோழிய உரையாசிரியர் பெருந்தேவனார் வழியில் சந்தி வகைகளை உவமை காட்டி விளக்குவார். சிறப்பியல்பில் நாடகச் சாதி வகைக்கு உருவகம் என்று பெயர் பொருந்தும் காரணத்தைத் தண்டியலங்கார நூற்பாவால் விளக்குவார். நடிப்பியல்பில் அரங்கு பற்றிக் குறிப்பிடும்போது சிலப்பதிகார அரங்கேற்று காதையைக் கருத்தில் கொண்டுள்ளார். உறுப்பியல்பும் நடிப்பியல்பும் பெரும்பாலும் தமிழ்நாடக இயல்புகளைக் கொண்டுள்ளன.

வடமொழி நாடகவியல்புகளைப் பெரிதும் தழுவியே நாடகவியல் அமைக்கப்பட்டுள்ளது. வடமொழி மரபில் சமநிலையையும் சேர்த்து ஒன்பான் சுவைகளாகக் கூறுகிறார். தலைமக்கள் இலக்கணமும் அம்மரபிலேயே அமைந்துள்ளது. நாடகத்தைப் பிராமண, அரச, வணிக, வேளாள வகுப்புகள் எனப்பிரிப்பதும் நாடகச் சாதி வகை பத்தும், உபசாதிவகை பதினெட்டும் வடமொழி மரபே. மாநாடகமும், விருத்தி வகைகளான நான்கும் அரங்கில் நடித்துக்காட்டத் தகாதவை என்பதும் வடமொழி மரபே. பொதுவியல்பும் சிறப்பியல்பும் பெரும்பாலும் வடமொழி நாடக மரபுகளைக் கொண்டுள்ளன.

கிரேக்க நாடகப் பண்புகளால் வளர்ந்த ஆங்கில நாடக இயல்புகளைச் சாஸ்திரியார் ஆங்காங்கே மேற்கொண்டுள்ளார். ஆங்கிலமொழிக்குரிய பண்புகளை எடுத்தாளும் போது ஆங்கில மொழியோர் என்றும் கிரேக்க நாட்டுக் கோட்பாடுகளைப் பின்பற்றும் போது மேற்றிசைவாணர் என்றும் குறிக்கிறார். மூவகைப் பொருத்தம்,

முந்நாடகம், களம் பற்றிய விளக்கம் ஆகியன கிரேக்க நாடக மரபு. தீப்பொருள் இறுதியின் இலக்கணத்தை ஆங்கில மொழியோர் வழியில் அமைத்துள்ளார்.

நாடகவியல் ஒரு முன்னோடியாகத் திகழ்கிறது. தமிழில் நாடக இலக்கணநூல்கள் கிடைக்கப்பெறாத நிலையில் நாடகவியல், நூற்பா வடிவில் அக்குறையைத் தீர்க்கிறது. நாடகவியல் நூல் வெளியான பிறகு, சாஸ்திரியாருடைய இயற்றமிழ் மாணவர்கள் இருபது நாடகங்கள் வரை படைத்துள்ளனர்.

தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மும்மொழிப்புலமை காரணமாகச் சில புதுமைகளையும் சாஸ்திரியார் புகுத்தியுள்ளார். நாடகத்திற்குத் துன்பியல் முடிபு அப்படிப்பட்ட முயற்சியே. துன்பியல் முடிவுக்கு அரிஸ்டாடில்கூறும் சில விதிகளை இவர்கொள்ளவில்லை. அங்கத்தைக் களமாகப் பிரிப்பது, முந்நாடகம் பற்றிய இலக்கணம் ஆகியன தமிழுக்குப் புதியன.

சாஸ்திரியார் அவர்காலத்தில் நாடகக் கலையாக விளங்கிய தெருக்கூத்தினைத் தமது இலக்கணத்தில் சேர்க்கவில்லை. "தமிழர் களிடத்தில்லாதிருந்த அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற நால்வகைச்சாதி முறையை மெல்லமெல்ல நாட்டி விட்டனர்" என்று வடமொழியாளரைத் தமது 'தமிழ் மொழியின் வரலாறு' எனும் நூலில் சாடும் சாஸ்திரியார், நாடகச்சாதி நால்வகை என்று கூறும்போது அடியார்க்குநல்லார் உரையையே மேற்கொள்கிறார்.

நாடகவியல் பெரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்தாததற்குப் பின்வரும் காரணங்களைக் கூறலாம். மௌனப்படங்களினால் பாதிப்புக்குள்ளான தமிழ் நாடக உலகம், பேசும்படம் மற்றும் தொலைக்காட்சி ஆகியவற்றால் பெரிதும் பாதிக்கப்பட்டது. இருபதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட 'தனிமனிதவாதக் கொள்கை' யின் சூழலில் இலக்கணங்கள் பயனற்றுப் போயின. கவிதை தொடங்கி நாடகம் வரை இதன்தாக்கம் பரவியது. இலக்கியப் படைப்புகளில் உருவத்திற்கு (Form) மதிப்புக் குறைந்து உள்ளடக்கத்திற்கு (Content)மதிப்புப் பெருகியது இன்றைய சிறந்த எழுத்தாளர்களும் இலக்கியத்தின் பிறவகைமைகளில் செலுத்தும் ஆர்வத்தை நாடகத்தின் மீது காட்டவில்லை.

## ரூபாவதி அல்லது காணாமற் போன மகள்: 'ரூபாவதி' பதிப்பு

*வரலாறும் அமைப்பும்*

சாஸ்திரியார் தம்முடைய இருபத்து ஐந்தாம் வயதில் இந் நாடகத்தை இயற்றினார். சாஸ்திரியாரால் வெளியிடப்பட்டு இன்றுவரை நின்று நிலவும் பத்துநூல்களுள் இதுவே முதன் முதல் படைக்கப்பட்டது.

பம்மல் சம்பந்த முதலியார் 'யான்கண்ட புலவர்கள்' என்ற தம்முடைய நூலில், 'கிறித்துவ கலா சாலையில் படித்துக் கொண்டிருந்த சில மாணவர்கள் தங்கள் நண்பர்கள் சிலரைச் சேர்த்துக் கொண்டு தாங்களும் ஒரு நாடகசபை ஏற்படுத்தினர். அவர்கள் நம் சாத்திரியாரிடம் போய்த் தாங்கள் ஆடுதற்கு ஒரு புதிய நாடகம் எழுதிக் கொடுக்கும்படி வேண்ட அதற்கிசைந்து சாத்திரியார் ரூபாவதி என்னும் நாடகத்தை எழுதிக் கொடுத்தார். அன்றியும் அந்நாடகத்தில் தாமே கதாநாயகியாகப் பாகம் எடுத்துக் கொண்டு மேடையின்மீது நடித்தார்' என்று கூறுவார்.

ஆனால் நாடகவியலுக்கு உரை வகுத்த ந.பலராம ஐயர் அவர்கள், 'முத்தமிழினுள் ஈற்றின்கண்ணதாய நாடகத் தமிழிற்கு இலக்கியங் காணலரிதானமையான் ஆங்கில சமஸ்கிருத நாடகங்களை யாய்ந்து நாடகத்தமிழ் நூல்களியற்றுவாராயினார்' என்பார்.

அக்கால மரபுக்கு ஒப்ப 'ரூபாவதி அல்லது காணாமற்போன மகள்' என்று நாடகத்திற்கு இருபெயர் இடப்பட்டுள்ளது.நூல்களுக்கு இருபெயர் இடும்நிலை அக்காலத்தில் நிலவியது. 'இந்துமதி அல்லது கற்பரசி', 'ஆபத்துக்கிடமான அபவாதம் அல்லது கமலாம்பாள் சரித்திரம்' _ போன்றவற்றிலும் அவ்விருபெயரிடும் மரபு வெளிப்படுகிறது.

'ரூபாவதி' முதற்பதிப்பு 1895 ஆம் ஆண்டு வெளிவந்தது. இந்நாடகத்தைச் சென்னை உயர்நீதி மன்றத்து நீதிபதியாக விளங்கிய சர்.எஸ். சுப்பிரமணிய ஐயர் அவர்களுக்கு உரிமையாக்கினார் சாஸ்திரியார். இரண்டாம் பதிப்பு 1902 ஆம் ஆண்டு வெளியாயிற்று. பிறகு வெளிவந்த பதிப்புகளெல்லாம் 1902ஆம் ஆண்டுப் பதிப்பை அப்படியே வெளியிட்டன. முதற்பதிப்பில் இருந்து இரண்டாம் பதிப்பில் இல்லாதவை, சேஷகிரி சாஸ்திரி, பி. சுந்தரம்பிள்ளை,

வி.கனகசபை பிள்ளை வெங்கடராயசாஸ்திரியார், ஆகியோர் ஆங்கிலத்தில் எழுதிய கருத்துரைகளும்(Opinions) சபாபதி முதலியார், சின்னசாமிப்பிள்ளை, சண்முகம்பிள்ளை, கோபாலாசாரி, சீனிவாச ஐயங்கார், பலராம ஐயர், சித்தூர் சுப்பிரமணியாசாரியார் ஆகியோர் வழங்கிய சிறப்புப் பாயிரங்களுமாகும். மேலும் சாஸ்திரியார் இரண்டாம் பதிப்பின் முகவுரையில், "முதற்பதிப்பிற் போலாது இப்பதிப்பிற் பாத்திரங்களின் இயல்புகட்கேற்ற சொல்வழக்கும் நடைவேறுபாடும் சிற்சில திருத்தங்களும் புதிய செய்யுட்களும் அமைக்கப்பட்டுளவாமாறு யாவருங் கண்டு போற்றுதற் குரியது. சிற்சில செய்யுட்களிற் பாடபேதங்களுஞ் செய்திருக்கின்றனம். பலவகையினும் இந்நாடகம் எமது நாடகவியலோடு ஒத்தியங்குமாறு காண்க"என்று குறிப்பிடுகிறார். எனவே 'நாடகவியல்' வெளி வந்த நிலையில் 'ரூபாவதி'யின் இரண்டாம் பதிப்பில் அதற்கொப்பச் சில மாறுதல்களைச் செய்துள்ளார் சாஸ்திரியார்.

இந்நாடகம் 1895 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் பதினைந்தாம் நாளன்று சென்னை வித்தியாபிமான சங்கத்தாரால் அரங்கேற்றப் பட்டது. அப்போது சாஸ்திரியாரே கதாநாயகி வேடம் ஏற்று நடித்தார்.

முதற்பதிப்புக் கிடைக்கப் பெறவில்லை. பிரிட்டிஷ் அருங் காட்சியகத்தின்(The British Museum) 1909 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட நூல்களின் பட்டியலில் இந்நூலின் முதற்பதிப்புக் குறிப்பிடப்பட்டுள்ளது. நமக்குக் கிடைக்கும் இரண்டாம் பதிப்பில் எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை அவர்களின் நீண்ட ஆங்கில முன்னுரை அமைந்துள்ளது. 'உயர்ந்த கலையாகிய நாடகக்கலை, படித்தவர்கள் அதில் கவனம் செலுத்தாததால் நாடோடிகளின் கைகளில் சிக்கித்தரம் தாழ்ந்தது. அவர்கள் இராமாயணம், பாரதம், கந்தபுராணம் ஆகியவற்றையே நாடகக் கருவாகக் கொண்டனர். தரம் குறைந்த இருபொருள் பொதிந்த நகைச்சுவை கொண்ட அந்நாடகங்கள் இலக்கியத்தரம் வாய்ந்தவை அல்ல. அவை இலக்கிய அந்தஸ்தைப் பெறவில்லை. மிகச் சிறந்த மனோன்மணீயத்தைக கவிதையில் படைத்தார் சுந்தரம் பிள்ளை; சாஸ்திரியார் 'ரூபாவதி'யை உரைநடையில் இயற்றியுள்ளார். வேறுபாடு அவ்வளவுதான்' என்று கூறி, ரூபாவதி கதையை விரிவாக எழுதிச்செல்வார். அடுத்து சாஸ்திரியாரின் முகவுரை அமைந்துள்ளது. அதன்பின் பாயிரம் என்ற

பகுதியுள் விநாயகர், சுப்பிரமணியர், நாமகள், நடராசர் வணக்கங்கள் இடம்பெறுகின்றன.

'ரூபாவதி' ஐந்து அங்கங்கள் கொண்ட நாடகமாக உள்ளது. முதல் அங்கம் ஐந்து களங்களும் இரண்டாம் அங்கம் மூன்று களங்களும் எஞ்சிய மூன்று அங்கங்கள் ஒவ்வொன்றும் ஆறுகளங்களும் கொண்டு விளங்குகின்றன. பின்னுரை, பரதவாக்கியம், வாழ்த்து ஆகியவற்றுடன் நாடகம் நிறைவு பெறுகிறது.

### *'ரூபாவதி' நாடகத்தின் கதை*

சூரசேநவர்மன் என்னும் சேரமன்னன் பாண்டிய அரசனைப் போரில் வென்று காட்டிற்குத் துரத்தி விடுகிறான். பாண்டியன் மகன் சுந்தராநந்தனைக் காவலில் வைக்கிறான். பூஞ்சோலைக்குச் செல்லும் சுந்தராநந்தன், சேரனின் மகள் ரூபாவதியைக் காண, இருவரும் காதல் வசப்படுகின்றனர். ரூபாவதியின் உதவியால் சிறையிலிருந்து தப்புகிறான் சுந்தராநந்தன். ஆண்வேடம் பூண்ட ரூபாவதியுடன் சுந்தராநந்தன் சோழநாடு செல்கின்றான். சேரனுக்கும், பாண்டிய சோழர்க்கும் போர் தொடங்க, சேரன் சமரசம் செய்து கொள்கிறான். ஆண்வேடத்தைக் களைந்த ரூபாவதிக்கும் சுந்தராநந்தனுக்கும் மண வினை முடிக்க முயற்சி மேற்கொள்ள நாடகம் இனிதே நிறைவு பெறுகிறது.

இந்நாடகத்துள் கதாபாத்திரங்களின் பெயர்களே அவர்களுடைய குணத்தையும் செயல்பாடுகளையும் பற்றிய விளக்கத்தைத் தந்து விடுகின்றன. டாக்டர் மில்லர் அவர்களிடம் ஷேக்ஸ்பியர் நாடகங்களைக் கற்றதன் பாதிப்பு இந்நாடகத்துள் வெளிப்படுகிறது. முதல் சந்திப்பிலேயே காதல் தோன்றுதல், பெண், ஆண்வேடம் பூண்டு வருதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். பாத்திரங்களின் தன்மைக்கேற்ற மொழிநடையைச் சாஸ்திரியார் கையாண்டுள்ளார். புலவர் பேசுவது செந்தமிழ் நடையிலும் சேவகன்பேசுவது வழக்குத் தமிழ் நடையிலும் அமைந்துள்ளது. இந்நாடகத்துள் வடமொழிச் சொற்களின் கலப்பு அதிகமாக உள்ளது. கர்நாடக இசையின் அடிப்படையில் பல கீர்த்தனைகளையும் வரிப்பாடல்களையும் இயற்றிச் சேர்த்துள்ளார் சாஸ்திரியார். இந்நாடகத்தின் பின்னுரையில், சுந்தராநந்தன்' கூற்றாகச் சாஸ்திரியார் ''உளத்தோடு உளஞ்சென்று

ஒன்றலே காதல்! அதுவே மெய்யன்பு! அதுவே உண்மைநேசம்! இல்வாழ்க்கையே நல்லொழுக்கங் கற்பிக்கும் உத்தமக் கல்லூரியாம். ஆகவே அகிலத்துள்ள ஆன்மகோடிகளை வெறுத்துத் துறவறம் பூண்டு உடல்வற்றி மெய்ந்நிலை தவறி வாழுநர் போலாது, அன்பினாற் கட்டுண்டு இல்லறம் பூண்டு மனித சமூகத்தில் இருந்து பிறர்க்குப் பயன்பட்டு வாழ்வேமாக'' என்று தம் கருத்தைப் பகர்கிறார். இந்நாடகம் இலக்கியச்சுவையோடு விளங்கிப் படிப்பதற் கேற்ற நாடகமாக உள்ளது.

## கலாவதி

### *கலாவதி பதிப்பு வரலாறும் அமைப்பும்*

சாஸ்திரியார் 'கலாவதி' நாடகத்தின் முகவுரையில், ''யாமிதற்கு முன்னர் ''ரூபாவதி அல்லது காணாமற்போன மகள்'' என்றொரு நாடகமியற்றி யச்சிட்டு வெளியிட்டிருக்கின்றனம். அது மேற்புல விஞ்ஞானிகள் முறையினைப் பெரிதுமடுத்துப் புனையப்பட்டுள்ளது. அதனை நல்லறிவுடைய நாவலர் பலர் அங்கீகாரம் செய்தனரன்றியுந் தாமவ்வாறு செய்ததற்கு அறிகுறியாகச் சிறப்புக்கவிகளுந் தீட்டிவிடுத்துளர். அஃதெமது ஊக்கமெழுப்பியதனானும், தமிழ் மொழியின் மீதெமக்குளவார்வத்தினானும், எந்தம் நண்பர்யாவரும் வடநூன் முறைகளைப் பெரிது மனுசரித்து நாடகம் புதுவதொன்று புனையுமாறு ஏயினமையானும், இறைவன் திருவருளை முன்னிட்டு அவ்வாறேயிந்நாடக மெழுதப் புகுந்தனம்''என்று கூறுகிறார். இதனால், 'ரூபாவதி' நாடகம் மேற்புல அறிஞர்தம் வழியிலும், 'கலாவதி' நாடகம் வடநூன் முறையிலும் இயற்றப்பட்டது என அறியலாம். மேலும் இவருக்குள்ள தமிழார்வமும் புலனாகின்றது.

அதே முகவுரையில் ''....நாடகவியலென்று தலைக்குறியிட்டு ஆங்கில கீர்வாண வமைதிகளை யநுசரித்து ஒரு நூல் செய்துளேம். அஃதச்சிட்டு வெளிவரும் பருவத்திலுள்ளது. அன்ன இலக்கணத்திற்கு இலக்கியமாகவே இக்கலாவதி நாடகமுமியற்றப் பட்டது'' என்றும், குறிப்புரையும் தாமே எழுதிச் சேர்த்திருப்பதாகவும் சாஸ்திரியார் குறிப்பிடுகிறார். எனவே, 'நாடகவியல்' நூல் வெளிவரும் முன் 'கலாவதி' வெளிவந்தது என்பதும், நாடக வியலுக்கு இலக்கியமாகவே கலாவதி எழுந்தது என்பதும் தெளிவாகிறது.

''.......முற்றுஞ்செய்யுளாக யாக்கப்பட்டுப் பாத்திரங்களினேற்றந் தாழ்வு கருதாது யாண்டு மொரே தன்மைத்தாய நடையினையுடைத்தா யுலக வியல்போடு மாறுபட்டியலுறும் மனோன்மணீயமும், மரையிலை வெண்புனற் சிஃறுளி போல முன்னோர் பாக்களை யாங்காங்குப் பெய்யப் பெற்றமையன்றி வேறு செய்யுளென்பது மருந்துக்குமின்றி முற்றும் வசனமாயியன்றுள லீலாவதி சுலோசனையும் போலாது இதன்கண்ணே பாத்திரங்களின் உயர் விழிவுகட்கு ஏற்றவாறே நடையமைதியும் அவ்வவர்தம் இயல்பாய சொற்களுமாங்காங்குச் செறிந்து கிடக்கும். அவைகண்டு பிழையெனக் கற்றோர் மருளாது வனப்பென மதித்துப் பாராட்டுகிற்பார்'' என்றும் முகவுரையில் சாஸ்திரியார் கூறுகிறார். தாம் 'கலாவதி' நாடகம் இயற்றியதற்கு உரிய காரணத்தைத் தம் முகவுரையில் விரிவாகச் சாஸ்திரியார் கூறுகிறார்.

'கலாவதி' நாடகம் 1897ஆம் ஆண்டு சாஸ்திரியாரால் இயற்றப்பட்டது. 1897ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் இரண்டாம் நாள் அரங்கேற்றப்பட்டது. சாஸ்திரியார் 1898ஆம் ஆண்டு வெளிவந்த முதற் பதிப்பின் முகவுரையில், ''இந்நாடகம் சென்ற துன்முகிவருடம் பங்குனி மாதம் 21ஆம் தேதி வெள்ளிக்கிழமையன்றிரவு சென்னை வித்வந்மநோ ரஞ்சநீ சபையோராற் சென்னை விசயை பொதுசன மண்டபத்து மிக்க சிறப்புடன் நடித்துக்காட்டி யரங்கேற்றப்பட்டது'' என்பார். இந்த நாடகத்திலும் சாஸ்திரியார் ஏற்ற வேடத்தில் நடித்துள்ளார். முதற் பதிப்புக்கும் தற்பொழுதுள்ள பதிப்பிற்கும் இருவேறுபாடுகள் உள. முதற்பதிப்பில் உரிமையுரை, ஆங்கில முன்னுரை, சிறப்புக்கவிகள் என்று அமைந்துள்ளது. அப்பதிப்பில் சாஸ்திரியார் நூலின் இறுதியில் குறிப்புரையைச் சேர்த்திருந்தார். பிறகு வெளிவந்த பதிப்புகளில் உரிமையுரை, சிறப்புக்கவிகள், ஆங்கில முன்னுரை என்ற வரிசையில் அமைந்துள்ளன. மேலும் அப்பதிப்புகளில் குறிப்புரை அந்தந்தப் பக்கங்களிலேயே அச்சிடப் பட்டுள்ளது.

'கலாவதி' நூலின் முதலில் உரிமையுரை உள்ளது. நூலை இராமநாதபுரம் அரசர் பாஸ்கர சேதுபதிக்குச் சாஸ்திரியார் உரிமையாக்கியுள்ளார். அடுத்து, சிறப்புக்கவிகள் என்ற தலைப்பில் பிரமஸ்ரீ.உ.வே. சாமிநாதையரவர்கள், தஞ்சைச் சதாவதானம் சுப்பிரமணிய ஐயரவர்கள், மதுரை மகாவித்துவான் சபாபதி

முதலியாரவர்கள், சென்னைத்'திருமயிலைவித்துவான் சண்முகம் பிள்ளையவர்கள் ஆகியோர் கூறிய கவிகள் உள்ளன. அடுத்து, ஆங்கிலத்தில் முன்னுரையை டி. இராமகிருஷ்ணா என்பவர் வழங்கியுள்ளார்.

இதனையடுத்து, சாஸ்திரியாரின் நீண்ட முகவுரை அமைந்துள்ளது. முதலில் 'கலாவதி' நாடகக் கதையைக் கூறுகின்றார். பிறகு 'கலாவதி' நாடகம் படைத்ததற்கான காரணத்தைக் கூறுகிறார். அடுத்து, நாடகத்துள் அமைந்துள்ள சிறப்புக்களைக் கூறுகிறார். வடமொழி விருத்தங்களும் செந்தமிழ் யாப்பு விகற்பங்களும், சொல்லணிகளும் பொருளணிகளும் சித்திரகவிகளும் பாடல்களும் கீர்த்தனங்களும் அமைந்துள்ளன என்று கூறி, தாம் மேற்கோளாக எடுத்தாண்ட நூல்களையும் குறிப்பிடுகிறார். 'நாடகவிய'லோடு எவ்வாறு இந்நாடகம் ஒத்து இயங்குகிறது என்பதைச் சுட்டுகிறார். இந் நாடகத்தை உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்று வழங்கும் சாஸ்திரியார் இறுதியாக,

**"தொன்று தோன்றிய யாவவை தூயன**
**வின்று தோன்றிய யாவவை தீயன**
**வென்றி யம்புமி யல்புண ராமக**
**னன்றி மூதறி வாள ரறைவரோ?"**

என்று தம்கொள்கையைக் கூறுவார்.

அடுத்து வரும் பாயிரம் என்பதில், விநாயகர், சுப்பிரமணியர், நாமகள், நடராசர் வணக்கப்பாடல்களும் அவையடக்கப் பாடலும் குறள்வெண்பாக் கட்டுரையும் அமைந்துள்ளன. பிறகு முன்னுரை என்ற பகுதியில் சூத்திரதாரன் தோன்றிப்பாடுகிறான்.; அவன் 'நடி'யுடன் உரையாடுகிறான். அதன்பின் 'கலாவதி' நாடகம் தொடங்குகிறது.

'கலாவதி' நாடகம் ஏழு அங்கங்களுடன் விளங்குகிறது. ஒவ்வோர் அங்கமும் பல களங்களாக விரிகின்றன. இதில் 219 இயற்றமிழ்ப் பாடல்களையும் 47 மேற்கோள்பாடல்களையும் 17 இசைப்பாடல்களையும் சாஸ்திரியார் அமைத்துள்ளார். இறுதியில் வாழ்த்துடன் நாடகம் முடிகிறது.

*'கலாவதி' நாடகத்தின் கதை*

சயதுங்க சோழனின் மகள் கலாவதி. மனைவியை இழந்த சோழன், மநோமோகிநி என்னும் கணிகையின் காமவலையில் சுகசரீரன் என்னும் தீயோனால் வீழ்கிறான். பாண்டிய நாட்டு இளவரசன் சிதாநந்தன். சோழநாட்டுக்கு வரும் சிதாநந்தனும் கலாவதியும் பூஞ்சோலையில் சந்தித்துக் காதல் கொள்கின்றனர். 'தன் நாட்டிற்கு வரும் பாண்டிய வீர்கள் தன்னுடன் மற்போர் புரிய வேணடும்; அவர்கள் தோற்றால் உயிரை இழக்க வேண்டும்' என்ற சயதுங்கனின் ஆணைவழி, சிதாநந்தன் சயதுங்கனுடன் மற்போர் செய்து, வெல்கிறான். சுகசரீரன், குலாந்தகன், மநோமோகிநி ஆகியோரின் சூழ்ச்சிகளை முறியடித்து, பல திருப்பங்களுக்குப் பிறகு, கலாவதியின் கரம் பிடித்துச் சோழ அரசனாகச் சிதாநந்தன் அரியணை ஏறுகிறான். நாடகம் இனிது முற்றப் பெறுகிறது.

''ஆசிரியர் தமது இலக்கிய ஆக்கத் திறமையை முற்றிலும்காட்டி இயற்றிய நூல் இஃது என்பதில் ஐயமில்லை'' என்று தம்முடைய 'பரிதிமாற் கலைஞரும் நாடகத்தமிழும்' என்ற நூலில் கூறுவார் டாக்டர் ந. சுப்பிரமணியன் அவர்கள். மேலும் அவர், சாஸ்திரியார் ஷேக்ஸ்பியர் நாடகங்களால் ஈர்க்கப்பட்டவர் என்பதற்குச் சான்றாக, 'கலாவதி' நாடகம் முதல் அங்கம் முதற்களத்தில் மநோமோகிநியும் சயதுங்கனும் உரையாடும் பகுதியைச் சுட்டுவார். 'நேசத்தின் அளவைக் கூற இயலாது; அளவு கூறவேண்டுமெனில் மேலும் அநேக கண்டங்களை நான்முகன் படைக்க வேண்டும்' என்று சயதுங்கன் மநோமோகிநியிடம் கூறுவான். இவ்வுரையாடல் ஷேக்ஸ்பியரின் அந்தனியும் கிளியோபாத்ராவும் (Antony and Cleopatra) நாடகத்தின் முதல் அங்கம் முதற்களத்தில் 14 - 17 வரிகளில் காணப்படும் உரையாடலாகும். இந்த ஒற்றுமையையும் டாக்டர். ந. சுப்ரமணியன் மேற்கூறிய தமது நூலில் சுட்டுவார்.

'கலாவதி' நாடகம், நாடகவியலுக்கு ஏற்ற இலக்கியமாக விளங்குகிறது. இதைச் சாஸ்திரியாரே தம் முகவுரையில் குறிப்பிடு கிறார். 'ரூபாவதி' நாடகம் போலவே, இந்நாடகத்திலும் கதாபாத் திரங்களின் பெயர்கள் அவர்களுடைய பண்பை விளக்குகின்றன. இந்நாடகத்திற்குச் சாஸ்திரியாரே குறிப்புரை எழுதி யிருப்பது மற்றொரு சிறப்பாகும். எனவே சில வரலாற்றுச் செய்திகளும் நமக்குத் தெரியவருகின்றன. எடுத்துக்காட்டுகளாக இரண்டு பாடல்களைக் காண்க.

முன்னுரையில் சூத்திரதாரன் பாடும் "கன்னலங் கனிந்த" என்று தொடங்கும் பாடல் 'வெனிஸ்வர்த்தகன்' என்னும் ஷேக்ஸ்பியரின் நாடகத்துள் இசைபற்றி வரும் பகுதியின் மொழிபெயர்ப்பாகும். ஆங்கிலக்கவிதை வரிகளை ராவ்பகதூர் சி.வை தாமோதரம்பிள்ளை சாஸ்திரியாரிடம் கொடுத்துக் கவிதையாக மொழிபெயர்க்குமாறு கூறினார். சாஸ்திரியார் உடனே இப்பாடலைப் பாடிக் கொடுத்தார். இச்செய்தியை இந்நூலில் சாஸ்திரியாரின் வரலாற்றை விளக்கும் "வேள்வியான வாழ்வு" என்ற பகுதியுள் காண்க. அன்றியும் இதை, சாஸ்திரியார் 'கலாவதி' நாடகத்தின் குறிப்புரையிலும் குறித்துள்ளார்.

அடுத்து, 'கலாவதி' நாடகத்தின் நான்காம் அங்கம் முதற்களத்தில் கலாவதி பாடுவதாக வரும் பாடல்,

**"செய்யா யினியநலஞ் சேரரசர் சீராளா**
**கையா லெனைத்தழீஇக் காதலியே யென்றழைத்த**
**லையா தகையேய்ந் தழகார்ந்தா யென்றைக்கே**
**நையாநிற் கின்றே னனி"**

(பாடல் எண்: 114)

இப்பாடலுக்கு சாஸ்திரியார் எழுதிய குறிப்புரையில், "இந் நூலாசிரியர், ராஜராஜ பாஸ்கர சேதுபதி அவர்களுக்கு இந்நூலை யுரிமையுரை செய்வதற்காக ராமனாதபுரம் சென்ற காலத்து, சேதுபதியவர்கள், ஒரு நிரோட்டகம் இந்நூலில் சேர்க்குமாறு சொல்ல அவர் உடனே எழுதி அச்சபையிலேயே வாசித்துக் காண்பித்ததாகத் தெரிய வருகிறது" என்பார். (நிரோட்டகம் = உதடுகளின் முயற்சியால் பிறக்கின்ற உ, ஊ, ஒ, ஓ, ஔ, ப, ம, வ ஆகிய எழுத்துக்கள் வராமல் பாடப்படும் பாடல்)

சாஸ்திரியாரே தம்முகவுரையில் கூறுவது போல், கதா பாத்திரங்களின் தன்மைக்கேற்ப நடை மாறுபடுகிறது.

**"பேசுந் தமிழிற் பிழையினை யொரீஇப்**
**பேசுநர்க் கேற்ற விகற்பஞ் செறித்துப்**
**பெய்துரை வசனமே வாசக மாகும்"**

(நூ. 66)

என்று 'நாடகவியல்' பொதுவியல்பு பகுதியில் சாஸ்திரியார் கூறுவார். இந்நாடகத்துள் சேவகன் சோமதத்தன் பேசுவது இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இந்நாடகத்தில் சாஸ்திரியாருடைய அறிவு, ஆற்றல், திறமை ஆகியவற்றைக் காணும்போது வியப்பு ஏற்படுகிறது.

## மானவிஜயம்

*பதிப்பு வரலாறும் அமைப்பும்*

'மானவிஜயம்' அங்கம் என்னும் ஒரு வகையைச் சார்ந்தது. ஓரங்கமும் ஆறுகளங்களையும் கொண்ட செய்யுள் நாடகம். தமிழில் தோன்றிய முதல் துன்பியல் நாடகம். "தமிழ் நாடக இலக்கியததில் யாம் கண்டவற்றுள் இதுவே முதல் வரலாற்று நாடகம் என்று துணியலாம்" என்று டாக்டர். ந. சுப்பிரமணியன் தம்முடைய 'பரிதிமாற் கலைஞரும் நாடகத்தமிழும்' என்ற நூலில் கூறுவார்.

'மானவிஜயம்' முதன்முதலில் கிறித்தவக் கல்லூரி மாத இதழில் வெளியாயிற்று. 1902ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் இதழில் முதற்களமும் மார்ச்சுத் திங்களில் இரண்டு மற்றும் மூன்றாம் களமும் ஏப்ரல் திங்களில் நான்காம் களமும் மே மாதம் ஐந்தாம் களமும் ஜூன் மாதம் ஆறாம் களமும் வெளிவந்து முற்றுப்பெற்றது. சாஸ்திரியார் நூலின் முகவுரையில், "முற்றும் ஆங்கில மொழி யானியன்று வெளிப்படும் அப்பத்திரிகை (கிறித்தவக் கலாசாலைப் பத்திரிகை)யின் கண்விலக்கென எம்புன்னூலையும் பதிப்பித்து...." என்று கூறுவார். நூல்வடிவில் முதற்பதிப்பு 1902ஆம் ஆண்டு வெளிவந்தது. சாஸ்திரியாரின் இயற்றமிழ் மாணவருள் தலை மாணாக்கரான ந. பலராமஐயர் அவர்களுடைய குறிப்புரையுடன் கூடிய இரண்டாம் பதிப்பு 1932 ஆம் ஆண்டு வெளிவந்தது.

நூலின் தொடக்கத்தில் சாஸ்திரியாரின் முகவுரை, சுதேசமித்திரன் பத்திராதிபர் ஜி. சுப்பிரமணிய ஐயரின் ஆங்கில முன்னுரை, ந. பலராமஐயரின் இரண்டாம் பதிப்பின் முகவுரை, நூல் வெளி யீட்டாளரின் முன்னுரை, உரிமையுரை, நூல், வாழ்த்து, செய்யுள் முதற் குறிப்பகராதியுடன் நூல் முற்றுப் பெறுகிறது.

சாஸ்திரியார் தம் முகவுரையில் முதலில் நாடகத்தின் கதைச் சுருக்கத்தைக் கூறுகிறார். பிறகு, "இதுயாம் புனைந்து வெளிப்படுத்தி

வரும் நாமகள் சிலம் பின்கண் எட்டாம் பரலாம் .... முற்றுஞ் செய்யுளாய் முடிந்துளதேனும் பாத்திரங்களின் ஏற்றத்தாழ்வு கருதிச் சொல் விகற்பங்களும் நடை வேறுபாடுகளும் ஆங்காங்குக் காட்டப்பட்டுள; ஆதலின், இது நடித்துக்காட்டும் நலமுளதாகு மென்றற்கண் யாதோர் ஐயப்பாடுமில்லை. இனிக்களவழிநாற்பதும், "குழவி இறப்பினும்" என்னும் புறப்பாட்டுமே இத்தமிழ் நாடகத்திற்கு முதனூலென நின்று உதவி புரிந்தன" என்பார். இறுதியில்,

**"என்று மெங்குறை யாங்கும் பரப்புநர்**
**துன்றி யெம்மிடஞ் சொல்லறி மாணவர்**
**நின்று வேலை நிகழ்த்துந ராயினு**
**மன்ற வெங்குரு மாரவர் வாய்மையே"**

என்று முடிப்பார்.

அடுத்து ஜி. சுப்பிரமணிய ஐயரின் ஆங்கில முன்னுரை அமைந்துள்ளது. அவர், ஆங்கிலப் பயிற்சியுள்ளவர்களாலேயே தமிழ்மொழி புத்துயிர் பெறும் என்று கூறுவார். இரண்டாம் பதிப்பின் முகவுரையில் ந. பலராம ஐயரவர்கள் புறநானூற்றுப் பாடலின் அடிப்படையிலும் பிற இலக்கியங்களின் அடிப்படையிலும் வரலாற்று ஆய்வு நிகழ்த்துகிறார். மேலும், அங்கம் என்னும் நாடகவகையின் இலக்கணத்தைக் கூறுகிறார்.

**"அவலச் சுவைத்தா யங்கமொன் றுடைத்தாய்க்**
**கவலைகொண் மகளிர் கசிந்துள மழுங்க**
**அண்மினர் வாய்விடுத் தரற்றுமாண் பிற்றாய்**
**வாதம் விளைத்து வாய்ப்போர் காட்டி**
**மக்கள் பாத்திரமா வயங்குறு வதுவே**
**அங்க மென்ன அறிதல் வேண்டும்"**

(நூற்பா 131)

என்னும் நாடகவியல் அடிப்படையில் இந்நாடகம் அமைந்துள்ளது என்று கூறி, பொய்கையார், செங்கணான் ஆகியோரைப்பற்றி ஆராய்ந்து முடிவுகள் கூறுகிறார். ஆசிரியர் மாணவர் உறவு, தந்தைக்கும் மகனுக்கும் உள்ள உறவு போன்றது என்ற கொள்கையை

மறுத்து, கற்றறிந்த காதலனுக்கும் காதலிக்கும் இடையே உள்ள உறவு போன்றது என்ற இந்நூலாசிரியர் கருத்து இந்நாடகம் வழியே வெளிப்படுகிறது என்று கூறிமுடிப்பார். அடுத்து நூல் வெளியீட்டாளர்களின் முன்னுரை அமைந்துள்ளது.

இந்நாடகத்திற்கு மிகப்புதுமையான முறையில் சாஸ்திரியார் உரிமையுரை வழங்கியுள்ளார். 'நண்பரல்லாதார்க்கு இந்நூலினை உரிமையாக்குகிறேன். அவர் நூலிடத்துக்குற்றம் காணும் நோக்குடையரேனும், நூலினைத் துருவி ஆராய்பவர் அவராதலின், அன்னார்க்கு இதனை உரிமை செய்கின்றோம்' என்று கூறுவார்.

**"எம்முடைய நண்ப ரெனப்பெறா தாரெவர்க்குஞ்**
**செம்மையுற வி ஃதுரிமை செய்கின்றா - மம்மவவர்**
**யாவேனு மெந்நூ லெடுத்துப் படிக்குறூஉம்**
**மாவேட்கை யாளரான் மன்"**

என்பார்.

பாயிரத்துள் விநாயகர், சுப்பிரமணியர், நாமகள், நடராசர் வணக்கத்தை அடுத்து, இந்நாடகத்தில் மட்டும் சங்கப்புலவர் வணக்கம் இடம் பெற்றுள்ளது. அதையடுத்து அவையடக்கப் பாடல்கள் உள.

## *'மானவிஜயம்' நாடகத்தின் கதை*

நல்லிசைப்புலவரான பொய்கையாரின் மாணாக்கன் சேரமான் கணைக்காலிரும்பொறை. சோழன் செங்கணான் போரில் சேரனை வென்று, பொய்கையாரையும் சேரமானையும் சிறையிலிட்டான். சேரமான், பொய்கையாரைப்போல மனஅமைதியோடு இல்லாது, பெரிதும் ஏக்கத்துடன் சிறையில் இருந்தான். அன்றிரவு, சோழன் செங்கணானின் மனைவியாகிய இராசமாதேவி, தீக்கனவு கண்டு, திடுக்கிட்டுத் தன் தோழி அறிவுடைநங்கையுடன் அரசனைக் காண விரைந்தாள். வைகறையில் சோழன், பொய்கையாரைச் சிறைவீடு செய்து பணிந்தான். சோழன் மீது பொய்கையார் களவழி நாற்பது எனும் நூல் பாடுகிறார். பிறகு சேரனைச்சிறை வீடு செய்யச் செல்கிறார்.

சிறைக்கோட்டத்தில், சேரமான் தண்ணீர் தாவென சிறைக் காவலரைக் கேட்டு, உடனே பெறாது காலந்தாழ்த்துப் பெற்றான். மானமே உயிரினும் மாண்புடைத்தென்று சேரமான் அத்தண்ணீரைப் பருகாது, 'குழவி இறப்பினும்' என்னும் பாடலை எழுதி வைத்துவிட்டு இறந்தான். அவன் இறந்ததைக் கண்ட பொய்கை யாரும் இறந்தார். இருவரும் இறந்ததை அறிந்த சோழன், சிறைக் கோட்டத்தை அழித்தான். பின்னர்த் தான் அறியாதுசெய்த இப்பாவச் செயல்கட்குக் கழுவாயாகத் தேவகுலம் பல குயிற்றினான். இத்துடன் நாடகம் முடிகிறது.

இந்நாடகத்தின் கதைக்கரு, புறநானூறு 74ஆம் பாடலும் களவழி நாற்பதுமாம். புறநானூறு 74ஆம் பாடலாகிய, "குழவி இறப்பினும்" என்ற பாடலின் பாடினோர் பாடப்பட்டோரைக் குறிக்கும் பகுதியில், "சேரமான் கணைக்காலிரும்பொறை சோழன்செங்கணானோடு திருப்போர்ப்புறத்துப் பொருது பற்றுக்கோட்பட்டுக் குடவாயிற் கோட்டத்துச் சிறையில் கிடந்து, தண்ணீர் தாவென்று பெறாது, பெயர்த்துப்பெற்றுக் கைக்கொண்டிருந்து, உண்ணான் சொல்லித் துஞ்சிய பாட்டு" என்ற தொடரே இக்கதைக்குக் கரு.

ப சம்பந்தமுதலியார் தமது 'நாடகத்தமிழ்'எனும் நூலில் "இந்நாடகம் (மானவிஜயம்) ரங்கத்தின் மீது ஆடப்பட்டதாக எனக்கு ஞாபகமில்லை"என்று 1933 ஆம் ஆண்டு எழுதியுள்ளார். 1970 ஆம் ஆண்டு சாஸ்திரியாரின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தின் போது, சென்னைக் கிறித்தவக் கல்லூரியில், கல்லூரி மாணவர்களால் செய்யுள் நடையிலேயே இந்நாடகம் அரங்கேறியது.

தமிழ் இலக்கிய வரலாற்றிலேயே இந்நூலில் செய்துள்ள உரிமையுரைபோல எங்கும் காண இயலாது. இந்நாடகம் முதன் முதலில் செய்யுளால் இயன்ற துன்பியல் நாடகம். முதன்முதலில் தோன்றிய வரலாற்று நாடகம் என்றும் கொள்ளலாம்.

மரபுவழி எழுதப்பெறும் நாடகம் என்றாலும் பாத்திரத்திற்குத் தகுந்த நடையைப் பயன்படுத்தியுள்ளார் சாஸ்திரியார். இந் நாடகத்துள் பெரும்பாலும் அகவற்பாவும் சிற்சில இடங்களில் வெண்பாவும் விருத்தப்பாவும் விரவிவந்துள்ளன. பொய்கையாரின் கூற்றுக்கும் சிறைக்காவலரின் பேச்சிற்கும் இடையே உள்ள நடை வேறுபாடு சிறப்பாக உள்ளது.

ஆங்கில மொழிக்கல்வியால், ஆசிரியர்,நடைபெற்ற நிகழ்வுக்கு அறிவியற் காரணங்களைக் கூறிச்செல்கிறார். எடுத்துக்காட்டாக, இராசமாதேவி தீக்கனவு கண்டவுடன் அறிவுடைநங்கை 'மனம் அமைதியில்லாவிட்டாலும், குருதி மூளைக்குச் சரியாகச் செல்லா விட்டாலும் மிக அதிகமாக உணவு உண்டாலும் நீர்ப்பசையற்ற உணவை உண்டாலும் மல்லாந்து படுத்தாலும் உடல் இளைத்தாலும் படுக்கும் படுக்கையின் குறைபாட்டாலும் கனவு தோன்றும்'' என்று கூறுவாள்.

> ***''சித்தந் திரிதல் பித்துமீ தூரல்***
> ***உயிர்ப்புனன் மூளைக் குரியவா றுறாமை***
> ***வயிற்றிட மின்றெனு வாய்மடை செறித்தல்***
> ***உலர்ந்த வூண்கோண் மலர்ந்து துயிலுதல்***
> ***யாக்கை மெலிவு சேக்கைக் குறைவோ***
> ***டின்னும் பலவா யியம்புகா ரணத்தால்***
> ***துன்னுங் கனவுகள்''***

(களம். 4; வரி 30-35)

சாஸ்திரியாரின் இயல்பான அறிவியல் நாட்டமும் இதிலிருந்து புலனாகிறது.

## *சாஸ்திரியார் படைத்த நாடகவியலும் நாடகங்களும்*

நாடகங்களுக்கான ஒரு முழுமையான இலக்கண நூலாக நாடகவியல் விளங்குகிறது. இன்றுவரை நமக்குக் கிடைத்திருக்கக் கூடிய நூற்பாவால் இயன்ற முழுமையான நாடக இலக்கணநூல் இது ஒன்றுதான். ஆனால் இன்று இந்நூல் போற்றப்படவில்லை. எனினும் நாடகவியலின் தாக்கத்தைப் பரவலாகக் காணலாம். சாஸ்திரியாரின் இயற்றமிழ் மாணவர்கள் பற்பல நாடகங்களை இயற்றினர். சாஸ்திரியார் மிக இளம் வயதில் மறைந்ததால், இயற்றமிழ் மாணவர்களின் நாடகப்பணிகளில் தேக்கம் ஏற்பட்டது.

தமிழ்மொழியின் மீது தமக்கு இருந்த ஆர்வத்தினால் நாடகங்கள் படைத்ததாகச் சாஸ்திரியார் கூறுகிறார். சாஸ்திரியார் உரைநடையில் இயற்றிய ரூபாவதி. கலாவதி செய்யுளான் இயன்ற மானவிஜயம் ஆகியன மேடையிலும் நடிக்கப்பட்டன. ரூபாவதியும் கலாவதியும் இன்பியல் நாடகங்கள்; நூல்களாகவே வெளிவந்தன. மானவிஜயம்

துன்பியல் நாடகம்; தொடராகவந்து நூலாகத் தொகுக்கப்பட்டது. சாஸ்திரியார் 'ரூபாவதி' நாடகம் பற்றி, ''அது மேற்புல விஞ்ஞானிகள் முறையினைப் பெரிது மடுத்துப் புனையப்பட்டுள்ளது'' என்பார். 'கலாவதி' நாடகம் 'வடநூன் முறைகளைப் பெரிதும் ஒட்டி எழுதப்பட்டது' என்று சாஸ்திரியாரே கூறுவார். மானவிஜயம் முழுவதும் தமிழ்நூல் முறையை ஒட்டி எழுந்ததாகும். துன்பியல் முடிவை ஆங்கில மொழியோர் முறையில் மேற்கொண்டார். இம்மூன்று நாடகங்களுமே 'நாடகவிய'லோடு ஒத்து இயங்குகின்றன. சாஸ்திரியார் தம்முடைய உரைநடை நாடகங்களிலும் அதிகமாகப் பாடல்களையும், இசைக்கீர்த்தனைகளையும் எழுதிச் சேர்த்துள்ளார். சாஸ்திரியார், ''இயற்றமிழும் இசைத் தமிழுங் கூடிய வழியே நாடகத்தமிழ் பிறக்குமென்று கூறுதலே அமைவுடைத்தாம்'' என்று தம்முடைய 'தமிழ் மொழியின் வரலாறு' என்னும் நூலில் குறிப்பிடுவார். இதிலிருந்து அக்கால நாடகங்களில் இவற்றின் செல்வாக்கு நமக்குப் புலனாகிறது.

சாஸ்திரியாரைப் பற்றி, பாரதிதாசன் தமது 'தேனருவி' என்னும் கவிதைத் தொகுதியில், 'பரிதிமாற் கலைஞன்' என்னும் தலைப்பில்,

> ''.......
> **முத்தமிழ் வல்லவன் பரிதிமாற் கலைஞன்**
> **நாடகத் தமிழ் இலக்கணம் மறைந்ததே**
> **நாடகத் தமிழ் இலக்கியம் மறைந்ததே**
> **ஈடுசெய் வேனோ என்று துடித்தான்**
> **இயன்ற மட்டும் சிற்சில கொடுத்தான்''**

என்று நினைவுகூர்வார்.

இந்நூற்றாண்டில் ஏற்பட்டுள்ள சமுதாய, அறிவியல் மாற்றங்களால் சாஸ்திரியார் இயற்றிய நாடகவியலும், நாடகங்களும் கல்லூரி, பல்கலைக்கழகம் ஆகியவற்றுள் பயிலும் மாணவர்களாலும் ஆய்வு செய்பவர்களாலும் தமிழறிஞர்களாலும் தமிழ் ஆர்வலர் களாலும் மட்டுமே பயிலப்படுகிறது.

# 3
# கவிதைக் காலம்

சூரிய நாராயண சாஸ்திரியார் நினைத்தவுடன் கவிதைகள் பாடுவதில் வல்லவர் என்பதை முன்பே கண்டோம். சாஸ்திரியாரின் உரைநடையை விட அவரது கவிதைகள் எளிய நடையில் அமைந்துள்ளன. அவர், தம் நாடகங்களில் எழுதியுள்ள கவிதைகளைத் தவிர, 'தனிப்பாசுரத் தொகை - முதற்பகுதி' என்ற நூலையும் 'பாவலர் விருந்து - முதல் நாள்' என்ற நூலையும், 'சித்திரகவி விளக்கம்' என்ற நூலையும் வெளியிட்டுள்ளார். இவை தவிர இசைப்பாடல்களும் பல இயற்றி உரைநடை நாடகங்களில் சேர்த்துள்ளார் சாஸ்திரியார்.

### *தனிப்பாசுரத் தொகை*

#### *நூல் எழுதக் காரணம்*

சாஸ்திரியார் தமது ஆங்கிலக்கல்வியின் பயனாகப் பிறமொழி இலக்கியவகைமைகளும், புதுக்கருத்துக்களும் தமிழில் வர வேண்டும் என்று விரும்பினார். ஆங்கிலத்தால் தமிழ்வளர வேண்டும் என்று கருதினார். நூலின் முகவுரையில், ''சிலர் ஆங்கிலமொழி தற்காலத்து மேன்மேலுந் தழைத்தோங்கிப்படர்ந்து நந்தமிழ்மொழி யிருந்த இடமுந் தெரியாதவாறு மறைத்துவிடுமோ என ஐயுறுவாராயினார். அன்னார் நம் தமிழ்மாது ஆங்கில நூல் நலன்களையும் பொலிவுகளையும் மேற்கொண்டு காலத்துக்கேற்ற கோலம் புனைந்து இந்நாட்டின்கண் இனிய நடம்புரிந்து ஏக்கழுத்தத்தோடும் உலவி விளையாடுகின் றாளென் பதனை யுணர்வாராக'' என்று கூறுகிறார். மேலும், அதே முகவுரையில் ஆங்கில நூல் பயிற்சி உடையவர்கள் தமிழ் மொழியைப் பேணாமல் விடுகின்றனர் என்று சிலர் கூறியதால், புதுமை வழியாக ஏதேனும் செய்ய வேண்டும் என்று நினைத்ததாகக் கூறுகிறார். ''அவ்வக்

காலங்களிற் சிற்சில விடயங்களைப் பற்றிக் கொண்ட கருத்துக்களைச் செய்யுளுருவமாய்ச் செய்து வெளியிடலாமென்று உன்னினேம்'' என்று அம்முகவுரையில் குறிப்பிடுகிறார். இப்பாசுரங்களில்தான் பரிதிமாற் கலைஞன் என்ற புனைபெயரை முதன்முதலில் பயன்படுத்துகிறார். இப்பாசுரங்கள், ''தமிழிலக்கிய வரலாற்றிலேயே ஒரு முன்முயற்சி'' என்பார் டாக்டர் ந. சுப்ரமணியன்.

## *'பரிதிமாற் கலைஞன்' பெயர்க்காரணம்*

1897ஆம் ஆண்டு 'ஞானபோதினி' இதழ் வாயிலாகத் தனிப்பாசுரங்கள் வெளிவரலாயின. இப்பாசுரங்களில் பரிதிமாற் கலைஞன், கரூர் என்று புனைபெயரையும் ('சூரியன் = பரிதி; நாராயணன் = மால்; சாஸ்திரி = கலைஞன்) ஊரையும் சேர்த்துக் குறித்தார் சாஸ்திரியார். சென்னையில் அக்காலத்தில் இவர் வாழ்ந்த பகுதி Black Town என வழங்கப்பட்டது எனவே ஊர்ப்பெயரைக் 'கரூர்' என்று குறிப்பிட்டார்.

பரிதிமாற் கலைஞன் என்னும் புனைபெயரில் பாசுரங்களை வெளியிடுவதற்குரிய காரணத்தை, சாஸ்திரியார் நூலின் முகவுரையில், ''இப்பாசுரங்களிற் சில புதுக்கருத்துக்கள் காட்டியிருக் கின்றமை பற்றி அஞ்சுவேம், எமது மெய்ப்பெயரின் வெளியிடாது பரிதிமாற்கலைஞன் என்னும் புனைவுபெயரின் வெளியிடுவே மாயினேம். அன்றியும் நன்னூலொன்று செய்தானது புகழின்மையான் இகழப்பட்டொழிதலும் புன்னூலொன்று செய்தானது உயர்ச்சியாற் சாலவும் புகழப்பட்டிலங்கலும் நாடொறுங் காண்டலின் இந்நூலைப் பற்றிய தமிழ் மக்களின் உண்மை மதிப்பு இனைத்து என்றுணர வேண்டியும் அவ்வாறு செய்ய விரும்பினேம்'' என்று கூறுகிறார்.

சாஸ்திரியார் வடமொழியின் மீதிருந்த காழ்ப்பினால் தமது பெயரை மாற்றிக் கொண்டார் என்று சிலர் கருதுவர். ''மொழி யாராய்ச்சியை விஞ்ஞான முறையில் செய்ய விரும்பி, அதனை ஓரளவு செய்யவும் செய்த சாஸ்திரியாருக்கு மொழிகள் யாவும் கருத்துவாயில்களே. ஆதலால் அவற்றிடையே ஏற்றத்தாழ்வுகாண வேண்டா என்பது நன்கு தெரியும்'' என்று டாக்டர் ந. சுப்பிரமணியன் தமது 'பரிதிமாற் கலைஞரும் நாடகத் தமிழும்'' என்று நூலில் கூறுவார். முதன் முதலில் தமது பெயரைத் தனித்தமிழ்ப்பெயராக மாற்றிக் கொண்டவர், இவர்தான்.

*பதிப்பு வரலாறு*

இப்பாசுரங்கள் 'ஞான போதினி' இதழில் 1897ஆம் ஆண்டு முதல் மாதந்தோறும் 'பரிதிமாற்கலைஞன்' என்னும் புனைபெயரில் வெளிவந்தன. 1899ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் ஆறாம் நாள் பரிதிமாற் கலைஞன் என்னும் புனைபெயருடன் 41 பாசுரங்களுடன் முதற் பதிப்பு வெளிவந்தது. அதனுடைய இரண்டாம் பதிப்பு அதே 41 பாசுரங்களுடன் 1901ஆம் ஆண்டு வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார் பெயருடன் வெளி வந்தது. இந்நூலைச் சாஸ்திரியார், சென்னைக் கவர்னராக விளங்கிய ஆம்ட்ஹில் அவர்களுக்கு உரிமையாக்கினார். சி.வை. தாமோதரம் பிள்ளை சிறப்புப்பாயிரம் வழங்கி இருந்தார். ஆங்கில மொழிபெயர்ப்பை வழங்கிய டாக்டர் ஜி.யூ. போப் அவர்களின் ஆங்கில முன்னுரையும் அடுத்து, சாஸ்திரியாரின் முகவுரையும் அமைந்திருந்தன. பாசுரங்களுடன் ஆங்கிலக் கவிதை வடிவான மொழி பெயர்ப்பும் அச்சிடப்பட்டிருந்தது.

டாக்டர் ஜி.யூ. போப் அவர்கள் திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துப் பதிப்பிக்கும்போது 1901இல் எழுதிய அதன் ஆங்கில முன்னுரையில், 'தமிழ் சரசுவதியின் சிறந்த மறுதோற்றம் புத்துடையில் ஏற்படுவதற்கான அறிகுறிகள் காட்டும் நவீன நூல்கள் இரண்டைத் தவிர வேறொன்றும் இருப்பதாக எனக்குத் தோன்ற வில்லை. சிறந்து விளங்கிய மனோன்மணீயம் ஆசிரியர் சுந்தரம் பிள்ளை விரைவாக மறைந்துவிட்டார். ''தனிப்பாசுரத்தொகை - முதற் பகுதி'' என்ற ஆக்கியோன் பெயர் குறிப்பிடாச் சிறுநூல், நாம் மனமார எதிர்கொள்ளத்தக்க புதிய மரபினர் வருகையின் முன்னோடியாகத் தோற்றுகிறது' என்று எழுதினார். பிறகு அதனுடைய அடிக்குறிப்பில் 'ஆக்கியோன் பெயர் இப்பொழுது கிடைத்திருக்கிறது. இப்பாக்களை இயற்றியவர் சென்னைக் கிறித்தவக் கல்லூரித் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் வி.கோ. சூரிய நாராயண சாஸ்திரியார், பி.ஏ.' என்று குறிப்பிட்டுள்ளார்.

முதற் பதிப்புக்கும் இரண்டாம் பதிப்புக்குமுள்ள வேறுபாட்டைச் சாஸ்திரியார் நூலின் முகவுரையில் பின்வருமாறு கூறுவார். ''நண்பர் யாவரும் இந்நூலை அவ்வாங்கில மொழி பெயர்ப்புடனுஞ் சேர்த்து அச்சிடுதல் வேண்டுமென்றனர். அவ்வாறே அச்சிடப்புகுந்த யாம் இதன்கணுள்ள பாசுரங்கள் அனைத்தையும் ஒழுங்குபடுத்தி

முறைப்பட வைத்தனம். அங்ஙனம் வைப்புழிப் பின்னர்த் தோன்றிய கருத்துக்களுக்கேற்பச் சிற்சில விடங்களில் மாற்றியும் மொழி பெயர்ப்பாசிரியர் கூற்றுக் கிணங்கச் சிலவற்றையியைத்துமிருக் கின்றோம். இவையே முதற் பதிப்பிற்கும் இரண்டாம் பதிப்பிற்கு முள்ள வேறுபாடு.''

இரண்டாம் பதிப்பு டாக்டர் ஜி.யூ போப் அவர்களின் ஆங்கில மொழிபெயர்ப்புடன் வெளியான பிறகு, திருவள்ளுவர், போர், எறும்பு ஆகிய மூன்று பாசுரங்களும் கிறித்துவக்கல்லூரி மாத இதழில் 1901ஆம் ஆண்டு ஜூலை, ஆகஸ்டுத் திங்கள்களில் வெளியாயின; இவற்றுள் திருவள்ளுவர் எனும் பாசுரம் 'தனிப்பாசுரத்தொகை' நூலில் உள்ளது. போர், எறும்பு ஆகிய இரண்டும் புதிய பாசுரங்கள். இவ்விரு பாசுரங்களையும் சாஸ்திரியாரின் மாணவருள் ஒருவரான டி.பி. கிருஷ்ண சாமி என்பவர் உரை நடையில் ஆங்கில ஆக்கம் செய்தார். 1933இல் வெளிவந்த மூன்றாம் பதிப்பில் இவற்றையும் சேர்த்து 43 பாசுரங்கள் உள்ளன.

## நூலின் அமைப்பு

தனிப்பாசுரங்கள் இத்தாலிய இலக்கிய வகைமையான Sonnetto என்பதைத் தழுவி எழுந்தவை Sonnet என்னும் ஆங்கில இலக்கிய மரபில், பாடல்கள் 14 அடிகள் கொண்டதாக, ஈற்றெதுகையுடன், ஏதேனும் ஒருபொருள் பற்றி அமையவேண்டும். அவற்றில் முதல் 8 அடிகளும் இறுதி 6 அடிகளும் ஒரு கருத்தின் இருவேறு எதிர்நிலைகளைக் காட்ட வேண்டும். சாஸ்திரியார் 14 அடி என்ற வரையறையை மட்டும் மேற்கொண்டார். சானெட்டின் பிற பண்புகளை எடுததுக் கொள்ளவில்லை பாடல்கள் தமிழ் மரபுக்கேற்ப அடி முதலெதுகையைக் கொண்டன.

1933ஆம் ஆண்டு வந்த மூன்றாம் பதிப்பில் உரிமையுரைக்கு அடுத்து, சி.வை தாமோதரம்பிள்ளை அவர்களின் சிறப்புப் பாயிரம் உள்ளது. அதில் அவர் 'பாரார் பார்த்துக் கருதுமாறு உள்ளபடி அறிதல் வேண்டி பரிதிமாற்கலைஞன் எனும் புனைவு பெயர் தான் நிறுவினான்' என்று கூறுவார்.

சாஸ்திரியாரின் முகவுரை அடுத்து அமைந்துள்ளது. ஆங்கில மொழிப் பயிற்சியுடையார் தமிழைப் பேண வேண்டும். என்றும்,

பரிதிமாற் கலைஞன் என்ற புனைபெயர் பூண்ட காரணத்தையும், முதற் பதிப்புக்கும் இரண்டாம் பதிப்புக்குமுள்ள வேறுபாட்டையும் சுட்டுகிறார் சாஸ்திரியார். மேலும் இடைநிலை இலக்கியங்களோடு மாறுபட்டுள்ளது போலத் தோன்றினாலும் அன்னதென்று இகழ வேண்டாம்; பல புதுக்கருத்துக்கள் இதனுள் சொல்லப்பட்டுள்ளன என்று கூறுகிறார். இப்பாசுரங்களின் உண்மை மதிப்பு அறிய வேண்டும் என்பதற்காகப் புனைபெயர் பூண்ட சாஸ்தியார், முகவுரையை

***"எப்பொருள் எத்தன்மைத் தாயினு மப்பொருள்***
***மெய்ப்பொருள் காண்ப தறிவு"***

என்ற குறளில் தொடங்கி,

***"சங்கநா லென்னும் பொங்குதே மலரிற்***
***'கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி***
***காமஞ் செப்பாது கண்டது மொழிமோ!"***

என்ற கவிதையுடன் முடிப்பார்.

முகவுரையை அடுத்து ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தைச் சார்ந்த டாக்டர் ஜி.யூ.போப் அவர்களின் ஆங்கில மொழி பெயர்ப்பிற்கான ஆங்கில முன்னுரை அமைந்துள்ளது. தமிழ்க் கவிதைப் பரப்பு முழுவதையும் தான் அறிந்திருப்பதாகக் கூறும் டாக்டர் ஜி.யூ.போப், தமிழ்மொழியையும், தமிழ்க் கவிதைகளையும் தமிழ் மக்களையும் தான் மிகவும் நேசிப்பதாகக் கூறுவார். தமிழ்க் கவிதைகள் எளிமையாகவும் இன்றைய சூழலுக்குத் தகுந்தவாறும், பொதுமக்களுக்குப் புரியும வகையிலும் அமைய வேண்டும் என்று கூறுவார்.

சாஸ்திரியாரின் இயற்றமிழ் மாணவர் ந.பலராமஐயர் அவர்களின் 'நூல்முகம்' அடுத்து அமைந்துள்ளது. புதியவற்றைத் தமிழில் புகுத்தும்போது தமிழ் இலக்கண மரபு சிதையாதவாறு ஏற்பனவற்றைக் கொள்வார் சாஸ்திரியார் என்று கூறுகிறார். அத்துடன் அவர் பாசுரங்களின் வைப்பு முறைக்குக் காரணமும் கூறுவார்.

அடுத்ததாக, சென்னைக் கிறித்தவக் கல்லூரி இதழில், முதன் முறையாகப் பாசுரங்களை வெளியிடும் போது எழுதப்பட்ட ஆங்கில முன்னுரை அமைந்துள்ளது. அதனையடுத்து வெளியீட்டாளரின் மூன் றாம் பதிப்பிற்கான முன்னுரை அமைந்துள்ளது. நூலின் உள்ளே இடப்புறம் பரிதிமாற் கலைஞரின் பாசுரமும், வலப்புறம் டாக்டர் ஜி.யூ.போப் அவர்களின் ஆங்கிலக் கவிதை வடிவிலான மொழி பெயர்ப்பும், பாசுரங்களுக்குக் கீழே ந. பலராம ஐயரின் குறிப்புரையும் உள்ளது. இறுதியில் பாசுர முதற் குறிப்பகராதியும், ஆங்கிலக் கவிதைகளின் முதல்வரிகளின் பட்டியலும் உள்ளன.

## *நுவலும் பொருள்*

43 பாசுரங்களும் பல்வேறு தலைப்புகளில் எழுதப்பட்டுள்ளன. கடவுள், வாழ்க்கை, அன்பு, குரு, மாணவன், மனன், உடல், கணவன், மனைவி, விண்மீன், மலை, கடல், இரவு, வரைவின்மகளிர், திருவள்ளுவர், எறும்பு ஆகிய பல வேறுபட்ட தலைப்புகளில் பாசுரங்கள் அமைந்துள்ளன.

## *எளியநடை*

சாஸ்திரியாரின் கவிதை நடை மிக எளிமையானது. மலரைப் பற்றிக் கூறும்போது,

**"மலரே! மலரே என்மன மலர**
**மலரு மலரே"**

என்று கூறுவார்.

இரவு என்ற தலைப்பில்,

**"மின்னின விண்மீன்! துன்னின நள்ளிருள்;**
**மன்னின மனைதொறு மாவொளி விளக்கம்"**

என்று அடுக்கிக் கூறுவார். மேலும் பழமொழிகளையும் கவிதையில் சேர்த்துள்ளார். காட்டாக, வெகுளி என்ற தலைப்பில்,

**"தீயரைக் காணிற் சேயரா யொதுங்குக"**

என்று 'துஷ்டரைக் கண்டால் தூர விலகு' என்ற பழமொழியை அழகு தமிழில் எழுதிச்செல்வார்.

*உணர்ச்சியும் கற்பனையும்*

உணர்ச்சியின் வெளிப்பாடே கவிதை. சாஸ்திரியார் எதனை 'அழகு' என்று கூறுகிறார்?

**"அழகி னியலினை யநுபவித் தறியார்**
**பழகினர் போன்று பலபடப் பகர்ந்தனர்;**
**வண்ணமே வனப்பென வகுத்தனர்; அதான்று;**
**வடிவே யெழிலென வரைந்தனர்; அதான்று: நற்**
**குணனே கவினெனக் கூறினர், அதான்று;**
**பயனுடைப் பண்பெனப் பரிந்தனர்; அதான்று; மற்**
**றின்னும் பலவா யியம்பினர்;**
.............
**எல்லா நலனு மினிமையிற் கலந்து**
**கண்டவர் மனத்தைக் கணத்திற் பிணித்துத்**
**தன்வயப் படுக்குந் தன்மைத் தன்றோ?**
**அறத்தி னீங்கிய வழகு முண்டுகொல்?"**

எவ்வளவு உணர்வோடு சொற்கள் இயங்குகின்றன!

கவிதைக்கு அடிப்படையே கற்பனைதான். அக்கற்பனையும் உவமைகளால் சிறக்கும். ஒரு மாணவன் எவ்வாறிருக்க வேண்டும்? ஆசிரியரிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்? தந்தைக்கு உதவும் மகன்போலவும் தலைவனை விரும்பும் தலைவி போலவும் கலைவல்ல ஆசானைக் கண்டு மகிழ வேண்டும். உருவை விட்டகலா நிழல் போலச் செல்லவேண்டும். கடவுளை வழிபடும் பக்தன் போல ஆசானைத்துதிக்க வேண்டும். மழை பொழியச் செழிக்கும் வயல்போல, ஆசிரியர் சொல்லை மனத்துள் மறவாது போற்ற வேண்டும். அடுத்தடுத்து உவமைகளை அடுக்கிச் செல்வார் சாஸ்திரியார்.

சாஸ்திரியார் விண்மீன் என்ற பாசுரத்தில், விண்மீன்களின் ஒளியை,

**"இரவி ரைசியி னெழிற்றாட் கீழ்விரி**
**நீலக் கம்பலத் தேலப் பரம்புபு**
**செயிர்தீர்ந் திலங்கும் வயிர மென்கோ?**
**நீலவான் படத்தி னிகழ்புழை வழித்தெரி**
**கோலமார் கயிலைக் குன்றினொளி யென்கோ?**
**விண்டங்கு வெவ்வே றண்டங்க ளென்கோ?**
**வானமா மரையிலை மேனனி மிளிரும்**
**புனற்றுளி யென்கோ?"**

என்று உவமைகளின் தொகுப்பால் விளக்குவார். இரவு அரசியின் காலின் கீழ்உள்ள நீலக்கம்பளத்தில் விளங்கும் வைரங்களா? வானத்தில் உள்ள துவாரத்தின் வழியே தெரியும் கைலாயத்தின் ஒளியோ? விண்ணில் உள்ள வெவ்வேறு அண்டங்களா? வானமாகிய தாமரை இலைமீதுள்ள நீர்த்துளிகளா? உயரத்தில் உள்ள விண்மீன்களைப்பாடும் போது இவரது கற்பனையும் விண்ணில் பறந்து செல்வதைக் காண்கிறோம்.

*சமுதாயக் கருத்துக்கள்*

துறவறத்தை விட இல்லறமே சிறந்தது என்பதைப் பல இடங்களில் வலியுறுத்துவார் சாஸ்திரியார், 'இல்லறம்' என்ற பாசுரத்தில்,

**"விழுப்பஞ் சான்ற வியத்தகு மில்லறம்**
**ஒழுக்க வியலறி வுறுத்துஞ் சாலையாய்**
**நன்மை தழைத்து நயக்கொடை நிழற்றி**
**மென்மை யரும்பி மேன்மை மலர்ந்துபே**
**ரன்பு காய்த்துநல் லருள்கனிந் தலகிலா**
**இன்பநறை பிலிற்று மினியகற் பகமாய்**
**இலகிடு முண்மை மலையிலக் கன்றோ?**
**... .... ..... ..... .....**
**.... .... .... .... துறவு துறவென**
**நாக்கடிப் பாக வாய்ப்பறை யறைந்து**
**மயக்கிறு மாழ்கவீர்! மாந்தர்காள்!"**

(நயக்கொடை = நன்மைதரும் ஈகை; தக்கார்க்கு அளித்தல்)

இல்லறம் என்பது, நன்மையாகிய இலை தழைத்துக் கொடையாகிய நிழலைச் செய்து மென்மை என்னும் அரும்பு ஈன்று மேன்மையாகிய மலர் மலர்ந்து பேரன்பாகிய காய்காய்த்து அருளாகிய கனி பழுத்து இன்பமாகிய தேனைச் சொரியும் கற்பகமாகும் என்று முற்றுருவக அணியால் விளக்குவார் சாஸ்திரியார்.

இனி, கற்பைப் பற்றிய சாஸ்திரியாரது கருத்து மரபுவாதி களினின்றும் வேறுபடுகிறது.

**"கற்பென் பதுகலை கல்லாமை யன்று; மற்**
**றிற்படி கடவா திருத்தலு மன்று;**
**தீய வழியினிற் செல்வுழி நின்னை**
**யேயே யிஃதெனை யென்னா திருந்து**
**வாயிலாப் பூச்சியாய் மன்னுத லன்று;**
**மாடுபோ லுழைத்துக் கூடி வாழ்ந்து**
**காலந் தன்னைக் கழித்தலு மன்று"**

என்பார். கணவன் தவறு செய்தால் வாயில்லாப் பூச்சியாக இராது, அறிவுரை வழங்கித் திருத்துக என்கிறார். மனையற மாட்சியைப் பேணுதலும் கனவிலும் பிறர் அன்பு கருதா நலமுமே சிறந்த குணங்கள் என்பார் சாஸ்திரியார்.

பெண்களுக்குச் சமமான உரிமைகள் வழங்க வேண்டும் என்ற கொள்கையை உடையவர் சாஸ்திரியார். 'தனிப்பாசுரத் தொகை' வெளிவந்த ஆண்டை நினைத்துப் பார்த்தால் இவர் எத்தகைய சீர்திருத்தச் செம்மல் என்பது புலப்படும். 'மாதர்' என்ற பாசுரத்தில்,

**"நும்மை அடிமையா நோக்கித் தெழிப்பவர்**
**போலிகள் நும்மையும் போலியா மதித்தனர்**
**ஒத்த உரிமைகள் சித்த மகிழ்தர**
**மைந்தரோ டெய்தினிர் வாழிய"**

என்று பெண்ணுக்கு உரிய உரிமைகள் வழங்குக என்று கூறுகிறார். 'கணவன்' என்ற பாசுரத்தில்,

**"தன்னில் லாளைத் தனக்கிணை யாய
தலைவியா மதிக்குந் தன்மை யாளனாய்
வயங்குந னல்லனோ நயங்கொளும் கணவன்"**

என்று அறிவுறுத்துவார்.

மரபுவழியினின்றும் விலகி, புதிய புரட்சியான கருத்துக்களை இலக்கண மரபுக்குட்பட்ட யாப்பிலே படைத்துச் செல்கிறார் பரிதிமாற் கலைஞர். சாஸ்திரியார் நூலின் முகவுரையில், "இன்ன செய்யுட்கள் இன்னுஞ் செய்தற்கிடனுண்டெனக் கோடலிற் சிறியேம் இதனை முதல்வரிசையென வெளியிடுகின்றேம்"எனக் கூறுவார் மிக இளம் வயதில் சாஸ்திரியாரின் வாழ்வு முடிந்ததால், இவ்வகைமையும் முதல் வரிசையோடு நின்றது ஆம், முதல் வரிசையாக விளங்குகிறது.

*பாவலர் விருந்து-முதல் நாள்*

தொல்காப்பியம் கூறியுள்ள எண்வகை வனப்புகளுள் ஒன்று விருந்து. 'விருந்து' என்பதன் இலக்கணத்தை,

**"விருந்தே தானும்
புதுவது கிளந்த யாப்பின் மேற்றே"**

(தொல் செய். 239)

என்ற நூற்பாவால் தொல்காப்பியர் விளக்குவார். இதற்குப் பேராசிரியர், "புதுவது கிளந்த யாப்பின் மேற்றென்ற தென்னை யெனின், புதிதாகத் தாம் வேண்டிய வாற்றாற் பல செய்யுளுந் தொடர்ந்து வரச் செய்வது" என்று உரை வகுப்பார். சூரியநாராயண சாஸ்திரியார், தமக்கு அவ்வப்போது தோன்றிய புதிய கருத்துக் களையும் ஆங்கிலம், வடமொழி நூல்களில் தாம் கண்ட அரிய பொருள்களையும் புதுமையாகத் தமிழ்ப் பாவில் அமைத்துள்ளார்.

*பதிப்பும் அமைப்பும்*

1901 ஆம் ஆண்டு, 'பாவலர் விருந்து-முதல் நாள்' என்ற தலைப்பில் சாஸ்திரியார் நூலொன்று வெளியிட்டார். அந்நூலுள் 11 பகுதிகள் இருந்தன.

இந்நூலைச் செந்தமிழ்ப் பாவலீர்க்கு உரிமை ஆக்கியிருந்தார். அவ்வுரிமையுரையில், "உள்ளவாறே நீவிர் இம்முதனாள் விருந்தில் இன்சுவை காண்டிராயின் இன்னும் சின்னாள் விருந்திடப்புகுதும்" என்று குறிப்பிட்டிருந்தார். ஆனால் இந்நூல் வெளிவந்த இரண்டாண்டுகளில் சாஸ்திரியார் மறைந்ததால், இத் தலைப்பில் நூல்கள் வெளிவரவில்லை. நூலின் முகவுரையில் இந்நூலில் அடங்கியவற்றுள் சில முன்பே நூல் வடிவாகவும் தனித்துப் பத்திரிகைகளிலும் வெளிவந்தன என்று குறிப்பிடுவார். இவற்றுள் இதுவரை வெளிவராத புதிய கவிதைகள் எவை எவை என்றும் சுட்டுவார். 1901 ஆம் ஆண்டு சாஸ்திரியார் பதிப்பித்த முதற் பதிப்பில், மணியசிவனார் கலிவெண்பா, அவயவவறிக்கை, கையறு நிலை, கடற்கரையுலா, தாமரைத்தடம், கலங்கரை விளக்கம், ஆசானுரு நிலை, பட்டினக் காட்சி, மதுரை மாநகர், போலி யாராய்ச்சியன், ஓர் ஐயப்பாடு ஆகிய பதினொன்று பகுதிகள் உள்ளன.

இரண்டாம் பதிப்பு 1933 ஆம் ஆண்டு வெளிவந்தது சாஸ்திரியாரின் அனைத்து நூல்களையும் போல, இதனையும் வெளியிட்டவர், சாஸ்திரியாரின் இரண்டாவது மகனாகிய வி.சூ.சுவாமிநாதன் அவர்கள் ஆவார் சாஸ்திரியாரின் நூல்களுக்கு எல்லாம் உரை வகுத்த, சாஸ்திரியாரின் இயற்றமிழ் மாணவர் ந.பலராமஐயர் அவர்கள் இந்நூலுக்கும் மிகச் சிறப்பாக உரை எழுதியுள்ளார், இரண்டாம் பதிப்பின் முன்னுரையில் ந.பலராம ஐயர் தொல்காப்பியர் கூறும் வனப்புகளையும் விருந்து என்பதையும் பேராசிரியர் உரைவழி விளக்குவார். பிறகு, "முதற் பதிப்பு அச்சிட்ட பின்னர் எழுதின பரிந்துரை, முடிசூட்டிரட்டை மணிமாலை, பண்டிதநாட்டம் என்பவை இவ்விரண்டாம் பதிப்பில் சேர்க்கப் பட்டுள்ளன" என்பார் ந. பலராமஐயர். இரண்டாம் பதிப்பில் மொத்தம் 14 பகுதிகள் உள்ளன. மேலும், 'சாஸ்திரியார், திருத்தணிகை, திருக்காளத்தி, காஞ்சீபுரம், திருப்பாதிரிப்புலியூர், திருவஹீந்திரபுரம், சிதம்பரம், பழனி ஆகிய பதிகளில் உள்ள கடவுளர் மீது தோத்திர ரூபமாகப் பாடியுள்ளார். வேறு சில தனிப்பாடல்களும் பாடியுள்ளார். அவற்றை எல்லாம் சாஸ்திரியாரின் வரலாற்றோடு சேர்த்துத் தருவதாக'க் கூறுகிறார் ந.பலராமஐயர். ஆனால் இறுதிவரை அந்நூலை அவர் எழுதவில்லை.

ந. பலராமஐயர் தமது முன்னுரையில் ஒவ்வொரு பகுதியைப் பற்றிய வரலாற்றுச் செய்திகளைத் தருகிறார். அச்செய்திகளாலேயே சாஸ்திரியார் இந்நூலில் படைத்துள்ள விருந்தின் பின்புலம் புரிகிறது.

## *நூல் நுவலும் பொருள்*

திருவையாற்றை அடுத்த மாங்குடி என்னும் சிற்றூரில் தோன்றியவர் ஸ்ரீசுப்பிரமணிய சிவனார். சாஸ்திரியாரின் தந்தையாகிய கோவிந்த சிவனாருக்கு இவர் ஞானகுரு. 1894ஆம் ஆண்டு சாஸ்திரியார் தம் தாயாருடன் மகாசிவராத்திரிக்காகச் சீகாளத்தி நகரம் சென்றார். அப்போது அங்கு, அவர்தம் தந்தையாரின் ஞானாசிரியன் மீது பாடப்பட்டதே, 124 அடிகளைக் கொண்ட மணியசிவனார் கலிவெண்பா. இது மணியசிவனார் மீது பாடப் பெற்ற தோத்திர நூல். மணியசிவனாரின் சீடர்களுள் சீனிவாசன், சுப்பிரமணிய சாஸ்திரியார் ஆகியோரைப் பற்றிக் குறிப்பிட்டு, மணியசிவனார் இயற்றிய வித்தியாவிருத்தி என்ற நூலையும் குறிப்பிடுகிறார். மணியசிவனார் அஞ்செழுத்து மந்திரத்தைத் தம் கனவில் வந்து உபதேசம் செய்தார் என்றும் சாஸ்திரியார் இதில் குறிப்பிடுகிறார்.

இதற்கு அடுத்து 37 அடிகளால் ஆசிரியப்பா யாப்பில் அமைந்திருப்பது அவயவவறிக்கை. சீனிவாசசிவன், கோவிந்தசிவன் (சாஸ்திரியாரின் தந்தையார்), சுப்பிரமணியசிவன் ஆகிய மூவரும் மணியசிவனாரிடம் சிவதீட்சையும் ஞானோபதேசமும் பெற்ற சீடர்கள். சாஸ்திரியார் 1894ஆம் ஆண்டு மதுரை சென்றிருந்தபோது, அந்தச் சீடர்களின் சிவபக்திச் செயல்களில் ஈடுபட்டுத் தம் அவயவங்களை முன்னிலைப்படுத்திப் பாடியது 'அவயவ அறிக்கை'. அவயவங்களே அலையாதீர் என்றும் அம்மூவரையும் மனமொழி மெய்யால் வணங்குங்கள் என்றும் சாஸ்திரியார் கூறுவார்.

அடுத்து அமைந்திருப்பது கையறுநிலை என்ற பகுதியாகும். 1892ஆம் ஆண்டு முதல் 1901ஆம் ஆண்டு முடிய இவ்வுலக வாழ்வை நீத்துச் சென்ற தம் அன்பிற்குரிய தெனிசன் பிரபு. சலசலோசனச் செட்டியார், சு. சபாபதி முதலியார், சி.வை தாமோதரம்பிள்ளை, சை. இரத்தின செட்டியார், விக்டோரியா மகாராணி மற்றும் தி.மி. சேஷகிரிசாஸ்திரியார் ஆகிய எழுவர்மீதும் கையறுநிலைத்துறையில் பாடல்கள் பாடியுள்ளார்.

இதனுள் முதற் பகுதியில் ஆங்கில அரசுக் கவிஞர் (Poet Laureate) எனும் பட்டம் பெற்ற தெனிசன் பிரபு, 1892ஆம் ஆண்டு மறைந்தபோது வருந்திப் பதினொன்று பாடல்கள் பாடியுள்ளார். தத்துவ சாத்திரப் பயிற்சியுடைய சாஸ்திரியார், தத்துவப் பொருளை மிளிரக் காட்டும் தெனிசனிடம் ஈடுபாடு காட்டியது இயல்பே. இரங்கற்பாவில் சாஸ்திரியார்,

**"தத்துவ சாத்திரத் தனித்த ருக்கணே**
**கொத்தொடு தோஷறிய குணஞ்சி றந்துள**
**வித்தைசேர் பெயின்ஸ்பென்ஸர் மில்லெ னும்பழச்**
**சத்தினைக் கவிக்கலந் தந்த வள்ளலே"**

(தனித்தரு = ஒப்பற்றமரம்; பெயின் - Alexander Bain; ஸ்பென்ஸர் = Herbert Spencer; மில் = John Stuart Mill) தெனிசன் படைத்த தேன்போன்ற இசையுடைய பாக்களால் தேனிசையன் என்ற பெயர் தெனிசன் என்றாகியதோ என்பார். மேலும்

**"சாதுவாம் ஆர்தரின் தனிநற் காதையும்**
**ஏதமில் இனிமையார் இன்மெ மோரியம்"**

என்ற பாடல் வரிகளில் தெனிசன் படைத்த 'ஆர்தரின் தனிநற்காதை' - The story of King Arthur and the Knights of the Round Table என்பதையும் 'இன்மெமோரியம்' (In Memoriam) என்பதையும் குறிப்பிடுகிறார். 'இன்மெமோரியம்' என்ற ஆங்கிலச் சொல்லை மொழிபெயர்க்காது சாஸ்திரியார் எடுத்தாண்டுள்ளார்.

இரண்டாம் உட்பகுதியுள், தம்முடைய இயற்றமிழ் மாணவருள் ஒருவரான சலசலோசனச் செட்டியார் 1897ஆம் ஆண்டு மறைந்தபோது, சாஸ்திரியார் வருந்திப் பாடிய ஐந்து பாடல்கள் உள்ளன. இவரைச் சாஸ்திரியார் "இயற்றமிழின் மாணவர் தங்கண்ணே" என்று குறிப்பிடுவார்.

மூன்றாம் உட்பகுதியுள் சாஸ்திரியார், தம் ஆசிரியரும் மதுரை மகாவித்தவானும் ஆகிய சு. சபாபதி முதலியார் 1898ஆம் ஆண்டு

மறைந்தது குறித்துக் கையற்றுப் பாடிய பன்னிரண்டு பாடல்கள் அமைந்துள்ளன. இவற்றில் உள்ள ஒரு சில செய்திகளைச் சாஸ்திரியாரின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் 'வேள்வியான வாழ்வு' என்னும் பகுதியில் கண்டோம். மேலும் இக்கையறு நிலையில், சபாபதி முதலியார் இயற்றியுள்ள திருப்பரங்கிரிக் குமரன் அந்தாதி, திருக்குளந்தை வடிவேலன் பிள்ளைத்தமிழ், மதுரை மாலை ஆகிய நூல்களைக் குறிப்பிடுவார் சாஸ்திரியார். இப்பகுதியில் மாணவர்களுக்கு, ''சொற் பொருளை நாடும் தொழிலாளர்'' என்று சாஸ்திரியார் பெயர் சூட்டுவார்.

நான்காவது உட்பகுதியுள், இருபதாம் நூற்றாண்டுப் பிறந்த அன்று (1.1.1901) இவ்வுலகை விட்டு மறைந்த யாழ்ப்பாணம் ராவ்பகதூர் சி.வை தாமோதரம் பிள்ளை மீது கையற்றுப் பாடிய நான்கு பாடல்கள் உள்ளன. பற்பல இலக்கண இலக்கிய நூல்களை அச்சிட்ட தாமோதரம் பிள்ளை, சாஸ்திரியாருக்கு நெருங்கிய நண்பர். சாஸ்திரியாரின் நலனில் நாட்டம் கொண்டவர் இரங்கற்பாவில், 'தாமோதரம் பிள்ளை சால்பெடுத்துச் சாற்ற, எவர்தாமோ தரமுடையார்' என்று வருந்திக் கூறுவார் சாஸ்திரியார்.

ஐந்தாம் உட்பகுதியுள், சென்னை ரிப்பன் அச்சுக்கூடத்தின் உரிமையாளராகவும் தமக்கு நண்பராகவும் விளங்கிய சை. இரத்தின செட்டியார் மறைந்தபோது சாஸ்திரியார் வருந்திப் பாடிய மூன்று பாடல்கள் உள்ளன. ஆறாம் உட்பகுதியுள் ஆங்கில நாட்டின் அரசி விக்டோரியா மகாராணி மறைவுக்கு வருந்திப் பாடிய பாடல்கள் பதினொன்று உள்ளன.

தி.மி. சேஷகிரிசாஸ்திரியார் மறைவுக்கு வருந்தி, சூரியநாராயண சாஸ்திரியார் பாடிய பத்துப் பாடல்கள் ஏழாம் உட்பகுதியுள் உள்ளன. சேஷகிரிசாஸ்திரியார், சென்னை இராசதானிக் கலாசாலையில் வடமொழிப் புலமையுடன் பணியாற்றியவர். இவர் பதினெட்டு மொழிகளை அவ்வவற்றின் இலக்கணத்தோடு நன்கு அறிந்தவர். இவர். 'திராவிட சப்த தத்துவம்' என்னும் நூலைப்படைத்துள்ளார்.

கையறுநிலைகளுக்கு அடுத்து அமைந்திருப்பது 32 பாடல்களாலாகிய கடற்கரையுலா. சாஸ்திரியார் தம் மனைவியுடன் கடற்கரையில் உலவி உரையாடும் பான்மையில் தற்காப்பு நியமம் **(Law of self - preservation)** பற்றி விளக்குகிறார். இப்பாடல் 1900 ஆம் ஆண்டு பாடப்பெற்றது.

சாஸ்திரியார் தம் துணைவியாருடன் வெயில் சுட்டெரிக்கும் ஒரு மாலைவேளையில் சென்னை நகரக் கடற்கரைக்குச் செல்கிறார். அங்குக் கடற்கரை மணலில் நண்டுகள் ஓடி மறைகின்றன. காரணம் வினவிய மனைவியிடம், தம்மைப் பாதுகாத்துக் கொள்ள அவை அவ்வாறு செய்கின்றன என்று கூறுகிறார். அனைவரும் தீங்கு செய்பவர் அல்லரே என்று மனைவி கூறிக் கொண்டிருக்கும்போது, அங்கு, ஆங்கிலப் படைவீரர்கள் நால்வர் வருகின்றனர். அவர்களைக் கண்டு அஞ்சி, சாஸ்திரியாரின் பின்னே மறைகிறாள் துணைவி. உடனே சாஸ்திரியார் மனைவியிடம் உன்னுடைய இந்தச் செய்கையும் தற்காப்பு நியமம்தான்; உலகில் இயங்கும் உயிர்கள் அனைத்திற்கும் இத்தன்மை உண்டு; இஃது இயற்கை என்று கூற மனைவியும் ஏற்றுக் கொள்கிறாள். அறிவியல் கருத்தை உரையாடல் பாணியில் மிக அருமையாக விளக்கும் பாடல் இது.

அடுத்த பகுதியாக 45 பாடல்களாலாகிய தாமரைத்தடம் உள்ளது. இயற்கை வனப்பில் ஈடுபட்ட சாஸ்திரியார் 1900ஆம் ஆண்டு பாடிய பாடல் இது. இப்பாடலும் 'கடற்கரையுலா' போலத் தன்மை நிலையில் படைக்கப்பட்டுள்ளது. மதுரையில் வைகைக்கரைக்கு அருகேயுள்ள சோலை ஒன்றில் உள்ள செந்தாமரைத் தடாகத்திற்குக் கவிஞர் (சாஸ்திரியார்) செல்கிறார். அவர் அறியாமல் அவரது இல்லாளும் பின்சென்று மறைந்து நிற்கிறாள். கவிஞர் இயற்கை அழகில் ஈடுபட்டு மகிழ்கிறார். கூட்டமாக உள்ள தாமரை மலர்கள்,

> **"கூடிவாழ் வோரே குறையா வலியினர்மற்று**
> **ஓடிவில கிட்டார் உறுவது உறுகண்"**

என்று அறிவுறுத்துகின்றன. கவிஞர் தாமரைமலருக்கு முத்தமிடப் போகும்போது, பின்னிருந்து அவர் மனைவி கவிஞரின் கண்களைப் பொத்துகிறாள். போதும் விடு என்று கவிஞர் கூற, மனைவி என் மீதுள்ள காதலுக்கு அடையாளமாகப் பூ ஒன்று பறித்துத் தந்தால் விடுகிறேன் என்றாள். கவிஞர், நீ பேசுவது நன்று என்று சொல்ல அவள் கரத்தை விலக்கிக் கொண்டாள்.

கவிஞர், இயற்கையின் அழகைக் கண்டு களிக்க வேண்டும்; அன்றி அவள் அழகைக் குறைத்தல் தவறு என்று சொல்கிறார். உடன் மனைவி, தன்னுடைய குழந்தைகள் தன்னைப்பற்றினாலும்

மிதித்தாலும் தாய் மகிழ்ச்சிதான் அடைவாள்; சினம் கொள்ளாள். இனி நாம் எந்த உணவையும் உண்ண வேண்டாம்; நீரையும் பருக வேண்டாம். அசையாமல் அமர்ந்து இயற்கையின் அழகைக் கண்டிருப்போம் என்றாள். கவிஞர் நீருள் நீந்திச் சென்று மலர் ஒன்று பறித்து வந்து மனைவியிடம் கொடுக்க அவள் முகமும் அகமும் மலர்ந்தாள்.

> **''தங்கள் இனத்தாரைத் தாங்களே கண்டக்காற்**
> **பொங்கு மனத்திற் புரிந்தன்பு பாராட்டி**
> **அங்கே உபசரித்தல் அன்னார் வழக்கன்றோ''**

அவள் கையில் உள்ள தாமரைக்குக் கவிஞர் முத்தம் கொடுக்க, என்னைவிட இம்மலர் அழகாகத் தோன்றுகிறதா என்றாள் மனைவி. உன் கைம்மலரின் காரணமாக, இத்தாமரை அழகுபெற்றது என்று கவிஞர் கூற, உடன் மனைவி, உண்மை இதுவென்றால், நான் மறைந்திருந்து பார்க்கும்போது தாமரை மலருக்கு முத்தமிட்டது ஏன் என்றாள். கவிஞர், அம்மலரைக் கண்டவுடன் உன் முகம் நினைவுக்கு வந்ததால் முத்தமிட்டேன் என்றார். மனைவியும் ஊடல் தணிந்தாள்.

கவிஞர், தாமரை மலர் பறிக்கச் சென்றபோது, தாமரைக் கொடிகள் என்னைச் சுற்றியிருந்தால் என்நிலை என்னவாகியிருக்கும்? என்றார். உடன் மனைவி, செந்தாமரைக் கொடியாள் கற்புடையவள்; தானே விலகி நிற்பாள். சுற்றிவளைத்துக் கொண்டால் கொடியாள்(சிலேடை) என்னும் பெயர் பொருந்தும் என்கிறாள். மேலும் தன்னுயிர் நீப்பினும் பிறர் இன்னுயிர் நீக்கும் வினை செய்யற்க என்ற வளளுவர் வாக்கை அறிந்தவள் தாமரை மலர். அதனை நீங்கள் மறந்தாலும் தாமரை மலர் மறக்காது என்று கூறுகிறாள். மேலும், அக்கொடிக்கு உங்களால் தீங்கு ஏற்பட்டும் அவள் உங்களுக்குத் தீங்கு செய்யவில்லையே என்கிறாள் மனைவி. உடன் கவிஞர், நம் இருவரின் நல்வினையால் எந்தத் துன்பமும் ஏற்படவில்லை என்று கூற மனைவி முகம் வாடினாள். கவிஞர் உடனே மனைவியைப் புகழ்ந்து நலம் பாராட்டி முத்தமிட, அவள் இனிய பாடலை இசைக்கிறாள்.

இப்பாடல் முழுவதும் இயற்கை அழகின் சிறப்பைக் கூறுகிறது. கவிஞருக்கும் மனைவிக்கும் இடையே நடக்கும் உரையாடலில், சாஸ்திரியாரின் தத்துவசாத்திரப் பயிற்சி வெளிப்படுகிறது. தர்க்க

முறையில் அமைந்துள்ள கருத்துக்கள் சுவையாக உள்ளன. 'கலித்தொகை' போல, இக்கவிதையை மிகச்சிறந்த நாடகமாக மனக்கண்ணில் கண்டு மகிழலாம்.

அடுத்து வருவது 16 பாடல்களாலாகிய கலங்கரை விளக்கம். சாஸ்திரியார் ஒருநாள் இரவு தம் நண்பர்களுடன் மேல் மாடியில் உரையாடியபோது, அவர்களது வேண்டுகோளுக்கு இணங்கி, உயர்நீதிமன்றத்தின் மேல் விளங்கிய கலங்கரை விளக்கத்தைப் பற்றித் தம் கற்பனைகளைப் பாடல் வடிவாக அமைத்தார். இப்பாடல் 1900ஆம் ஆண்டு பாடியது. தற்குறிப்பேற்றமாகப் பாடியுள்ள இப்பாடல்களில் இவருடைய அரச பக்தியும், இறைப்பற்றும் வெளிப்படுகின்றன.

ஒன்பது பாடல்களாலாகிய ஆசானுருநிலை அடுத்த பகுதியாகும். சென்னைக் கிறித்தவக் கல்லூரியின் முதல்வராக விளங்கிய டாக்டர் மில்லர் அவர்களுக்கு வெண்கலச் சிலை ஒன்று நிறுவினர். அதனைச் சென்னைக் கவர்னராக இருந்த ஆம்ட்ஹில் துரை அவர்கள் திறந்து வைத்தார் அப்பொழுது சாஸ்திரியார் பாடிய பாடல்களே 'ஆசானுரு நிலை'. இதனை அக்கல்லூரியைச் சார்ந்த கே. கிருஷ்ணமாசாரியார் ஆங்கிலத்தில் 'My Master's Statue' என்று செய்யுளாக மொழி பெயர்த்துள்ளார்.

இதற்கு அடுத்து வருவது பட்டினக்காட்சி. சென்னைத் துறைமுகக் காட்சியைப் புனையுமுகத்தால் பழவினை முறையையும் ஊழ்வினை பற்றியும் சாஸ்திரியார் கூறுகிறார். ஒருநாள் நானும் என் இனிய மாணவனும் (அந்த மாணவன் தானே என்று உரையாசிரியர் ந. பலராம ஐயர் குறிப்பு எழுதியுள்ளார்). சென்னை மாநகர்க் கடற்கரைப் பட்டினம் சென்றோம். அங்குப்பலவிதமான மக்கள் குழுக்களாக இருந்தனர். ஆங்கிலேயர், ஆந்திரர், தமிழர், கன்னடர், 'எவற்றையும் மூக்கால் சேர்ந்து இசைத்திடும் மீமிசைச் சிகை மலையாளர்', மகமதியர் ஆகியோர் அங்கு இருந்தனர். அங்கு நடைபெற்ற சில நிகழ்ச்சிகளைக் கண்ட நான் என் மாணவனிடம் உரையாடினேன்.

**மெய்ம்மை யாளன்சொல் மென்மையான் பொய்யெனத் தோன்றப்**
**பொய்ம்மை யாளன்சொல் வன்மையான் மெய்ம்மையே போலும்**

அதனால் யார் எதை இயம்பினாலும் அதன்கண் மெய்ப் பொருளைக் காண்பாயாக. நம்முடைய இன்பதுன்பங்களுக்கு முற்பிறப்பில் செய்த நல்வினை தீவினை காரணம் என்பர். இப்பிறப்பில் நாம் செய்யும் வினைகளின் பயனே பிற்பிறப்பிற் தொடரும் என்பர். என்றால், தீயன செய்த உயிர்கள் மேலும் தீவினையே செய்யும்; நன்மை செய்த உயிர்கள் மேலும் நல்வினையே செய்து செல்லும். இக்கொள்கைப்படி இவை வேறுபட்டு இயங்க இயலாது. தவறு செய்பவர்கள் பழவினை காரணமாகச் செய்வதாகக் கொண்டால், அவர்களை நீதிமன்றத்தின் வழி தண்டிப்பது கூடாது.

பழவினை நம்பிறப்பையும், பெற்றோரையும் உற்றாரையும் மனைவியையும் தீர்மானிக்கும். ஆனால் நம் மனதில் தோன்றும் கருத்தை அது மாற்றாது என்றேன். இதைக்கேட்டு என் மாணவன் மகிழ்ந்தான்.

இத்துடன் இது நிற்க. கடல் நமக்குச் சொல்வது, ஆழ்ந்த கருத்தாளர் அடக்கத்துடன் இருப்பர் என்றேன். இருட்டிவிட்டதால் இல்லத்திற்குச் செல்லலாம் என்றான் மாணவன், வழியில், புகைவண்டி வருவதற்கு அரைமணிநேரம் முன்பாக 'நடுக் கபாடம்' (Level Crossing) அடைக்கப்பட்டது. பற்களால் உதட்டினைக் கடித்த ஏவலர் கடை திறக்க இல்வந்து சேர்ந்தோம் என்பார் சாஸ்திரியார்.

சாஸ்திரியாருடன் சென்ற உரையாசிரியர் ந. பலராம ஐயர், "இருவரும் இல்லம் அடைந்து உணவு கொண்ட பின்னர். ஆசிரியர் இப் 'பட்டினக்காட்சி'யைத் தாம் துயிலு முன்னரே எழுதி முடித்தனர்" என்று குறிப்பு எழுதியுள்ளார். 'பட்டினக்காட்சி' நகைச்சுவையோடு தொடங்கி, சீரியகருத்துக்களைக் கூறி, இறுதியில் நகைச்சுவை உணர்வுடன் முடிவடைகிறது. 49 பாடல்களால் இயன்ற இப்பகுதி, படிப்போர்க்குத் தெவிட்டாத இன்பத்தைத் தரும்.

இதற்கு அடுத்து, 108 அடிகளில் ஆசிரியப்பா யாப்பில் மதுரை மாநகர் அமைந்துள்ளது. இதுபற்றி, உரைகாரர் ந. பலராம ஐயர் தமது முன்னுரையில், "ஸ்ரீமான் பாண்டித்துரைச்சாமித் தேவர் அவர்கள் மதுரையில் தமிழ்ச்சங்கம் ஸ்தாபிக்கப் பெருமுயற்சி செய்த காலத்தில், அவ்விஷயத்தில் ஊக்கமின்றியிருந்த மதுரைமாநகரினரை ஊக்குதற் பொருட்டு வரைந்தது மதுரை மாநகராம். ஆசிரியர் சித்தூரிலிருந்து ரெயில் பிரயாணஞ் செய்த சிரமத்தையும் பொருட்படுத்தாது, தமது விடுதியிற் குழா (water-pipe) யின் கீழ்

ஸ்நாநஞ் செய்து கொண்டே இம் மதுரைமாநகர் அகவலினை, அடியேன் எழுதிவரச் சிறிதும் தங்குதடையின்றிக் கூறி முடித்தனர். இதனாலே அவருக்குத் தமிழின் மாட்டுள்ள அளவற்ற அன்பு புலனாகும்'' என்று பகர்வார்.

தாம் பிறந்த மதுரையின் மீதுள்ள பற்றால் ஒவ்வோர் ஆண்டும் இரண்டுமாதக் கல்லூரி விடுமுறையின் போது சாஸ்திரியார் மதுரை வந்துவிடுவார்.

**''நின்னிற் பிரிந்து நெடுங்கலை கற்பேன்**
**சென்னை போந்துஞ் சிறியே னுள்ளம்**
**பன்னாள் சென்றும் பரிந்து நிற்காண்**
**வேட்கை மேவி விரைந்தாண்டு தோறு(ம்)**
**இருமதி நின்வயி னிருந்தேன்''**

என்று கூறுவதால் அறிகிறோம். 'ஆலவாயின் அவிர்சடைக் கடவுளுடன் வாதிட்ட கீரன் அவதரித்த மதுரை நீகொலோ? அமிழ்தினும் இனிய தமிழின் சுவையறிந்த வையை பாயும் மதுரையும் நீதானோ? உச்சிமேல் புலவர்கொள் நச்சினார்க்கினியர் இருந்த மதுரையும் நீதானோ? மதுராய்! நாணிலை போலும்! மனைவி சொற்கேட்டுத் தாயைப் பரிதவிக்கவிடும் பாதகனை ஒத்த மதுரைநகரமே! உன்னிடம் யான் பிறந்தேன் என்று கூறவும் வெட்கப்படுகிறேன். மதுராய்! மீளாய், தமிழ்நலம் விரும்பி உய்வாய். பொருள் மீது மட்டுமன்று, தமிழ்மீதும் நாட்டம்கொள்' என்று மதுரை மாநகரினர்க்குச் சாஸ்திரியார் அறிவுறுத்துகிறார்.

அடுத்து, ஒன்பது பாடல்களாலாகிய போலியாராய்ச்சியன் அமைந்துள்ளது. இது, டெனிசன் ஆங்கிலத்தில் எழுதிய 'The Poet's Mind' என்னும் பாடலைப் பெரிதும் தழுவி எழுதியது. நூலில் குறை காண்பது ஒன்றே நூலாராய்ச்சி என்று கருதி வீணே திரியும் ஒருவனைச் சுட்டிப்பாடியது. அடுத்துப் பன்னிரண்டு அடிகளில் ஆசிரியப்பா யாப்பில் அமைந்திருப்பது ஓர் ஐயப்பாடு. டெனிசன் எழுதிய 'A Voice spake out of the skies' என்ற கவிதையின் மொழி பெயர்ப்பே 'ஓர் ஐயப்பாடு'. 'உலகில் உள்ள எல்லாப் பொருள்களும் இந்த மண்ணுலகமும் இன்னும் ஒரு கணப் பொழுதில் அழியும்' என்னும் வானொலி (அசரீரீ) முழங்குகிறது. இதனைப்

பேரறிவாளன் ஒருவனும் இரப்போன் ஒருவனும் கேட்கின்றனர், சோறு வேண்டும், இல்லையல் இறப்பேன் என்கிறான் இரப்போன். இவ்வுலகம் அழியுமேல் இவனுக்கு உணவு கொடுத்து இவன் இங்கு வாழ்வதாலோ, இவனுக்கு உணவை நான் அளித்ததாலோ யாது பயன்? என்று அறிவாளன் சிந்திக்கிறான்' என்பதே பாடற் கருத்து. உரையாசிரியர் ந. பலராம ஐயர், ''எல்லாம் நிலைபேறின்றி யழியுமாயினும் அவனவன் செய்யற்பால கடமைகளைச் செய்தலே தக்கதென்பது ஆசிரியர் கருத்துப் போலும்'' என்று உரைக்குறிப்பில் கூறுகிறார்.

இதனை அடுத்து, ஏழு பாடல்களாலாகிய பரிந்துரை உள்ளது. திருமதி. அசலாம்பிகை அம்மையாரின் இனிமை வாய்ந்த கவிதைகளைக் காணும்பொழுதெல்லாம் சாஸ்திரியார் மகிழ்ச்சி யடைவார். அசலாம்பிகை அம்மையார் தமது தந்தையாகிய பெருமாள் ஐயனை இழந்து மனம் கலங்கியபோது, ஆற்றியிருக்குமாறு சாஸ்திரியார் விடுத்த கடிதம் இது.

அடுத்து, இருபது பாடல்களைக் கொண்ட முடிசூட்டிரட்டை மணிமாலை காணப்படுகிறது, இஃது ஏழாம் எட்வர்ட் இந்தியச் சக்கரவர்த்தியாக 1902ஆம் ஆண்டு முடி சூட்டிக் கொண்டபோது பாடியது. இறுதியாகப் பதினொன்று பாடல்களுடன் பண்டிதநாட்டம் அமைந்துள்ளது. சாஸ்திரியார் இருமல் நோயால் வருந்தியபோது, தம் தந்தையார் கோவிந்தசிவனாரின் அறிவுரைப்படி நாற்பத்தைந்து நாட்கள் திருப்பரங்குன்றத்தில் தங்கியிருந்தார். தன்னுடைய பிணியை நீக்கியருள ஞானபண்டிதனாகிய திருப்பரங்குன்றத்துக் குமரனைப் பாடியது இப்பாடல்கள். ஒவ்வொரு பாடலும் 'பண்டிதனே' என்னும் ஈற்றுச் சீருடன் முடிவடைகிறது. பத்துப்பாடல்களில் தம்முடைய இருமல் பிணியைக் குறிப்பிடுகிறார். இவை தோத்திர வடிவாகப் பாடப் பெற்ற பாடல்களாகும்.

மரபுக் கவிதைகளின் வழியே பற்பல புதுமையான கருத்துக் களைச் சாஸ்திரியார் கூறியுள்ளார். கடற்கரையுலாவில் அகப் பொருளில் அறிவியல் கருத்துக்களையும், 'தாமரைத் தடத்தில்', அகத்துறை வழி, தர்க்க நியாயங்களையும் சாஸ்திரியார் விளக்கி யுள்ளார். 'போலியாராய்ச்சியன்', 'ஓர் ஐயப்பாடு' இரண்டும் ஆங்கிலக் கவிதையில் சாஸ்திரியாருக்கு உள்ள ஈடுபாட்டையும் புலமையையும் காட்டுகிறது. மதுரையில் தமிழ்ச் சங்கம் அமைய,

மதுரை மாநகர மக்களை அறிவுறுத்தும் பாடல் இவருக்குத் தமிழ் மீதுள்ள தீராக் காதலைச் சுட்டுகிறது. 'கலங்கரை விளக்கம்' இவரது கற்பனைக்கும் கவித்திறனுக்கும் ஓர் உரைகல். 'பட்டினக் காட்சி' மிகச் சிறந்த சொல் ஓவியம். ஆசிரியரது தர்க்க வாதங்கள் இதில் மிகச் சிறப்பாக வெளிவந்துள்ளன. மொத்தத்தில் 'செந்தமிழ்ப் பாவலீர்'க்கு மட்டுமன்று; அனைவருக்கும் சாஸ்திரியார் 'விருந்து' படைத்துள்ளார்.

*சித்திரகவி விளக்கம்*

1897ஆம் ஆண்டு சித்திரகவி விளக்கத்தின் முதற்பதிப்பைச் சாஸ்திரியார் வெளியிட்டார். அந்நூலின் படி கிடைக்கவில்லை. சாஸ்திரியாரின் மறைவுக்குப் பின் 1939ஆம் ஆண்டு இரண்டாம் பதிப்பு வெளிவந்தது. அதன் முகவுரையில் உரையாசிரியர் ந. பலராம ஐயர், ''சென்னைப் பல்கலைக்கழகத்தார் 1897ஆம் ஆண்டு பி.ஏ. வகுப்பிற்குத் தமிழ்ப்பாட புத்தகங்களுள் ஒன்றாகத் தண்டி அலங்காரம் சொல்லணியியல் வைத்திருந்தனர். அக்காலத்தில், சுத்தமான பாடத்தோடு கூடிய தண்டியலங்காரப் பிரதி கிடைப்பது அரிதாக இருந்தது. சித்திரகவிகளைச் சித்திரங்களில் அமைத்து நோக்குவதற்குச் சித்திர உருவங்கள் இன்னவாறு தீட்டப்பட வேண்டுமென்றும், எழுத்துக்களை இன்னவாறு அமைக்க வேண்டுமென்றும், செவ்வனே புலப் படாமையினால், மாணாக்கர்கள் பெரிதும் இடர்ப்பட்டமை கண்டு, ஆசிரியர் வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார் அவர்கள், சித்திர கவிகளின் இயல்பு நன்கு புலப்படச் சித்திரகவிவிளக்கம் என்னும் சிறு புத்தகமொன்றைத் தமது மாணாக்கர்களின் உபயோகத்திற்கென்றே அச்சிட்டு உபசரித்தனர்'' என்று குறிப்பிடுவார். மேலும் சாஸ்திரியார், இயற்றமிழ் மாணவர் களுக்குக் கற்பிக்கும்போது, தண்டியலங்காரச் சித்திரகவிகளுடன் வடமொழி அணி இலக்கணங்களில் கண்டு புதியனவாகப் புனைந்த சில சித்திர கவிகளையும் ஒன்றாகச் சேர்த்துச் சித்திரமாக்கினார். சில சித்திர கவிகளைச் சாஸ்திரியாரும் எழுதி, 'கலாவதி' நாடகத்தில் சேர்த்துள்ளார். இச்சித்திர கவிகளின் எடுத்துக்காட்டுப் பாடல்களுக்கு ந. பலராம ஐயர் உரை எழுதியுள்ளார்.

சதுரங்க துரக கதி பந்தம் என்னும் சித்திரகவிக்கு, ந. பலராம ஐயர் அவர்களே எடுத்துக்காட்டுப் பாடல் எழுதி உள்ளார். ந. பலராம ஐயர் எழுதிய வல்லிபரிணயம் நாடகத்தின் ஆசிரிய வணக்கப் பாடலே

இது. சித்திர கவிகளைக் கற்பவருக்கு இந்நூல் மிகவும் பயனுடைத்தாகும்.

## *இசைப்பாடல்கள்*

சாஸ்திரியார் நினைத்த உடனே கவிதை புனைவதில் வல்லவர். அவர் தம்முடைய நாடகங்களில் பல கவிதைகளை இயற்றிச் சேர்த்துள்ளார். அத்துடன் அமையாது. தமது 'ரூபாவதி', 'கலாவதி', ஆகிய நாடகங்களில் இசைப்பாடல்களையும் சேர்த்துள்ளார். டாக்டர் ந. சுப்ரமணியன் அவர்கள், ''தமிழிசையின் அடிப்படையில் வளர்ந்த கர்நாடக சங்கீதத்தில் பல கீர்த்தனைகளை இயற்றி அவற்றைத் தமது ரூபாவதி, கலாவதி என்னும் நாடகங்களில் ஏற்ற பெற்றி அமைத்துள்ளார்'' என்று தமது 'பரிதிமாற் கலைஞரும் நாடகத் தமிழும்' என்ற நூலில் குறிப்பிடுவார். 'ரூபாவதி'யில் பதினோரு இசைப்பாடல்களையும், 'கலாவதி'யில் பதினேழு இசைப் பாடல்களையும் இயற்றிச் சேர்த்துள்ளார் சாஸ்திரியார்.

சாஸ்திரியார், ''இசைத் தமிழில்வழி நாடகத் தமிழிற்கு இயக்கமில்லை ஆடையற்ற நங்கை வெளிப்படாதவாறு போல, இசையற்ற நாடகத் தமிழும் வெளிப்படுதலின்றி உள்ளடங்கியே யிருத்தல் வேண்டும்'' என்று 'தமிழ்மொழியின் வரலாறு' என்னும் நூலில் கூறுவார்.

சாஸ்திரியார் தம்முடைய கவிதைப்பணியில், பழைய மரபை உருவத்தில் கடைப்பிடிக்கிறார். தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகிய மும்மொழிப்புலமை காரணமாக, உள்ளடக்கத்தில் பற்பல புதுமைகளைச் செய்திருக்கிறார்.

# 4
# செம்மாந்த உரைநடை

**வி.கோ.** சூரியநாராயண சாஸ்திரியார் இயற்றிய உரைநடை நூல்களுள் நமக்குக் கிடைத்திருப்பன ஐந்து நூல்களே. அவற்றுள் 'மதிவாணன்' உயரிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்ட புதினம். 'தமிழ் மொழியின் வரலாறு' மொழி ஆராய்ச்சி உணர்வோடு எழுந்த முதல் நூல்; எளிய தமிழ் நடையான் இயன்றது. 'ஸ்ரீ மணியசிவனார் சரித்திரம்' சாஸ்திரியாரின் தந்தையாருடைய ஞானாசிரியராகிய மணியசிவனார் பற்றியும் அவருடைய சீடர்களைப் பற்றியும் கூறும் வாழ்க்கை வரலாற்று நூல். வடமொழிச்சொற்கள் அதிகம் கலந்து எழுதப்பட்ட நூல் இது. இம்மூன்று நூல்களும் சாஸ்திரியார் காலத்திலேயே பதிப்பிக்கப்பெற்றன. சாஸ்திரியார் மறைந்த பிறகு, அவர் பல சமயங்களில் எழுதிய கட்டுரைகளை அவருடைய மரபினர் இரண்டு நூல்களாகத் தொகுத்து வெளியிட்டனர். அவை, 'தமிழ்ப் புலவர் சரித்திரம்', 'தமிழ் வியாசங்கள்' ஆகிய இரண்டுமாம்.

*மதிவாணன்*

'மதிவாணன்' சாஸ்திரியார் படைத்த ஒரே புதினமாகும். இந்நூலுக்குச் சாஸ்திரியார் இட்டபெயர், 'மதிவாணன் - புதுவது புனைந்ததோர் செந்தமிழ்க் கதை', 'ஞான போதினி' என்னும் மாத இதழ்வாயிலாக, 1897ஆம் ஆண்டின் இறுதியிலிருந்து வெளிவரத் தொடங்கிய 'மதிவாணன்' ஏறத்தாழ மூன்றாண்டுகளுக்குப் பின் முற்றுப்பெற்றது. 1902ஆம் ஆண்டு நூல் வடிவாகப் பதிப்பிக்கப் பெற்றது. சாஸ்திரியார், நூலை, சூணாம்பேட்டை ஜமீன்தார் முத்துக்குமாரசாமி முதலியாருக்கு உரிமையாக்கியுள்ளார்.

நூலின் முகவுரையில் சாஸ்திரியார், '1897ஆம் ஆண்டு 'ஞான போதினி' பத்திரிகையில் இக்கதை தொடங்கியது என்றும் சி.வை. தாமோதரம் பிள்ளை அவர்களின் வேண்டுகோளின்படி இந்நூல்

வகுக்கப்பட்டது என்றும், அவர் உயிரோடு இருக்கும்போது இந்நூல் முற்றுப் பெறாதது குறித்துத் தாம் வருந்துவதாகவும்' குறிப்பிடுவார். மேலும், ''இப்பதிப்பிற்கும் ஞானபோதினிப் பதிப்பிற்கும் அதிகார வமைப்பின் மட்டிற் சிறிது வேற்றுமை காணப்படும்.... அவகாசக் குறைவினானும், ஆதி வியாதிகளானும் இந்நூலினை யெண்ணி யாங்கு முடித்தற்கியலாதுபோயிற்று'' என்றும் கூறுவார்.

'மதிவாணன்' ஏறுபோல் பீடுநடைபோடும் செம்மாந்த செந்தமிழ் நடையால் இயன்றது. இந்நூலைத் தமிழ் மொழியில் ஓரளவு நல்ல பயிற்சி உள்ளவர்களாலேயே புரிந்து கொள்ள இயலும். சாஸ்திரியார் தம்முடைய 'தமிழ்மொழியின் வரலாறு' என்னும் நூலில், ''பிறரெல்லாம் படித்துணர்ந்து கொள்ளத்தக்க தெளிவான நடையிலெழுதுவதே யாவரும் மேற்கொள்ளத்தக்கது.... அருகிப்போன சொல்லுருவங்களைக் கிளப்பிக் கொணர்ந்து வழங்குதலும் நேரிதன்று'' என்று கூறுவார். 'கடினசந்திகளைப் பிரித்து எழுதுக; பொருள் வேறுபடும் என்றால் மட்டுமே சந்திகளைச் சேர்த்து எழுதுக' என்றெல்லாம் கூறும் சாஸ்திரியார் 'மதிவாணன்' புதினத்தில் உயரிய செந்தமிழ் நடையைக் கையாண்டது ஏன்?

இதற்கும் காரணத்தைச் சாஸ்திரியார் தம் முகவுரையில் குறிப்பிட்டுள்ளார். அங்குக் குறிப்பிடப்பட்டுள்ள சி.வை. தாமோதரம் பிள்ளையவர்களின் வேண்டுகோள் தான் யாது?

சாஸ்திரியாருக்குத் திராவிட சாஸ்திரி என்றபட்டம் கொடுத்த தாமோதரம்பிள்ளை, 'முழுவதும் உயரிய வசன நடையில் ஒரு நூல் எழுதித்தருமாறு வேண்டுகிறேன்' என்று வேண்டுகோள் விடுக்க, அதற்கு ஒப்புக்கொண்ட சாஸ்திரியார் எழுதிய நூலே 'மதிவாணன்.' இந்நூலின் உயரியநடைக்கு இதுவே காரணம். முகவுரையிலும் சாஸ்திரியார், நூல் முற்றுப் பெறுமுன் தாமோதரம்பிள்ளையின் மறைவுகுறித்து வருந்துவதற்குக் காரணம் இதுதான்.

'மதிவாணன்' நூல் ஒன்பது அத்தியாயங்களைக் கொண்டுள்ளது. கதை மிக எளிமையானது. பாண்டிய அரசர் தன் மகள் இன்ப வல்லியைத் தஞ்சைவாணர்தம் மகனாகிய மதிவாணனுக்கு மணமுடிக்க விரும்புகிறார். எதிர்நிலைத் தலைவனாக வரும் மாயவன் ஏற்படுத்தும் இடையூறுகளைக் கடந்து மதிவாணனுக்கும் இன்பவல்லிக்கும் திருமணம் நிகழ்கிறது. இக்கதையில் கதா பாத்திரங்களின் பெயர்களே அவர்களது பண்புகளை விளக்குகிறது.

மிக உயரிய செந்தமிழ் நடையில் இந்நூல் அமைந்துள்ளது. சான்றாக, "திருவளர்ந்தோங்கும் பரத கண்டத்துப் பாண்டிய நாட்டுத் தலைநகராகிய மதுரை யென்னும் மாநகரத்து வையையாற்றின் வடகரைக்கண், ஒரு நாட் காலைப் பொழுது புலர்ந்து சிறிது நேரஞ்சென்ற பின்றைச் செவ்வியமேனியன் சிறந்த நோக்கினன் பரந்த மார்பினன் பவள வாயினன் பதினாறாட்டைப் பிராயத்தான் ஓரிளந்தோன்றல் போர்க்கோலம் பூண்டு, புரவி மீதேறிக் காற்றினுங் கடுகித் தென்புல நோக்கி வாரா நின்றான்" என்ற இந்நூலின் முதல் வரியைப் பலரும் மனனம் செய்து ஒப்புவிப்பது உண்டு.

மதுரை நகரின் வாயிலில் உள்ள காவலர்கள், "உறைநீத்த வாளினர் உலம்பொரு தோளினர் கழலிடு காலினர் கவசயாக்கையர் சேகரச் சென்னியர் செங்கட்டீயினர் உரத்த குரலினர் ஓய்வின்றி யுலாவி நிற்பார்"என்று வருணிப்பார்.

உயரிய நடையிலேயே சைவ சமயக் கருத்துக்களையும் கூறிச்செல்கிறார் சாஸ்திரியார். காதலர் இருவர் ஊஞ்சலாடுகின்றனர். எதிரே நிலைக்கண்ணாடி உள்ளது. 'அவர்கள் நிலத்தினையுந்தியாடுந் தொறும் அவர்களுருவம் அவ்வாடியின் கண்ணே தோன்றுதலும், ஊசல் பின்னிடுந்தொறும் அவ்வுருவங்கள் மறைதலுமாயிருந்தன. அவ்வாடியை யுலகமாகக் கருதிக்கொளின், அதன்கண் அவர்களது உருவந் தோன்றுதலைப் பிறப்பாகவும் உருவம் மறைதலை மரணமாகவும் அவ்வூசலைக் கருமத் தொடராகவுங் கொள்ளலாம்; ஊசலாடி யோய்தலை யிருவினையொப்பி னிறுதியி லுண்டாகும் மலபரிபாக மென்னலாம்"என்று எழுதிச் செல்வார் சாஸ்திரியார்.

மணமுடிப்பதற்கு முன்பு, மணமக்கள் இருவரின் விருப்பத்தை அறிந்து கொள்ளுதல் வேண்டும் என்று 1902 ஆம் ஆண்டிலேயே கூறுகிறார் சாஸ்திரியார். பாண்டிய மன்னன் கூற்றாக, "மக்கண் *மனமறிந்தே வதுவை முடித்தல் வேண்டுமென்பது எந்தங்கொள்கை"* என்றும், "நீவிரிருவருமன்றே நெடுநாள் ஒருமித்து வாழுநர்?..... நும்மிருவர்க்கும் மணவினை செய்து முடித்த பின்னர் ஏதேனும் விருப்ப வேறுபாடு நிகழின் அது பலவகைத் துன்பங்கட்கு மிடனாகு மன்றே?" என்றும் கூறுவதைக் காண்க.

பெண்களைப் பற்றி மிக உயர்வாகக் கூறுகிறார் சாஸ்திரியார். "மகளிரே மனைக்குச் செல்வம்; மகளிரே மனைக்கு அணிகலம்; மகளிரே மனைக்கு மங்களம்; மகளிரே மனைக்குக் காவல்; மகளிரே

மனைக்கு மலர்; மகளிரில்லாதவிடம் நுகர்ச்சிக்குரிய பொருள் களனைத்தும் நிரம்பியதோர் தேவமாளிகையே யாயினும் அஃது அழகற்றது கண்டீர்; மற்று மகளிருள்ளவிடம் ஒன்றுமில்லாததோர் கொடும்பாலையே யாயினும் அஃதன்றே அழகு சிறந்து ஒளிராநிற்கும். மனைநிறைந்தவர் மகளிரேயென்க'' என்று பெண்மையின் சிறப்பைச் சுட்டுகிறார்.

தமிழ் மரபுக்கேற்ப, மதிவாணனும் இன்பவல்லியும் கண்டதும் காதல் கொள்கின்றனர். இதனைச் சாஸ்திரியார்,

> **"கண்டவக் கணத்தினே காதல் கொண்டிடா**
> **தெண்டகு மன்பின ரெவர்கொ லாபவோ?"**

என்பார். இஃது ஆங்கிலக் கவிஞர் கிறிஸ்டோபர் மார்லோவின் Hero and Leander என்ற பாடலின் 176 ஆம் வரியான "Who ever loved that loved not at first sight?" என்பதன் மொழிபெயர்ப்பே.

கதாபாத்திரங்களை அறிமுகப்படுத்த அக் காலத்திலேயே சில உத்திகளைக் கையாண்டுள்ளார் சாஸ்திரியார். கதாபாத்திரத்தை ஆசிரியர் தாமே அறிமுகம் செய்தல்,பிற கதாபாத்திரம் வழியாக அறிமுகம் செய்தல், இக்கதாபாத்திரம் யார் என்று ஆவலைத் தூண்டும் முறையில் எழுதிச்செல்லுதல் ஆகிய உத்திகளைக் கூறலாம்.

இந்நூலில் உரிமையுரையையும் சேர்த்து 35 பாடல்கள் உள்ளன. அவற்றுள் 27 பாட்டுகளைச் சாஸ்திரியாரே இயற்றியுள்ளார். எஞ்சியவை, திருக்குறள், மணிமேகலை, நாலடியார், திருவாசகம் ஆகியவற்றின் பாடல்கள்.

சாஸ்திரியார், 'மதிவாணன்' என்ற பெயரின் கீழ், 'புதுவது புனைந்ததோர் செந்தமிழ்க்கதை' என்று பொருத்தமாகக் குறித்துள்ளார். செந்தமிழில் புனையப்பட்ட கதை; புதுமையான திருமணம் பற்றிக் கூறுகிறது. பெற்றோர் மணவினை குறித்தாலும் மணமக்கள் காதல் வயப்பட்ட பிறகே திருமணம் நிகழ்கிறது.

1902 ஆம் ஆண்டு 'ஞானபோதினி' ஜூலை இதழில்(ஸம்புடம் V1901-1902, பக். 472-475) சாஸ்திரியாரின் இயற்றமிழ் மாணவருள் ஒருவரான வ.சு.சண்முகம் பிள்ளை 'மதிவாணன் ஆராய்ச்சி' என்று ஒரு கட்டுரை எழுதியுள்ளார். 'ஆங்கிலச்

சொற்றொடர்களைத் தமிழில் எவ்வாறு மொழிபெயர்ப்பது என்று இடர்ப்படுவோர்க்கு இந்நூல் பெரிதும் உதவும்' என்பார்.

தமிழ் இலக்கிய வரலாற்றிலேயே முழுவதும் உயர்ந்த செந்தமிழ் நடையான் இயன்ற புதினம் இது ஒன்றுதான். நடைச்சிறப்புக்காகத் தமிழ் ஆர்வலர்கள் படிக்க வேண்டிய நூல் 'மதிவாணன்'.

*தமிழ்மொழியின் வரலாறு*

இந்நூல் 1903ஆம் ஆண்டு சாஸ்திரியார் மறைவதற்குமுன் வெளியிட்ட நூலாகும். இந்நூலை, சென்னைக்கிறித்தவக் கல்லூரியின் முதல்வராகவும், சென்னைப்பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராகவும் விளங்கிய டாக்டர் மில்லர் அவர்களுக்குச் சாஸ்திரியார் உரிமையாக்கினார். சென்னைக் கிறித்தவக்கல்லூரியில் வரலாற்றுத் துறைப் பேராசிரியராக விளங்கிய கெல்லட் அவர்கள் ஆங்கில முன்னுரை எழுதியுள்ளார். இந்நூலை எழுதுவதற்குச் சாஸ்திரியார் பல ஆண்டுகளாக உழைத்தார் என்று கெல்லட் முன்னுரையில் குறிப்பிடுவார். அடுத்து, சாஸ்திரியாரின் முகவுரை உள்ளது. தமிழ்மொழி வரலாறு பற்றியநூல் இல்லாததாலும், தமிழில் கலாநாயகர் பட்டத்திற்குப் பயிலும் மாணவர்கள் 'தமிழ்ப் பாஷைச்சரித்திரம்' என்னும் பாடத்திற்கு உரிய நூல் இன்றித் துன்பப்படுவது கண்டும் இந்நூல் இயற்றியதாகக் கூறுவார் சாஸ்திரியார்.

பத்துத் தலைப்புக்களில் அமைந்துள்ள இந்நூல் நுவலும் கருத்துக்களைச் சுருக்கமாகக் காணலாம்.

*நூல்நுவலும் கருத்துக்கள்*

*1. ஆதிவரலாறு*

மத்திய ஆசியாவிலிருந்து இந்தியாவிற்குள் வந்தவர்கள் தமிழர். சிலர் தமிழர் இந்தியாவிலேயே இருந்தவர் என்பர். வேறுசிலர் கடல்கொண்ட 'இலெமுரியா' என்னும் நாட்டிலிருந்துவந்தவர் என்பர். ஆரியர் கைபர்க் கணவாய் வழியாக இந்தியாவிற்குள் வந்தனர். அவர்கள் வருகைக்கு முன்பே உழவிலும் வாணிகத்திலும் தமிழர் சிறந்து விளங்கினர். எகிப்தியர் வகுத்த நெடுங்கணக்கே

தமிழகம் முழுவதும் பரவியது. அது முதற் பேச்சுவடிவில் இருந்த தமிழ்மொழி ஏட்டுவடிவை அடைந்தது.

## 2. வடமொழிக்கலப்பு

வடமொழியாளர் ''தமிழரிடத்திருந்த பல அரிய விஷயங்களையும் மொழி பெயர்த்துத் தமிழர் அறியுமுன்னரே அவற்றைத் தாமறிந்தன போலவும், வடமொழியினின்றுமே தமிழுக்கு அவை வந்தன போலவும் காட்டினர்''. வடமொழிச்சொற்கள் தமிழில் கலந்தது போல, தமிழ்ச்சொற்கள் வடமொழியில் ஏன் கலக்கவில்லை? வடமொழி தமிழோடு கலக்கும் முன்பே அது ஏட்டுவழக்காய் நின்றுவிட்டது. ஏட்டு வழக்கு மட்டுமே உள்ள ஒரு மொழியுடன், ஏட்டு வழக்கும் பேச்சு வழக்குமுள்ள மொழி கலந்தால், முன்னதன் சொற்களே பின்னதில் வந்து சேரும். இதுமொழிநூல் உண்மை. சமணர்கள் அளவற்ற வடசொற்களைத் தமிழில் கலந்தனர். மணிப்பிரவாள நடையைச் சாடுகிறார் சாஸ்திரியார். ''தமிழும் சமஸ்கிருதமும் கலந்த பாஷை கேள்விக்கின்பம் பயக்குமென்ற போலியெண்ணமே இத்தகைய ஆபாசபாஷையொன்று வகுக்குமாறு தூண்டிற்று'' என்பார்.

'இரட்டைப்பதம்' என்ற புதிய குறியீடு ஒன்றைச் சாஸ்திரியார் குறிப்பிடுகிறார். ஒரு சொல் வடமொழியிலிருந்து நேரேவருதல்; காட்டு: 'விஞ்ஞாபனம்'. அல்லது வடமொழியின் பாகத வழியாக வந்து வழங்குதல்; காட்டு 'விண்ணப்பம்' வடமொழியில் பால் நோக்கு சொல் நோக்கால் எழும்; தமிழில் அவை பொருள் நோக்கால் ஏற்படும். அணியிலக்கணத்தை விரிவாகத் தமிழ் வடமொழியிலிருந்து பெற்றது.

## 3. மூவகைப்பாகுபாடு

தமிழ்மொழி இயல், இசை, நாடகம் என்ற முப்பிரிவுகளை உடையது. இயற்றமிழ், செந்தமிழ், கொடுந்தமிழ் என இரு வகையாக இயங்கியது. இயற்றமிழே முன்னர்த் தோன்றியது. இயற்றமிழின்றி இசை, நாடகத்தமிழ் தனித்து இயங்குவன அல்ல. இயற்றமிழ், தாளத்தோடு பாடப்பட்டால்தான் இசைத் தமிழின் பாற்படும். இசைத் தமிழ் நாடகத் தமிழிற்கு முன்னர்த் தோன்றியது. இசைத் தமிழின்றி நாடகத் தமிழிற்கு இயக்கமில்லை.

'நாடகம் என்பது வடசொல். ஆரியரோடு கலந்த பிறகே தமிழர்க்கு நாடகத் தமிழ் ஏற்பட்டது' என்ற கூற்றை மறுப்பார் சாஸ்திரியார். தமிழர்கள் 'கூத்து' என்ற சொல்லையே பயன்படுத்தினர். நாடகம் என்பது கதை தழுவி வரும் கூத்து.

## *4. ஐவகை இலக்கணம்*

தொல்காப்பியம், எழுத்து, சொல், பொருள் என வகுக்கப் பட்டுள்ளது. இறையனாரகப் பொருள் உரையின் வழி 'யாப்பு' தனி இலக்கணமாக விளங்கியது எனத் தெரிகிறது. வடநூல் தொடர்பால் அணியிலக்கணத்தைத் தமிழ்பெற்று, இலக்கணம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்தாயிற்று.

பொருளணிகளில் பல உவம அணியின் அடியாகவே தோன்றின. "இது வடமொழி அப்பைய தீக்ஷிதரவர்களுக்கும் உடன்பாடாதல்,

**"உவமை என்னுந் தவலருங் கூத்தி**
**பல்வகைக் கோலம் பாங்குறப் புனைந்து**
**காப்பிய வரங்கிற் கவினுறத் தோன்றி**
**யாப்பறி புலவ ரிதய**
**நீப்பறு மகிழ்ச்சி பூப்ப நடிக்குமே"**

என்ற அவரது 'சித்திரமீமாஞ்சைக்' கூற்றினான் விளங்கும்" என்பார் சாஸ்திரியார். மாறனலங்காரத்தை மிகச் சிறந்த நூல எனக் கூறும் சாஸ்திரியார் பற்பல இலக்கண நூல்களையும், பாட்டியல் நூல்களையும் அவற்றின் தன்மைகளையும் கூறுகிறார். யமகம், திரிபு, மடக்கு, சிலேடை, போன்றவற்றைச் சாடுகிறார் சாஸ்திரியார். இவற்றை 'உயிரில்லாப் பாட்டுக்கள்' என்றும் பொருள் நலம் சிறந்த பாடல்களே 'உயிருள்ள பாட்டுக்கள்' என்றும் கூறுவார்.

## *5. பாஷையின் தோற்றமுந்தொன்மையும்*

மக்கள் கூடி வாழும் போது கருத்துப் பரிமாற்றத்திற்குத் தேவை ஏற்பட்டது. சில தன்மை முன்னிலைப் பகுதிகள் அறிகுறிவகையால் எழுந்திருக்கலாம். காட்டாக, 'ம'; 'ப', என்ற எழுத்துக்கள்; குழந்தைகள் முதலில் உச்சரிக்கும் அம்மா, அப்பா என்பவற்றைப் பார்ப்போம்.

தமிழில் மகரம் தன்மைப்பன்மையில் குறிக்கப்பயன்படுகிறது.(காட்டு: யாம், எம்மை) குழந்தைக்குத் தாய் தன்னவளாயினள்; எனவே 'அம்மா' என்றும், தாயை நோக்கத் தந்தை தன்னினின்றும் சிறிது விலகியவனாக மதிக்கப்படுதற்கு அறிகுறியாகப் பகார ஒலியால் அப்பா என்றும் அழைக்கப்படுகிறான். மொழி என்பது மக்கள் ஆக்கப் பொருளே. ஈதிவ்வாறாக தமிழ் நூலாசிரியர் பலரும், இக்காலத்தினும் ஆங்கில நூற்பயிற்சியில்லாதவர்களும் தமிழ் மொழியும் வடமொழியும் தேவபாஷை என்பர்.

உலகில் உள்ள தொன்மொழிகளுள் ஒன்று தமிழ். பேச்சு வழக்கின்றி ஏட்டுவழக்காய் நிற்பதே தொன்மொழி என்ற கூற்று ஏற்புடைய வாதமன்று. நாவின் மேலண்ணத்தைத் தொடுதலால் பிறக்கும் 'ட்', ண்', 'ர்', 'ல்', ழ்', ள்', ற், ன்' ஆகிய எட்டு மெய்யெழுத்துக்களையும் கொண்டு சொற்கள் தொடங்காது. மேலண்ணத்தைத் தொட்டு உச்சரிக்க முயற்சி மிகுதியும் தேவை; எனவே அவை மொழிக்கு முதலில் வாரா. இது கொண்டும் தமிழ் தொன்மொழி என அறியலாம். வால்மீகியும் வியாசரும் தமது நூல்களில் பாண்டிய நாட்டைக் குறிப்பிட்டுள்ளனர். அடியார்க்கு நல்லாரின் சிலப்பதிகார உரையின் அடிப்படையிலும், பிற தமிழ் இலக்கியங்களின் அடிப்படையிலும் 'இலெமுரியா' என்ற நிலப்பரப்புப் பற்றிப் பேசுவார் சாஸ்திரியார்.

### *6. பாஷையின் சிறப்பியல்பு*

இரண்டு மொழிகள் ஒத்து இருக்காது; தாய்மொழியும், வழி மொழியுமே வேறுபடும். எடுத்துக்காட்டு, தமிழும் மலையாளமும். 'ற, ழ, ன' என்ற மூன்று எழுத்துக்களும் தமிழின் சிறப்பு எழுத்துக்கள். தமிழின் வழிமொழிகள் அல்லாத பிற மொழிகளில் இவ்வெழுத்து ஒலிகள் இல்லை. தமிழில் கூட்டெழுத்து இல்லை; ஆனால் கூட்டொலி உண்டு. ஆனால் வரிவடிவில் அவை தனித்தனி எழுத்துக்கள்.

ஒவ்வோர் ஒலிக்கும் ஒவ்வோர் எழுத்தே இருக்க வேண்டும். ஓரெழுத்து இரண்டு மூன்று ஒலிகளைக் குறித்தல் தவறு. அது மொழியின் குறை. தமிழில் 40 ஒலிகள் இருக்க, வரிவடிவில் 31 எழுத்துக்களே உள்ளன. ஆதியில் தமிழில் 31 ஒலிகளே இருந்தன.

தமிழர்கள் முற்றுகரத்தையும் குற்றுகரமாகவே உச்சரிக்கின்றனர். முற்றுகரமென்ற பாகுபாடு அத்துணை வேண்டுவதன்று. இடைச்சொற்களும் உரிச்சொற்களும் முன்னொரு காலத்தில் பெயர் வினைகளாயிருந்தன. பாலையும் எண்ணையும் தனித்தனியே கூறாது, 'பால்' என்ற ஒன்றையே தமிழ் இலக்கணம் கூறுகிறது. அஃறிணைப் பால்பாகுபாட்டுச் சொற்கள் தமிழில் இருந்தும் இலக்கணத்தில் அஃறிணைப் பால்பாகுபாடு இல்லை.

ஆதிகாலத்தில் 'நிகழ்காலம்' என்ற ஒன்று ஏற்படவேயில்லை. எனவேதான் தொல்காப்பியனாரும் நிகழ்காலத்திற்கென்று வேறு இடைநிலைகள் கூறாது சென்றார். நன்னூலார் 'ஆநின்று, கின்று, கிறு' என்ற மூன்றுடன் அமைந்தார். தமிழ்மொழிக்குப் பின்வருமாறு காலப்பாகுபாடுகள் வேண்டும்.

*இறந்தகாலம்*

**இறப்பில் இறப்பு-(எ.கா) செய்திருந்தான்**
**இறப்பில் நிழழ்வு-(எ.கா)செய்திருக்கிறான்**
**இறப்பில் எதிர்வு-(எ.கா.) செய்திருப்பான்.**

*நிகழ்காலம்*

**நிகழ்வில் இறப்பு-(எ.கா.)செய்யாநின்றான்**
**நிகழ்வில் நிகழ்வு-(எ.கா.)செய்யாநிற்கிறான்**
**நிகழ்வில் எதிர்வு(எ.கா.) செய்யாநிற்பான்**

*எதிர்காலம்*

**ஒன்றே-(எ.கா) செய்வான்**

மொழிக்குப் புதிதாக வரும் பொருள்களுக்கும் கருத்துக்களுக்கும் ''உற்ற தகுசொற்கள் நாடுதல் நேரிதன்றாம்''. ஒரு சொல்லுக்கு ஒரே சொல்லாகப் புதுச் சொல் இருக்க வேண்டிய தேவை இல்லை. பல சொற்களால் கூறலாம். நிகண்டுகளும், அகராதிகளும் சொற்பொருள் கூறியுள்ளன. ஆனால் சொற்பொருள் ஆராய்ச்சி செய்து கூறவில்லை. எண்ணிக்கை தொடர்பான சொற்களும் அளவைச் சொற்களும் தமிழ்ச் சொற்களே 'தொண்டு' என்பது ஒன்பதிற்குப் பெயர். அச்சொல்லை 'ஒன்பது' என்ற இடத்தில் நிறுத்தி, 'தொண்டு + நூறு = தொண்ணூறு' எனவும், 'தொண்டு + ஆயிரம் = தொள்ளாயிரம்' எனவும் கொண்டனர்.

## 7. பாஷை வேறுபடுமாறு

பேச்சு வழக்குள்ள மொழி எப்பொழுதும் பலவகையிலும் வேறுபட்டுக் கொண்டே இருக்கும். மொழி வளர்ச்சிக்குத் தடையாயின வழக்கற்றுப் போகும்; பயனுள்ளன நிலைபெறும். இது மொழிநூலிற் கொள்ளப்படும் 'இயற்கைப் பிரிநிலை'. 'சலாம்', 'சபாசு' போன்ற சொற்கள் இலக்கியங்களில் ஏறின. வாணிகம் காரணமாகவும் சொற்கள் மருவின. ஆரியர்கலப்பால் 'ர-ற', 'ழ-ள' வேறுபாடு மறைந்து ஒன்றாக உச்சரிக்கப்படுகின்றன.

வளர்மொழிகள் தனிநிலை, தொடர்நிலை, உருபுநிலை, பிரிவுநிலை என்ற நான்கு நிலைகளை உடையன. தமிழ் தொடர்நிலையிலிருந்து உருபு நிலையை நோக்கிச் செல்கிறது. ஏட்டு வழக்கும் பேச்சு வழக்கும் என்றும் வேறுபடும். இதற்குக் காரணம் பேச்சுத் தமிழ் அளவிற்கு ஏட்டுத் தமிழ் விரைவாக வேறுபாடு அடையாததுதான். மொழியின் இயக்கத்திற்குத் தக்கவாறு இலக்கணம் இயங்காவிட்டால் அது மொழிக்குக் கேடு விளைவிக்கும். நிகண்டு வகுத்த புலவர் செய்த தவறு சில சொற்கள் இலக்கியங்களில் ஏறக் காரணமாயிற்று.

## 8. நூற்பரப்பு

ஒரு மொழியின் நூற்ப்ரப்பு அம்மொழியின் முதிர்ச்சிக்கும் அம்மொழி பேசுவோரின் நாகரிகத் தன்மைக்கும் தக வேறுபடும். தமிழ் நூற்பரப்பைப் பின்வருமாறு காலப்பாகுபாடு செய்து காணலாம்.

1. ஆதிகாலம் : கி.பி. 100க்கு முற்பட்ட காலம்
2. இடைக்காலம் :
   (1) முற்பகுதி: கி.பி. 100 முதல் கி.பி. 600 வரை
   (2) பிற்பகுதி: கி.பி. 600 முதல் கி.பி. 1400 வரை
3. பிற்காலம்: கி.பி. 1400 முதல் இற்றை நாள் வரை

இப்பாகுபாட்டின் வழி தமிழ்மொழியில் உள்ள நூற்பரப்பு முழுவதையும் விளக்கமாகக் கூறுகிறார் சாஸ்திரியார். முற்காலச்சங்க நூல்கள் இயற்கை வனப்பையும் மக்கள் இயல்பையும் கூறின.

இடைக்காலத்து முற்பகுதி நூல்கள் சமயச்சார்பாகவும், பிற்பகுதி நூல்கள் சுதந்திரமாகப் புதுவதுபுனைந்து அணிகள் மேவியும் சென்றன.

## *9. பாஷையின் சீர்திருத்தம்*

''இக்காலத்தில் பண்டிதர் தமிழும் பாமரர் தமிழும் மிகவும் வேறுபடுகின்றன. இவ்விரண்டிற்கும் வேறுபாடு மிகுந்து கொண்டே போகுமாயின், பண்டிதர் தமிழ் வடமொழியைப் போலப் பேச்சு வழக்கற்று ஏட்டுவழக்காய் மட்டில் நின்றுவிடும்; மற்றுப் பாமரர் தமிழோ, தெலுங்கு, மலையாளங்கள் போல ஒரு வழிமொழியாய் அமைந்துவிடும். ... ஆகவே பிறரெல்லாம் படித்துணர்ந்து கொள்ளத் தக்க தெளிவான நடையிலெழுதுவதே யாவரும் மேற் கொள்ளத்தக்கது.'

''கடின சந்திகளை எப்பொழுதும் பிரித்தெழுதுக. பொருள் மயக்கமாவது, பொருள் வேறுபாடாவது உண்டாக்கவல்ல சந்திகளைச் சேராமற் பிரித்தே எழுதுக. சந்திசேராமையாற் பொருள் கெடுவதா யிருந்தால் அவ்விடத்தில் சந்தி சேர்த்தெழுதுக. எளிய சந்திகளைச் சேர்க்கினும் சேராவிடினும் ஒன்றுதான்.... மற்றுத் தமிழ்ச் செய்யுணடையிலும் இவை தழுவத் தக்கனவோ?... சந்தி சேர்த்து இசை நலங் கெடாமல் ஒருபாடந்தந்த பின்னர்ச் சந்தி பிரித்துப் பிறிதொரு பாடம் அதனடியில் தருதல் வேண்டும்.

''ஆங்கிலத்திலிருந்து 'குறியீட்டு இலக்கணத்'தை நாம் மேற்கொள்ள வேண்டும். இக்குறியீட்டிலக்கணத்தை வசன நடை கைவந்த வல்லாளரான ஆறுமுக நாவலரவர்கள் மேற்கொண்டு வழங்கியுள்ளார். இதனால் தமிழுக்கு நிறைய நன்மைகள் உண்டாகும்.

''மொழிபெயர்ப்பு வகையால் ஆங்கிலக் கருத்துக்கள் தமிழின்கண் எவ்வளவு புகினும் நலமே. இம்மொழிபெயர்ப்பு வகை ஒன்று போதாது. இன்னும் வேறு வகைகளும் வேண்டும். தமிழ்ப் பகுதிகளினின்று புதுச் சொற்கள் படைத்துக் கருத்தை வெளிப் படுத்தலாம். உள்ள சொற்களைத் திரித்தும் சில புதுக் கருத்திற்கு இடஞ் செய்யலாம். சிலர் ஆங்கிலக் கருத்துக்களுக்கு ஏற்றசொற்கள் தமிழ் மொழியில் காண்டல் அரிதாயின், வடசொற்களின் மூலமாக அவற்றைத் தமிழில் வெளியிடுகின்றனர். இவ்வளவு தூரஞ் சுற்றுவானேன்? தலை சுற்றித்தான் மூக்கைத் தொடல் வேண்டுமோ?

நேரே மூக்கைத் தொடக் கூடாதோ? ஆங்கிலச் சொற்களையும் 'திசைச் சொற்'களாக மேற்கொண்டலென்னை? மேற்கும் ஒரு திசையன்றோ? ....ஆங்கிலமொழி திசைச் சொற்குரிய நிலங்களினும் வடசொற்குரிய நிலங்களினும் பயிலப்படுவதேயன்றிச் செந்தமிழ்க் குரிய நிலத்தினும் பயிலப்பட்டு வருதலால், ஆங்கிலச் சொற்களைத் திசைச் சொற்களென மேற்கொள்ளுவதிலே யாது தடையோ? இவ்வாறு செய்தலே அறிவுடையோர் செயலாம். பழையன கழிதலும் புதியன புகுதலுமாகிய இவ்விரண்டும் பாஷையியக்கத்திற்குரிய இரண்டு கால்களென மதிக்கப்படுகின்றன. இவ்வுண்மையை யுய்த் துணர்ந்து தமிழ்ப்பாஷையின்கட் செய்ய வேண்டிய சீர்திருத்தங் களையுடனே மேற்கொள்ளுதல் தமிழ் மக்கள் கடனாம்.''

## 10. *முடிவுரை*

தமிழ், உயர்தனிச் செம்மொழி என நிறுவுவார். தமிழை அதன் வழிமொழிகளோடு அடக்குதல் தவறு என்பார். ''தமிழ்ப் பாஷையின் ஒழுகலாறு இன்னதென்று உய்த்துணர்ந்து கொண்டு, ஆற்று வெள்ளத்தின் வேகத்துடன் செல்வான் போல, அவ்வொழுக லாற்றினை யொட்டி அதனோடியைந்து தமிழ்ப் புலவருந்தம் பாஷையைச் சீர்திருத்திக் கொள்ள வேண்டும்.''

'தமிழ் மொழியின் வரலாறு' எனனும் இந்நூல் சாஸ்திரியாரின் பழுத்த அறிவின் முதிர்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். தமிழ் நூற்பரப்புப் பற்றி அவர் குறிப்பிடும்போது, அவருடைய தமிழறிவின் ஆழமும் அகலமும் புலனாகிறது. தமிழ் இலக்கணம் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்களைக் கூறும்போது, அவருடைய அறிவின் நுண்மை தெரிகிறது. சந்தி, குறியீட்டிலக்கணம், மொழி பெயர்ப்பு ஆகியவை பற்றி அவர் தெரிவிக்கும் கருத்துக்களில் வளருந்தமிழ் பற்றிய அவர் நோக்குகளும் புதுமையைப் போற்றும் தன்மையும் விளங்குகிறது. இந்நூலின் தலைப்பில் 'தமிழ் மொழி' என்று குறிப்பிட்டுவிட்டு, நூல்முழுவதும் 'தமிழ்ப்பாஷை' என்றே சாஸ்திரியார் குறிப்பிடுவார். 'பரிதிமாற் கலைஞர் நூற்றாண்டு விழா மலரி'ல் 'பரிதிமாற் கலைஙர் மறுபதிப்பீடு' என்ற கட்டுரையில், டாக்டர் க. கைலாசபதி கூறுவது போல், ''இது விஷயத்தில் மொழிநூல் கற்ற கலைஞரின் நிதானமும் அறிவியல் உணர்வும் வெற்றிபெற்றன'' என்று கூறலாம். மேலும் அதே கட்டுரையில் அவர்,

"வடமொழிக்கும் தமிழ் மொழிக்கும் ஏற்றத்தாழ்வு கற்பிக்காத சமரச மரபில் வந்தவர் கலைஞர்" என்று கூறுவது பொருத்தமான கருத்தே.

இந்நூல் தமிழ் மொழிபற்றி அறிவுபூர்வமாக ஆராய்ச்சி செய்த முதல் நூல். பற்பல துறைகளிலும் முன்னோடியாக விளங்கிய சாஸ்திரியார் மொழிநூல் ஆய்விலும் முதல்வர். இந்நூல் பயில்வார்க்கு, சாஸ்திரியாரின் அறிவின் ஆழம் வியப்பூட்டும்.

### *ஸ்ரீமணியசிவனார் சரித்திரம்*

மாங்குடி மணியசிவனார் என்பவர் சாஸ்திரியாரின் தந்தையாகிய கோவிந்த சிவனாரின் ஞானாசிரியர் இந்நூல் மாங்குடி மணிய சிவனாரின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் நூல். வடமொழி மிக அதிகமாகக் கலந்து எழுதப்பட்ட நூல். இந்நூலைச் சாஸ்திரியார் 1896ஆம் ஆண்டு இயற்றினார். மணியசிவனார் மீது சாஸ்திரியார் பாடிய 'மணியசிவனார் கலிவெண்பா', 'பாவலர் விருந்து' என்னும் நூலில் உள்ளது.

### *தமிழ்ப்புலவர் சரித்திரம்*

சாஸ்திரியார் மறைவுக்குப் பின் வெளிவந்த நூல் இது. சாஸ்திரியார் பற்பல பத்திரிகைகளிலும், தாம் பதிப்பித்த நூல்களின் முகவுரையிலும் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு இந்நூல். இதன் முதற்பதிப்பு 1933ஆம் ஆண்டு, அதாவது சாஸ்திரியார் மறைந்து 30ஆண்டுகள் கழித்து வெளியாயிற்று. இக்கட்டுரைகளைத் தொகுத்து வழங்கிய ந. பல்ராம ஐயர் முகவுரை வழங்கியுள்ளார். 'தமிழ்ப்புலவர் சரிதம்' என்ற தலைப்பில் சாஸ்திரியார் 'ஞானபோதினி' பத்திரிகையில் எழுதிய கட்டுரையை அடுத்து, சயங்கொண்டான், புகழேந்திப்புலவர், வைத்தியநாத நாவலர், சுப்பிரமணியதீக்ஷிதர், மயிலேறும் பெருமாள் பிள்ளை, சுவாமிநாத தேசிகர், அருணாசல கவிராயர், கடிகை முத்துப் புலவர், தாமோதரம்பிள்ளை ஆகிய ஒன்பது புலவர்களின் வரலாறு கூறப்பட்டுள்ளது. புலவர்கள் வாழ்ந்த காலம் பற்றிய ஆய்வும், அவர்களது குணநலன்களும், அவர் களுடைய படைப்புக்களின் சிறப்புக்களும் கூறப்பட்டுள்ளன. புகழேந்திப் புலவர் வரலாற்றில் செவிவழிச் செய்திகளையும் சேர்த்துள்ளார் சாஸ்திரியார்.

*தமிழ் வியாசங்கள்*

இந்நூலின் முதற்பதிப்பு 1935ஆம் ஆண்டு சாஸ்திரியார் மறைந்து 32 ஆண்டுகளுக்குப் பின் வெளிவந்தது. இந்நூல் பற்பல பத்திரிகைளில் சாஸ்திரியார் பல்வேறு நேரங்களில் எழுதிய 18 கட்டுரைகளின் தொகுப்பு. இந்நூலுக்கு ஆங்கிலத்தில் எஸ்.எஸ். சூரியநாராயணன் என்பவர் முன்னுரை வழங்கியுள்ளார். தமிழில் வே. முத்துசாமி ஐயர் முகவுரை எழுதியுள்ளார். நூல்வெளி யீட்டாளரின் முன்னுரையும் அமைந்துள்ளது. எந்தப் பத்திரிகையி லிருந்து ஒவ்வொரு கட்டுரையும் எடுக்கப்பட்டது என்ற விவரம் நூலின் இறுதியில் உள்ளது.

இதில் உள்ள கட்டுரைகளுள் சில அறிவியல் தொடர்பானவை. அவருடைய காலத்தில் உயிர்நூலார் கண்டுபிடித்த கொள்கைகளைச் சாஸ்திரியார் ஐயந்திரிபற அறிந்து, அவற்றை எளிய தமிழில் மக்களுக்குப் புரியுமாறு எடுத்துக்கூறியுள்ளார். 'தற்காப்பு நியமம்' (Law of self preservation) என்ற கட்டுரையில் உயிர்நூலாரின் புதுமையான கருத்துக்களைக் கூறுகிறார். 'பொய்த் தோற்றங்கள்' (illusions) என்ற கட்டுரையில் மிக எளிய முறையில் பொய்த் தோற்றத்தின் தன்மைகளைக் கூறி, 'வெளித் தோற்றத்'திற்கும் (Hallucinations) இதற்கும் உள்ள வேறுபாட்டையும் விளக்குவார். 'ஜீவராசிகளின் நாநாவித வர்ணங்கள்' என்னும் கட்டுரையில், அவற்றின் நிறங்கள் அவற்றுக்கு எவ்வாறு பயன்படுகின்றன என்று விளக்கமாகக் கூறுவார். இக்கட்டுரைகளில் ஹக்ஸ்லி (Huxley), டார்வின் (Darwin), வாலேஸ் (Wallace) ஆகிய அறிஞர்களைப் பற்றிக் கூறிச்செல்வார். 'ஓர் நண்டுத் தெறுக்கால்' என்ற கட்டுரையில், கருவுற்ற கருந்தேள் ஒன்று குஞ்சுகளை ஈன்றதைப் பற்றியும், தாய்த்தேள் தன் குஞ்சுகளைப் பேணுந்திறனையும் கூறுகிறார். இக்கட்டுரைகள் எல்லாம் உயிர்நூலார் வழியில் செல்ல, 'மனவமைதி' என்னும் கட்டுரை உள நூலார் வழியில் செல்கிறது. கலக்கமில் சிந்தையைப் பெறுவது எவ்வளவு நன்மையைத் தரும் என்று இதில் விளக்குகிறார்.

'இந்தியர் ராஜபக்தி' என்ற கட்டுரை, இவர்க்கு ஆங்கிலேய ஆட்சியரிடமிருந்த பற்றுதலைக் காட்டுகிறது.

'பதினெட்டாம் நூற்றாண்டின் தமிழ்ப்பாஷாபிவிர்த்தி''. 'தமிழ் நூலாராய்ச்சியின் தற்காலநிலைமை', 'வறுமையுந்தமிழ்ப் புலமையும்,'

'தமிழ்ப்புலவர் பொறாமை', 'தமிழ் அகராதி', 'தமிழ்நூலாதரிப்போர்' மற்றும் 'தமிழ்ப்பாடசாலைகள்' ஆகிய கட்டுரைகளில் அவர் வாழ்ந்த காலத்துத் தமிழின் நிலையையும், தமிழ் வளர்ச்சிக்குச் செய்ய வேண்டிய செயல்களையும் குறிப்பிடுகிறார். இக்கட்டுரைகளில் கூறப்பட்டுள்ள ஒரு சில கருத்துக்கள் வருமாறு:

''புராணமாவது என்னவென்றால், ..... கடவுளைப் பற்றித் தமக்குத் தோன்றியவாறு லீலை செய்ததாகச் சிறு பிள்ளைத்தனமாக எழுதப்பட்டிருக்கும் ஒரு நூலாம்.''

''ஆராய்ச்சித்திறம் வேறு நூலியற்றுந்திறம் வேறு ஆகவே ஆராய்வோனிடத்தில் அம்மகாகவிகளைப் போல நூலியற்றுந்திறம் இருக்க வேண்டுமென்பது அவசியமில்லை.''

'அகராதி' அனைவரும் பயன்படுத்தக்கூடிய முறையில் இருக்க வேண்டும். தற்காலத்தில் அவை பண்டிதர்களால் மேற்கொள்ளப் படாமல் இருக்கின்றன. அகராதியில் செய்யுள் வழக்குச் சொல்லும், பாமரர் வழக்குச் சொல்லும் இருக்க வேண்டும். குழுஉக்குறிச் சொற்களும், சொற்பொருள் காரணங்களும் காட்டப்பெறுதல் வேண்டும்.

''ஆங்கிலேயே பாடசாலைகளிற் சில்லாண்டு கற்று ஆங்கிலேய மாயினும் தமிழாயினும் சீர்பெறக் கல்லாமல் உதரவலி ஒழித்தற் பொருட்டுத் திரிபவரே சிறுவர்களுக்குப் போதிக்க வருபவராவர். ..... ஆங்கிலத் தேர்ச்சி மட்டுமின்றித் தமிழிலும் தக்கதேர்ச்சி யுடையவரைத் தெரிந்து ஆசிரியராக்க வேண்டும். அன்னார்க்கு மட்டும் போதனாமுறை பயிற்றறிவித்துப் போதகராயனுப்ப வேண்டும்'' என்று ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்கவேண்டும் என்று கூறுகிறார் சாஸ்திரியார்.

மேலும் தமிழைக்கற்ற பிறகே ஆங்கிலம் கற்கவேண்டும் என்று நூறு ஆண்டுகளுக்குமுன்பாகத் தமிழ்வழிக் கல்வியை வலியுறுத்து கிறார் சாஸ்திரியார். ''ஐந்து வயதாகுமுன்னர் ஆங்கிலம் கற்கத் தொடங்குகின்றனர். தமிழ் வாசமும் ஏற்காமல் ஆங்கிலக் கல்வி தொடங்கும் மாணவர் உடல் தேய்ந்து கண்பூத்து மனமிற்று நாளடைவில் யமனுக்குணவாகின்றனர்.''

'சுதேச பாஷை நீக்கம்', 'சர்வகலாசாலை விசாரணை' 'சுதேச பாஷையாக்கம்' ஆகிய கட்டுரைகள் பட்டப்படிப்பு வகுப்பில் தமிழின்

நிலைபற்றியவையாகும். பி.ஏ. பட்டப்படிப்பிற்கு ஆங்கில மொழியையும், இலத்தீன், கிரேக்கம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளுள் ஒன்றையும் மாணவர் பயில வேண்டும். பி.ஏ. பாடப்பகுதியிலிருந்து தமிழ், தெலுங்கு முதலிய வட்டாரமொழிகள் நீக்கப்பட்டன. இதனைச் சாஸ்திரியார் கடுமையாக எதிர்த்தார். உயர்தனிச் செம்மொழியாகிய தமிழை, வட்டார மொழி என்றது தவறு என வாதிட்டார். அடுத்து, தமிழைக்கல்லூரிப் பாடத்திட்டத்தி லிருந்து நீக்குவதால், மாணவர்கள் வடமொழியைக் கற்க நேரிடும். கல்லூரிகளில் வடமொழியைக் கற்பவர் குறைவு. தமிழுக்குப் பதிலாக வடமொழியைக் கற்பிக்கத் தொடங்கினால், ''பிராமணராயினார்க்கு விசேஷமான அனுகூலமும் ஏனையோர்க்கு விசேஷ பிரதிகூலமும் விளையுமென்க'' என்பார். எனவே, தென்மொழி நீக்கமும் வடமொழி ஆக்கமும் ஒரு பகுதியினருக்கு மட்டும் நன்மை பயக்கும் என்பார் சாஸ்திரியார்.

சாஸ்திரியாரைப் போலவே இந்திய அரசுக்குப்பலரும் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர். இது குறித்து முடிவு செய்ய, சென்னைப் பல்கலைக்கழகக் கூட்டம் கூடியது. சாஸ்திரியாரின் பெரு முயற்சியால் அக்கூட்டத்தில் தமிழ் நீக்கப்படாமல் போற்றிக் கொள்ளப்படவேண்டும் என்று தீர்மானமாயிற்று. இதனால் மகிழ்ந்த சாஸ்திரியார், ''தமிழ்ப்பெருந்தெய்வத்தை வாழ்த்தி இறைவற்குத் தெள்ளேணங்கொட்டுவேமாக'' என்பார்.

இந்நூலில் 'சொற்பொருளாராய்ச்சி', 'உயர்தனிச் செம்மொழி' ஆகிய இரண்டும் ஆராய்ச்சிக்கட்டுரைகளாம். சொற்பொருளாராய்ச்சி என்னும் கட்டுரையில், 'வடமொழியில் பாணினி முதலானோர் சொற்பொருளாராய்ச்சி செய்து அம்மொழியில் உள்ள பகுதிகளை எல்லாம் தொகுத்துள்ளனர். தமிழிலும் அதுபோன்ற ஆய்வு தேவை. தமிழ்ப் பகுதிகள் அனைத்தையும் தொகுத்துளேன். அதிலிருந்து ஒவ்வொரு பகுதிகளாக தனியே எடுத்து ஆய்வு செய்கிறேன். 'மொழிப் பொருட்காரணம் விழிப்பத் தோன்றாது' என்று தொல்காப்பியர் கூறினாலும், 'பழையன கழிதலும் புதியன புகுதலும், வழுவல கால வகையினானே' என்ற பவணந்தி முனிவர் கூற்றை ஏற்று ஆய்வு செய்தேன்' என்று கூறி, 'அறு' என்னும் பகுதியை எடுத்துக்கொள்கிறார் சாஸ்திரியார். அறம், அறல், அறவு, அறவை முதலிய பதினைந்து சொற்களை எடுத்து ஆய்வு செய்கிறார். மேலும்

இதன் வினைவிகற்பங்களைக் கூறின் விரியும் என்கிறார். 'அறு என்பதும் அல்+து என்று பிரியும் எனக்கொண்டால், ஆயிரக் கணக்காய் விரியும் தமிழ்ப்பகுதிகள் எல்லாம் நூற்றுக்கணக்காகச் சுருங்கி விடும். இவ்வாறே, பாணினி இரண்டாயிரக் கணக்காக வகுத்திருந்த வடமொழி தாதுக்களை எழுநூற்றிற்குள் அடக்கி விட்டார். காலஞ்சென்ற மோட்ச மூலப்பட்டாசாரியர் (Prof.Max Muller), என்பார் சாஸ்திரியார்.

'உயர்தனிச் செம்மொழி' என்ற கட்டுரை, 1902ஆம் ஆண்டு நவம்பர்த்திங்கள், மதுரைத் தமிழ்ச்சங்கத்திலிருந்து 'செந்தமிழ்' இதழ் தொடங்கப்பெற்றபொழுது, அதன் முதல் இதழில் சாஸ்திரியார் எழுதியது. தமிழை, உயர்மொழி, தனிமொழி, செம்மொழி எனப்பகுத்து; 'உயர்தனிச்செம்மொழி' (Classical language) என்று நிறுவுகிறார்.

தமிழ், தென்னாட்டில் வழங்கும் தெலுங்கு, கன்னட, மலையாள, துளுவங்களுக்கெல்லாம் தலைமையானது. எனவே, உயர்மொழி யாகும். தான் வழங்கும் நாட்டில் பயிலும் ஏனைய மொழிகளின் உதவியின்றித் தனித்து இயங்கவல்ல ஆற்றல் சான்றதே தனி மொழி. தமிழ் தனித்து இயங்கவல்லதால் தனிமொழியாம்.

''இனிச் செம்மொழியாவது யாது? 'திருந்திய பண்புஞ் சீர்த்த நாகரிகமும் பொருந்திய தூய்மொழிபுகல் செம்மொழியாம்' என்பது இலக்கணம். இம்மொழி நூல் இலக்கணம் நம்முடைய தமிழ் மொழியின் கண்ணும் அமைந்திருத்தல் தேற்றம். என்னை? இடர்ப்பட்ட சொல் முடிபுகளும் பொருள் முடிபுகளும் இன்றிச் சொற்றான் கருதிய பொருளைக் கேட்டான் தெள்ளிதின் உணராவற்றாய்ப் பழையன கழிந்து புதியன புகுந்து திருத்த மெய்தி நிற்றலே திருந்திய பண் பெனப்படுவது. இது தமிழ் மொழியின்கண் முற்றும் அமைந்திருத்தல் காண்க, நாட்டின் நாகரிக முதிர்ச்சிக் கேற்பச் சொற்களும் ஏற்பட்டுப் பாஷைக்கும் நாகரிக நலம் விளைத்தல் வேண்டும். அவ்வாறு சொற்களேற்படுமிடத்துப் பிறபாஷை சொற்களின்றித் தன் சொற்களே மேற்கோடல் வேண்டும். இவையும் நம் உயர் தனித் தமிழ் மொழிக்கும் பொருந்துவனவாம். ஆகவே தமிழ் தூய் மொழியுமாம். எனவே தமிழ் செம்மொழி என்பது ஒருதலை. இதுபற்றியன்றே தொன்றுதொட்டு நம் தமிழ்மொழி 'செந்தமிழ்' என நல்லிசைப் புலவரால் நவின்றோதப்

பெறுவதாயிற்று'' என்று அக்கட்டுரையில் வாதிடுவார் சாஸ்திரியார். மேலும் அக்கட்டுரையில் ''வட நாட்டுயர் தனிச்செம்மொழி சமஸ்கிருதமெனக் கொண்டாற் போல, தென்னாட்டுயர் தனிச் செம்மொழி தமிழெனக் கொண்டு விதிகள் வகுத்தலே ஏற்புடைத்தாம்'' என்பார்.

சாஸ்திரியாரின் உரைநடை நூல்களைக் கண்ணுறும் போது அவருடைய எழுத்தின் பரிணாம வளர்ச்சியை உணர முடிகிறது. 'மதிவாணன்' போன்ற ஆக்க இலக்கியத்தை உயரிய செந்தமிழ் நடையிலும் எழுதியுள்ளார். 'தமிழ் மொழியின் வரலாறு' போல மொழி ஆய்வு நூலை எளிய நடையிலும் எழுதியுள்ளார். இதழ்களில் எழுதும்போது மிக எளிய இனிய தமிழ்நடையை மேற் கொண்டுள்ளார்.

# 5
# பரிதியின் விரிதிரை

**வி.கோ.** சூரியநாராயண சாஸ்திரியார் (பரிதிமாற் கலைஞர்) தாம் வாழ்ந்த முப்பத்து மூன்று ஆண்டுகளுக்குள், கல்லூரி ஆசிரிய ராகவும், நூல்களின் ஆசிரியராகவும் விளங்கியதோடு பற்பல பிற பணிகளும் புரிந்துள்ளார்.

இவர்தான் முதன் முதலில் பி.ஏ. பட்டம் பெற்றுத் தமிழாசிரியர் பணியைக் கல்லூரி அளவில் விரும்பி மேற்கொண்டவர். தமிழாசிரி யர்களுக்கு ஊதியமும் மரியாதையும் குறைவாக இருந்த 19ஆம் நூற்றாண்டில், இவருடைய தமிழார்வத்தையே இச்செயல் காட்டுகிறது.

ஆங்கிலக்கல்வி நிரம்பிய இருபத்து மூன்று வயதுடைய தமிழாசிரியர், கொண்டலெனப் பொழியும் தம் சொற்பெருக்காற்ற லினாலும், ஆழ்ந்த தமிழ்ப் புலமையாலும், புதுமையை நாடும் பண்புகளாலும், அறிவியற் கண்டுபிடிப்புகளில் உள்ள ஆர்வத்தி னாலும் மாணவர்களின் கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவர்ந்தார். இவர் எப்பொழுதும் இனிய முகத்துடன் மாணவர்களுடன் உரையாடுவார் என்பார் உரையாசிரியர் ந. பலராம ஐயர். சாஸ்திரியாருடைய ஆசிரியப் பணிச்சிறப்புக்களை 'வேள்வியான வாழ்வு' என்ற பகுதியில் கண்டோம்.

1903ஆம் ஆண்டு சாஸ்திரியார் மறைந்தார். அதற்கு ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு 1909ஆம் ஆண்டு வே. முத்துசாமி ஐயர் அவர்கள், 'தனிப்பாக் கோவை' என்னும் தமது நூலில்,

***"சீருயருஞ் செந்தமிழ்வான் சேர்ந்துபுகழ் சான்றொளிரும்***
***சூரியநா ராயணப்பேர்த் தோன்றால்;இப் - பாரினின்று***
***நீயகல நின்மாட்டு நேயமிகு மாணவர்சீர்***
***வியநின்றார் தம்முயற்சி விட்டு"***

என்ற பாடலைப்பாடி, 'சூரியநாராயண சாஸ்திரியார் காலஞ்சென்றது முதல் அவர் மாணவர்கள் ஊக்கம் குன்றி நிற்பதைக் குறித்துப் பாடியது' என்ற குறிப்பும் எழுதியுள்ளார். ஓர் ஆசிரியர் மறைந்து ஆறு ஆண்டுகள் சென்ற பிறகும் அவருடைய மாணவர்கள் தம்முடைய ஆசிரியரை நினைந்து வருந்தினர் என்றால், அவ்வாசிரியரது ஆளுமையை என்னென்பது!

## *இயற்றமிழ் மாணவர்கள்*

சாஸ்திரியார் கல்லூரியில் பாடம் கற்பிப்பதோடு அமையாது, இயல்பாகவே தமிழறிவும் தமிழார்வமும் உள்ள மாணவர்களுக்குத் தம் இல்லத்தில் தமிழ் கற்பித்தார். அவ்வாறு பயின்றவர்களுக்கு, 'இயற்றமிழ் மாணவர்கள்' எனப் பெயரும் சூட்டினார் சாஸ்திரியார். அப்படிப் பயின்றவர்கள், ந. பலராம ஐயர், பிரணதார்த்தி ஹர சிவனார், சலசலோசனச் செட்டியார், சருக்கை இராமசாமி ஐயங்கார், சுப்பிரமணிய ஆசாரியார், முத்தையா முதலியார், கு.ரா. ஸ்ரீனிவாச ஐயங்கார், சருக்கை சுந்தராச்சாரியார், சருக்கை வரதாச்சாரியார், ஜக்கராஜூ பி. வாசுதேவய்ய பந்தலுகாரு, வ.சு. சண்முகம் பிள்ளை, சி.நா. சரவண முதலியார் ஆகிய பன்னிருவர் ஆவர். 'ஏசுகிறித்துவும், ஆதிசங்கரரும், அகத்தியரும், சிவஞான முனிவரும் பன்னிரு மாணவர்களைப் பெற்றிருந்தது போலத் தாமும் பன்னிரு மாணவர்களைப் பெற்றிருந்ததாகச் சாஸ்திரியார் கூறுவார்' என்று தாம் வரைந்த 'வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார்' என்ற நூலில் ந. சுப்பிரமணியன் கூறுவார்.

'ஆசானும் மாணவர்களும் ஒருவருக்கொருவர் ஏறத்தாழச் சமமானவர்கள் என்பது இயற்றமிழ் மாணவர்களுக்கு நடத்தப்பெறும் வகுப்பின் ஓர் அடிப்படைக்கோட்பாடு. ஆசிரியர்-மாணவர் உறவு கற்றறிந்த காதலன்-காதலி உறவுபோன்றது என்ற சலசலோசனச் செட்டியாரின் கருத்தைச் சாஸ்திரியாரும் ஏற்றுக்கொண்டார். இருவருடைய உள்ளப்புணர்ச்சியில் பிறப்பதே ஞானம் என்பது கருத்து' என்று ந. சுப்பிரமணியன், 'ந. பலராம ஐயரவர்கள்' என்ற நூலில் கூறுவார்.

இயற்றமிழ் மாணவர்களுக்குத் தொல்காப்பியம், நன்னூல், இறையனார் அகப்பொருள், நம்பியகப்பொருள், மாறனலங்காரம், தண்டியலங்காரம், இலக்கியங்கள், சைவசமய சாத்திர நூல்கள்

ஆகியன சாஸ்திரியாரால் நடத்தப்பட்டன. ''பாடம் நடக்கும்பொழுது மேனாட்டு இலக்கியப் பாரம்பரியம் இந்திய இலக்கிய மரபுகளோடும் பெரும்பாலும் ஒப்புப்பார்க்கப்பட்டன'' என்று 'ந. பலராம ஐயரவர்கள்' என்ற நூலில் ந. சுப்பிரமணியன் கூறுவார்.

இயற்றமிழ் மாணவருள் தலை மாணவரான ந. பலராம ஐயர் அவர்கள் தம்முடைய 'நாடகவியலுரை'யில் நூலாசிரியர் வரலாறு கூறும்போது, ''.....கலைபயிலும் மாணாக்கரின் தொகை யதிகரிக்கவே அவர்கட்கு இயற்றமிழ் மாணவர் என்னும் பெயர்கொடுத்து வருடமொருமுறை அவர்கட்குப் போதித்த நூல்களுட் பரீக்ஷையுஞ் செய்விக்கின்றனர்.... உடல் வருத்தத்தைப் பொருட்படுத்தாமலும், மாணவர்தம் நன்மையுஞ் செந்தமிழின் செம்மையுமே யுற்ற பொருளாக் கொண்டு நனியுழைத்து வருகின்றனர்'' என்று சாஸ்திரியாரைப் பற்றிக் கூறுவார்.

சாஸ்திரியாரின் இயற்றமிழ் மாணவருள் ஒருவரான சலசலோசனச் செட்டியார் 1897ஆம் ஆண்டில், மிக இளம் வயதில் மறைந்தார். அவரது மறைவு இயற்றமிழ் மாணவர்களுக்குத் தங்கள் ஆசிரியருடன் நிழற்படம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற அவாவைத் தூண்டியது. அந்நிழற்படத்தைப் பார்க்கும்போது, சாஸ்திரியாருக்கும் இயற்றமிழ் மாணவர்களுக்கும் இடையே இருந்த உறவும் நட்பும் புலப்படுகிறது. இன்றைக்கும் மாணவர்களுடன் நிழற்படம் எடுத்துக்கொள்ளும் ஆசிரியர் நடுவே அமர்ந்திருப்பதைக் காணலாம். ஆயின் நூறு ஆண்டுகளுக்கும் முன்பு எடுக்கப்பட்ட நிழற்படத்தில் மிகமிக இயல்பாக மாணவர்களுடன் ஆசிரியர், ஓர் ஓரத்தில் நிற்பதிலேயே ஆசிரியர்-மாணவர்க்கிடையே உள்ள நட்பு வெளிப்படுகிறது.

### *பதிப்புப் பணி*

சாஸ்திரியார் பற்பல நூல்களைத் தாம் இயற்றியது மட்டுமன்றித் தம் இயற்றமிழ் மாணவர்களையும் நண்பர்கள் சிலரையும் நூல் இயற்றுமாறு தூண்டினார். இயற்றிய நூல்களின் எண்ணிக்கை அதிகமாகவே, அவற்றைச் சில நூற்றொகைகளுள் அடக்கினார்.

நாடகநூல் வகைகளுக்கு நாமகள் சிலம்பு என்றும், செய்யுள் நூல்களுக்கு, தமிழ்மகள் மேகலை என்றும், கதைகளாகிய உரை

நடைநூல் வகைகளுக்கு இன்பவல்லி என்றும், ஞானநூல் வகைகளுக்கு ஞானதரங்கிணி என்றும் இவற்றுள் அடங்காத நூல்களைக் கலாநிதி என்றும் பெயரிட்டுப் பதிப்பித்துள்ளார் சாஸ்திரியார். இந்த நூற்றொகைகளுக்கு எல்லாம் சாஸ்திரியாரே பதிப்பாசிரியர். இந்த ஐந்து நூற்றொகை வழியே 67 நூல்களைச் சாஸ்திரியார் தம் செலவிலேயே பதிப்பித்துள்ளார்.

| எண் | தலைப்பு | வெளியீட்டு வரிசையின் பெயர் | வெளியீடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | நாமகள் சிலம்பு | 'பரல்' | 18 |
| 2. | தமிழ்மகள் மேகலை | 'கிங்கிணி' | 8 |
| 3. | இன்பவல்லி | 'மலர்' | 21 |
| 4. | ஞானதரங்கிணி | 'தரங்கம்' | 6 |
| 5. | கலாநிதி | 'கலை' | 14 |

சாஸ்திரியார் பண்டை நூலாசிரியர் நூல்களைக் கலைமகள் கலாபம் என்ற பெயரில் பதிப்பித்துள்ளார். அவ்வரிசையில், சபாபதி முதலியாரின் திருக்குளந்தை வடிவேலன் பிள்ளைத் தமிழை 1896லும், மதுரை மாலையை 1901லும், 1898இல் கலிங்கத்துப் பரணியையும் மழவை மகாலிங்க ஐயரின் இலக்கணச் சுருக்கத்தையும் வித்துவான் தாண்டவராய முதலியாரின் பஞ்சதந்திரத்தையும், 1899இல் நளவெண்பாவையும் 1901இல் திருவுத்திரகோசமங்கை -மங்களேசுவரி பிள்ளைத் தமிழையும் பதிப்பித்தார்.

## *நீதிநெறிவிளக்கம் - உரை*

சாஸ்திரியார் குமரகுருபரசுவாமிகள் இயற்றிய நீதிநெறி விளக்கத்தின் முதல் 51 பாடல்களுக்கு உரை எழுதியுள்ளார். இவ்வுரையுள் பல இடங்களில் சொற்பொருள் ஆய்வு நிகழ்த்துகிறார் சாஸ்திரியார். மேலும், ''இச்செய்யுள் தனித்தமிழ்சொற்களா னியன்றமை காண்க'' என்று பற்பல பாடல்களைப் பற்றிக் கூறுவார். சொற்களுக்கு இலக்கண முடிபுகளும் கூறுவார்.

எடுத்துக்காட்டாக, 'காதலித்த' என்ற சொல்லுக்குப் பின்வருமாறு உரை எழுதுகிறார் சாஸ்திரியார்:

காதலித்த - "காதல் என்னும் பெயரடியாகப் பிறந்த பலரின் படர்க்கை இறந்தகால வினையாலணையும் பெயர், காதல் என்னும் பெயரை வினைப்படுத்தும் இகர விகுதி புணர்ந்து நின்ற காதலி - பகுதி; இவ்வாறே "சித்திரம்" என்பதனடியாகச் "சித்திரி" எனவும், "கடைக்கண்" என்பதனடியாகக் "கடைக்கணி" யெனவும் வருதல் காண்க.

இளமை, செல்வம், யாக்கை என்ற முறைவைப்புக்குக் காரணம் என்ன? உரையில் சாஸ்திரியார் கூறும் காரணத்தைப் பார்ப்போம்.

"புல்லறிவாளர் கண்டவுடனே மயங்குவது இளமையே யாதலின் அதனை முன்னும், அவ்விளமை காரணமாக இன்பந்துய்ப்பதற்குத் துணைக்கருவியாய் நிற்பது செல்வமே யாதலின் அதனை யதன்பின்னும், இளமை சின்னாளிலிருந்து அவ்விளமையின் நுகர்ச்சிக்கண் பொருளழிந்து இரண்டும் போனபின்னருஞ் சிறிதுகாலம் யாக்கைப்புல்லறிவாளர் இரங்குதற்பொருட்டு நிற்றலின் *அதனை யவற்றின்பின்னரும் வைத்தனர்."*

'நீதிநெறிவிளக்கத்'தின் உரைவளத்தில் சாஸ்திரியாரின் உரை தனித்தன்மையுடன் விளங்குகிறது.

## *சிறப்புரை, பாயிரம் வழங்கியமை*

நூலின் சிறப்புக் கருதியே சிறப்புரைகளும் பாயிரங்களும் சாஸ்திரியார் வழங்கியுள்ளார். கல்குளம் குப்புசாமி முதலியார் பதிப்பித்த அந்தகக்கவி வீரராகவமுதலியாரின் சேயூர் முருகன் பிள்ளைத் தமிழ், சபாபதி முதலியாரின் 'திருக்குளந்தை வடிவேலன் பிள்ளைத் தமிழ்' மற்றும் 'மதுரை மாலை', 'மறைசையந்தாதி - சபாபதி முதலியார் உரை', மாணிக்க முதலியாரின் 'சங்கீத சந்திரிகை', சலசலோசனச் செட்டியாரின் 'சரசாங்கி நாடகம்', கோபாலகிருஷ்ண ஐயரின் 'குணசீலன்', சாமிநாதய்யர் இயற்றிய 'வர்ணவைத்ய சாஸ்திரம்', அரங்கநாத கவிராயரின் 'மகாபாரதம்', பம்மல் சம்பந்த முதலியாரின் 'லீலாவதி - சுலோசனை அல்லது இருசகோதரிகள்', தாண்டவராய முதலியாரின் 'பஞ்சதந்திரம்' ஆகிய நூல்களுக்குச் சாஸ்திரியார் சிறப்புரைகளும் பாயிரங்களும் சாற்று கவிகளும் வழங்கியுள்ளார்.

இவைதவிர, திருப்பாதிரிப்புலியூர், திருவஹீந்திரபுரம் ஆகிய ஊர்களில் உள்ள கடவுளர் மீதும் திருவல்லிக்கேணிப் பார்த்தசாரதிப் பெருமாள் மீதும் தனிப்பாடல்களைச் சாஸ்திரியார் பாடியுள்ளார்.

அ. மாதவையாவின் 'பத்மாவதி சரித்திரம்' பற்றி, சென்னைக் கிறித்தவக்கல்லூரி இதழில் 1898ஆம் ஆண்டு மே மாதம் ஆங்கிலத்தில் 'Padmavathi Charitham' - A New Tamil Novel என்று சாஸ்திரியார் கட்டுரை எழுதியுள்ளார்.

*இதழாசிரியர்*

மு.சி. பூரணலிங்கம் பிள்ளை ஆசிரியராக இருந்து நடத்திவந்த 'ஞானபோதினி' இதழுக்குச் சாஸ்திரியார் கூட்டாசிரியர் பதவியை 1900ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் மேற்கொண்டார். அன்றிலிருந்து 'ஞானபோதினி'' அலுவலகம் சாஸ்திரியாரின் இல்லமாகிய 286, லிங்கிச் செட்டி தெருவிற்கு மாறியது. ஒவ்வொரு மாதமும், நாற்பது பக்கங்களோடு இந்த இதழ் வெளிவந்தது. 1903ஆம் ஆண்டு சாஸ்திரியார் மறையும் வரை, நிர்வாகப் பத்திராதிபராகப் பணியாற்றினார்.

''ஞானபோதினி'' பாமரர் பண்டிதர் இருவகையினரும் கற்று மேன்மையடையுமாறு நடத்தப்பட்டது. 1902ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் ''ஞானபோதினி''யில் 'நமது ஆறாம் ஆண்டு-பத்திராதிபர்' என்ற தலைப்பில் சாஸ்திரியார் பின்வருமாறு எழுதுகிறார்.

''.........சாமானிய சனங்களிடத்தும், கற்றுணர வல்லரல்லா தாரிடத்தும் கற்றறிந்தாரது உயர்வுடைய கொள்கைகளும் ஒழுக்க வழக்கங்களும் அறிவுடைச் செயல்களும் பரவுமாறு செய்ய வேண்டுவதே பத்திரிகைகளின் இன்றியமையாத கடமையாதலின் இதனைத் தமிழ்ப் பத்திராதிபர்களாவார் கவனித்து நடக்க வேண்டும். அவ்வாறு நடக்குமிடத்துச் சாமானிய சனங்களுக்குப் பொருள் விளங்காதவாறு விசேஷமான திரிசொற்களை வழங்கிக் கருதிய பொருளை மறைத்துப் படிப்பவரை மருட்டுவதனால் யாது பயன்? .... யாம் இவ்வாறு கூறியதனாலே சாமானிய சனாபிவிருத்தியைக் கருதிய பத்திரிகைகளனைத்தும், அச்சாமானியர் பேசுந்தமிழிலேயே எழுதப்படல் வேண்டுமென்றேம் என்று எண்ணற்க. பாஷை நடை பிழைபடாமலும், சொல்லுருவம் அநாவசியமாய்ப் பிறழாமலும்,

எழுத்துப் பிழை நேராமலும், பழையன கழிந்த சொல் வடிவங்களை வீணே வழங்காமலும், புதிய ஆபாசப் பிரயோகங்களை மேற்கொள்ளாமலும் ஓராற்றால் நடுவுநிலைமையடைந்து, கொண்ட கருத்துக்களைத் தெளிவுபெற விளக்கிப் பொதுசன நலம் பெருக்குதலே எமது கருத்து'' என்கிறார் சாஸ்திரியார். இதிலிருந்து, பத்திரிகையின் கடமை என்ன, நடை எவ்வாறு அமைதல் வேண்டும் என்பது பற்றித் தெளிவான கொள்கையைச் சாஸ்திரியார் மேற் கொண்டமை புலனாகிறது.

'ஞானபோதினி' இதழில் சாஸ்திரியார், தாம் மட்டும் எழுதிய தோடு அமையாது, பலரையும் எழுதுமாறு தூண்டினார். 'நாடக வியலுரை' என்ற நூலில் 'நூலாசிரியர் வரலாறு' எழுதும் ந. பலராம ஐயர், ''மேற்கூறிய பத்திரிகையைச் செவ்வனே நடத்திவருதல் யாவராலும் வியக்கற்பாலதே. பத்திராதிபரின் நிலைமை யெளிதன்றே!'' என்பார்.

இதழாசிரியர் பணியைச் சாஸ்திரியார் மிகச்சிறப்பாக நடத்தி வந்தார். சாஸ்திரியார் மறைந்த பிறகு, பூரணலிங்கம் பிள்ளை, 1904ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள், 'ஞானபோதினி' இதழில் 'தமிழருக்கு அறிக்கை' என்ற தலைப்பில், ''........ பேதைப் பருவத்தில் அன்னையை இழந்தபடியால், உலக வசனத்துக்கொப்ப இப் பத்திரிகை விஷயத்தில் பெற்றப்பன் சிற்றப்பனாகா னென்ற வுறுதியைத் தமிழுலகிற்குத் தெரிவிக்கிறேன்'' என்று எழுதினார். இதிலிருந்து சாஸ்திரியார் மிகச்சிறந்த இதழாசிரியராக விளங்கினார் என்று தெரிகிறது.

### *சென்னைச் செந்தமிழுரைச் சங்கம்*

1899ஆம் ஆண்டு சாஸ்திரியார், கா.ஸ்ரீ. கோபாலாசாரியார், தி.கோ. ஸ்ரீரங்காசாரியார், ஆ.சேதுராம பாரதியார் ஆகிய மூவருடன் சேர்ந்து சென்னைச் செந்தமிழுரைச் சங்கம் என்ற சங்கத்தை நிறுவினார். இச்சங்கத்தின்வழி, 1899 ஆம் ஆண்டு மெற்றிக் குலேஷன் பாடங்கட்கும், 1900 ஆம் ஆண்டின் எப்.ஏ.பாடங்கட்கும், 1901 ஆம் ஆண்டின் பி.ஏ.பாடங்கட்கும் உரை எழுதினார்.

*கல்விக்கூடப் பாடநூல்*

சாஸ்திரியார் இறந்த பிறகு 1904 ஆம் ஆண்டில் பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியரான தி.செல்வக்கேசவராய முதலியார், சாஸ்திரியார் தொகுத்துத் தயார் செய்து வைத்திருந்த, 'எட்டாம் வாசக புத்தகம்', 'ஒன்பதாம் வாசக புத்தகம்' என்பவற்றை நிறைவு செய்து வெளியிட்டார். அவற்றுள் சில பாடங்களைப் பள்ளி மாணவர் களுக்காகச் சாஸ்திரியார் எழுதியுள்ளதாக தி.செல்வக்கேசவராய முதலியார் குறிப்பிட்டுள்ளார்.

*தமிழே உயிர்*

மதுரையில் தமிழ்ச்சங்கம் நிறுவப்படவேண்டும் என்று சாஸ்திரியார் தீவிரமாக முயற்சி செய்தார். 1901 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமையன்று மதுரையில் நான்காவது தமிழ்ச்சங்கம் தொடங்கப்பெற்றது. பாஸ்கர சேதுபதி தலைமையில் பாண்டித்துரைச்சாமித் தேவரது மேற்பார்வையில், சாஸ்திரியார், உ.வே.சாமிநாதையர், ரா.ராகவையங்கார், சடகோப ராமநுஜாசாரியார் ஆகிய பேராசிரியர்களின் உதவியுடன் தமிழ்ச் சங்கம் நிறுவப்பட்டது. இச்சங்கத்தைப் பற்றிச் சாஸ்திரியார் தம்முடைய 'தமிழ் மொழியின் வரலாறு' என்னும் நூலின் முடிவுரையில் விரிவாகக் கூறியுள்ளார். மேலும், தாம் எழுதும் கட்டுரைகளில் தமிழ்ச்சங்கம் இன்னின்ன செயல்களைச் செய்ய வேண்டும் என்று குறிப்பிடுவார்.

சாஸ்திரியாரின் ஒவ்வொரு செயலும் தமிழை மேலும் முன்னேற்றும் தன்மையோடு விளங்கியதைக் காணலாம். 'பல்கலைக் கழகப் பட்டப்படிப்பு அளவில் 'தமிழ்', பாடமாக இருக்க வேண்டாம். ஏனென்றால் அது வட்டார மொழி; தமிழுக்குப் பதிலாகச் செம்மொழியாம் வடமொழியை மாணவர்கள் பயிலட்டும்' என்று அரசினர் தீர்மானித்ததை அறிந்து சாஸ்திரியார் துடித்தார். மு.சி. பூரணலிங்கம் பிள்ளையையும் உடன் அழைத்துக் கொண்டு, ஆசிரியர் மன்ற உறுப்பினர்களை அவர்களுடைய இல்லங்களிலேயே சந்தித்து, இம்முடிவால் தமிழுக்கு நேரக்கூடிய தீங்குகளை எடுத்துக் கூறினார். பல்கலைக்கழகம் இது தொடர்பாகக் கூட்டிய கூட்டத்தில் இத்தீர்மானம் தோற்குமாறு செய்யவேண்டும் என்று அவர்களிடம்

வலியுறுத்தினார். அத்துடன் அமையாது. பற்பல தமிழ்ப் பாட சாலைகளின் வழியாகவும், பத்திரிகைகளின் வாயிலாகவும் இம் முடிவுக்கு எதிராகத் தீர்மானங்களை நிறைவேற்றி அரசினர்க்கு அனுப்பச் செய்தார். தாமும் 'ஞானபோதினி' பத்திரிகையின் வழியாகவும் 'செந்தமிழ்' இதழ்வாயிலாகவும் கட்டுரைகள் எழுதினார்.

இந்தியாவின் வடபகுதியில் இருக்கும் மொழிகளுள் வட மொழியே செம்மொழி; அதேபோல் தெற்கே இருக்கும் மொழிகளுள் தமிழே செம்மொழி. தமிழை, வட்டாரமொழி என்று கூறுவதும் எழுதுவதும் மிகப்பெரிய தவறு. தமிழ் உயர்தனிச் செம்மொழி யாகும். இந்தக் கருத்துக்களை எல்லாம், 1902 ஆம் ஆண்டு நவம்பர்த்திங்கள், மதுரைத்தமிழ்ச் சங்கத்திலிருந்து 'செந்தமிழ்' இதழ் தொடங்கப்பெற்ற பொழுது, அவ்விதழில் 'உயர்தனிச்செம்மொழி' என்று தாம் எழுதிய கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். மேலும் அதில், 'திருந்திய பண்புஞ் சீர்த்த நாகரிகமும் பொருந்திய தூய்மொழிபுகல் செம்மொழியாம்' என்ற செம்மொழியின் இலக்கணம் தமிழுக்குப் பொருந்துமாற்றை விளக்குவார்.

சாஸ்திரியாரின் விடா முயற்சியால் பல்கலைக்கழகக் கூட்டத்தில் தாய்மொழி வென்றது. பட்டப்படிப்பு அளவில் எப்போதும் போல் தமிழ், பாடப்பகுதியாக விளங்கும் என்று தீர்மானிக்கப்பட்டது. சாஸ்திரியார் அன்று முயற்சி செய்திராவிட்டால், கல்லூரிப் பாடத்திட்டத்தில் இருந்து தமிழ் நீக்கப்பட்டிருக்கும்; தாய் மொழிவளர்ச்சிக்கு அது மிகப் பெரும் கேடாக முடிந்திருக்கும். சாஸ்திரியார் கூறுவது போல, ''தமிழ்ப்பெருந்தெய்வத்தை வாழ்த்தி இறைவற்குத் தெள்ளேணங் கொட்டுவேமாக.''

சாஸ்திரியாரின் இச்செயல்களைக் காணும்போது, தமிழே உயிர்மூச்சு என்ற கொள்கைப்பாட்டுடன் அவர் வாழ்ந்தமை புலனாகிறது.

*சொல்லாக்கங்கள்*

சாஸ்திரியார் ஆங்கிலச் சொற்களுக்கு ஏற்ற தமிழ்ச் சொல்லாக்கங்களும் புரிந்துள்ளார். தகுந்த சொல் ஒரே சொல்லாகக் கிடைக்காவிட்டால், அக்கருத்தை இரண்டு அல்லது மூன்று

சொற்களால் கூறலாம் என்பார் சாஸ்திரியார். அவர் வகுத்த சில சொல்லாக்கங்களைக் கீழே காண்க.

| | | |
|---|---|---|
| இயற்கை அறிவு | - | Instinct |
| இயற்கை ஒழுங்கு | - | Order of Nature |
| இயற்கை வனப்பு | - | Aesthetic |
| உடல் நூலோர் | - | Physiologists |
| உயர்தனிச்செம்மொழி | - | Classical Language |
| உயிர் நூல் | - | Biology |
| உளநூல் | - | Psychology |
| சிற்றுணா | - | Snacks |
| தகுந்தவை தங்கி நிற்றல் | - | Survival of the Fittest |
| நடுக் கபாடம் | - | Level Crossing |
| நற்கலை | - | Fine Arts |
| வாணிப வதுவை | - | Marriage as a trade |
| பாராளுமன்றம் | - | Parliament |
| பாசறை | - | Green Room |

ஒரு முன்னோடி

*பி.ஏ. பட்டம் பெற்றுத்தாமே விரும்பித் தமிழாசிரியர் பதவியை மேற்கொண்டவர்களுள் இவரே முதல்வர்.

*முதன் முதலில் தமது வடமொழிப் பெயரைப்'பரிதிமாற் கலைஞன்' என்று தமிழ்ப் பெயராக்கிக் கொண்டவர் இவரே. இவரை அடுத்தே சுவாமி வேதாசலமும் மறைமலையடிகள் ஆனார்.

*தமிழ், வடமொழி, ஐரோப்பிய இலக்கிய இலக்கணங்களை உட்கொண்டு நாடகத் தமிழிற்கு முதன்முதலாக நூற்பாக்களால் ஓர் இலக்கணம் வகுத்தவர் இவரே(நாடகவியல்)

*இவரே முதன் முதலில் தமிழில் செய்யுளால் இயன்ற துன்பியல் நாடகம் ஒன்று இயற்றியவர்(மானவிஜயம்)

* 'சானெட்' என்ற இலக்கிய வகைமையைத் தமிழில் 'தனிப்பாசுரம்'

என்னும் பாடல் வகையாகப் புகுத்தினார். பாரதியார் போன்றோரும் இதனைப் பின்பற்றிச் சில பாசுரங்கள் இயற்றினர்.

* டாக்டர் ஜி.யூ.போப் போன்ற அறிஞர்களால் போற்றப்பட்டு, அவர்களால் தமது நூல் ஆங்கிலத்தில் கவிதையாக மொழிபெயர்க்கப்பெறும் பெருமையையும் முதன்முதலில் அடைந்தவர் இவரே.

*சங்க இலக்கியப் பண்புகளைப் போற்றி, இயற்கைப் பொருள்களைப் பற்றிப் புதுவகைச் செய்யுட்களை யாத்தார். (தனிப்பாசுரத் தொகை, பாவலர் விருந்து)

* பகாப் பதங்களில் பெரும்பாலானவை பகுபதங்களே; வேர்ச் சொற்கள் மேலும் காணப்பெறுதல் வேண்டும் என்பதை எல்லாம் 'அறு' என்னும் பகுதியடியாக ஆய்வு செய்து முதன்முதலில் கூறியவர் இவரே.

*தமிழ்மொழி, இலக்கிய வரலாறுகளை ஆய்வு முறையில் அணுகி, முதன் முதலாக எழுதியவர் இவரே(தமிழ்மொழியின் வரலாறு, தமிழ்ப்புலவர் சரித்திரம்)

*இவரே தமிழை உயர்தனிச்செம்மொழி என்று முதன் முதலில் மெய்ப்பித்து 1902 ஆம் ஆண்டே கட்டுரை வரைந்தவர்.

*கல்லூரி ஆசிரியர், கவிஞர், நாடக ஆசிரியர், நடிகர், ஆராய்ச்சியாளர், பத்திரிகையாளர், பற்பல நூல்களின்(ஏறத்தாழ 74 நூல்கள்) பதிப்பாசிரியர் என்ற பலதன்மைகளிலும் சிறந்து, தமிழ்-தமிழர் முன்னேற்றம் பற்றியே தாம்வாழ்ந்த 33 ஆண்டுகளிலும் சிந்தித்துச் செயலாற்றிய தமிழறிஞர் சூரியநாராயண சாஸ்திரியார் ஒருவரே.

'தனிப்பாசுரத்தொகை' யில் 'தொழில்' என்ற பாசுரத்தில் சாஸ்திரியார், 'நற்றொழில் புரிதலே நன்று' என்றும், 'மனிதன்' என்ற பாசுரத்தில், ''இன்னுமொன்று உளது நின்னை நீவேறலே; தனைத்தான் உயர்த்திலன் தனக்கு மேலெனின், எனைத்துணையோஒ எளியன்'' என்றும் கூறுவார். தாம் வாழ்ந்த குறுகிய காலத்திற்குள் தம்முடைய உடல்நலத்தையும் பாராது தம்முடைய கூற்றுக்கு ஏற்ப, செயற்கரிய செய்த இப்பெரியார் போற்றுதலுக்கு உரியவர்.

# முடிவுரை

தமிழ் இலக்கியப் பூங்காவில் பூக்கும் மலர்கள், வண்ணத்தாலும் வடிவாலும் மணத்தாலும் கருத்தைக் கவரும். முப்பத்து மூன்றாண்டு வாழ்ந்து, உடலையும் உயிரையும் தமிழுக்கே ஈந்த பரிதிமாற் கலைஞர், பவளமல்லிகை மலர் போல, விரைவில் உதிர்ந்தாலும் தமிழ்வாசம் வீசும் மணமலர்.

வடமொழிப்பயிற்சி, வேதத்தில் தேர்ச்சி, ஆங்கில மொழியில் முதிர்ச்சி பெற்ற இவர் தம் அறிவை அனுபவமாக்கினார். அந்த அறிவாற்றல் இவரது ஒவ்வோர் எழுத்திலும் செயலிலும் வெளிப்பட்டது.

பற்பல செயல்பாடுகளில் இவர் ஒரு முன்னோடி, சிந்தனைச்சிற்பி, சமுதாயச் சீர்திருத்தவாதி, புதுமைவிரும்பி, தமிழை உயர்தனிச் செம்மொழி எனச்சுட்டிய ஆராய்ச்சியாளர்; தாய்மொழிக்கு இயல் இசை நாடக அணிகளைச் சூட்டி அழகு பார்த்த இலக்கியவாதி, மாணவர்களால் மதிக்கப்பட்ட ஒப்பிலா ஆசான். இவ்வாறு பன்முகம் காட்டிய இம்மேதையின் முதல் சிறப்பு இவரது தாய்மொழிப்பற்றே.

தனிப்பட்ட வாழ்க்கையில் ஒழுக்க சீலராக விளங்கிய 'திராவிட சாஸ்திரி' தன் வாழ்வின் ஒவ்வொரு நொடியையும், தமிழின் மேம்பாட்டிற்காகவே செலவிட்டார். மதிப்பும் ஊதியமும் குறைவாக இருந்தபோதும் வேறுவாய்ப்புக் காத்திருந்தபோதும், தமிழாசிரியர் பணியை விரும்பி மேற்கொண்டதே இதற்குச் சான்று.

பன்னிரு இயற்றமிழ் மாணவர்களுக்குத் தமிழ்க் கல்வியளித்து, இருமல் தம்முடன் 'பெருமல்' செய்தகாலத்திலும் தம் உடல் நிலையிலோ, வாழும் காலத்துக்குள் பொருள் சேர்க்கும் முயற்சியிலோ கவனம் செலுத்தாமல் தமிழ்த்தொண்டில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டதும் இதற்கு எடுத்துக்காட்டு.

பல்கலைக் கழகப் பட்டப்படிப்பில் வடமொழி மட்டும் போதும்; வட்டார மொழியாம் தமிழ் நீக்கப்படவேண்டும் என்ற திட்டத்தைத்

தன் முழு முயற்சியால் முறியடித்த சாஸ்திரியாரின் தமிழ்த் தொண்டைத் தமிழர்களால் அன்றும், இன்றும் என்றுமே மறக்கமுடியாது. நான்காவது தமிழ்ச்சங்கம் நான்மாடக்கூடலில் நிறுவுவதற்குச் சாஸ்திரியார் எடுத்த முயற்சி, அத்தமிழ்ச் சங்கத்தின் செயல்பாடுகள் எப்படி இருக்க வேண்டும் என்று அவர்காட்டியவழி ஆகியன அவர் தமிழ்வானில் என்றென்றும் பட்டொளி வீசும் பரிதி என்பதைத் தெள்ளெனக் காட்டும்.

தன்னால் தமிழ்வாழவேண்டும் என்ற ஆர்வத்தால் 'பேசுந்தமிழ் கூடப் பைந்தமிழாக இருக்கவேண்டும்' என்ற உணர்வுடன் செந்தமிழிலேயே பேசினார். திரு.வி.கல்யாணசுந்தரனார், "சூரியநாராயண சாஸ்திரியாரிடத்தில் சிறந்து விளங்கிய இயல்புகள் பல உண்டு. அவைகளுள் சிறந்தது எங்கும் எப்பொழுதும் எக்காரணம் பற்றியும் கொச்சைத் தமிழ் பேசாமை" என்பார்.

பெங்களூர் தமிழாசிரியர் தி.கோ. நாராயணசாமிப்பிள்ளை சாஸ்திரியாரிடம், "வீட்டிலும் நீங்கள் செந்தமிழில்தான் பேசுவீர்களா?" எனக் கேட்டார். அதற்குச் சாஸ்திரியார், "அப்படிப் பேச எனக்குப் பைத்தியம் இல்லை. ஆங்கிலம் படித்த தமிழறிஞர் களுடைய தமிழறிவு தெளிவில்லை என்றும், அவர்களுக்குச் செந்தமிழ் பேசக்கூட வராது என்றும் தனித்தமிழ்ப் புலவர்கள் கூறுவர் என்பதை நானறிவேன். எனவே, பண்டிதர்களிடம் இம்மாதிரி நடையில்பேசுவேன். எளிய நடையில் பேசுவதும் எழுதுவதுமே விரும்பத்தக்கது என்பதுதான் என் கொள்கை" என்றார்.

ஆயினும் அவரது பேச்சுவழக்கிலும், எழுத்து நடையிலும் மயங்காதார் எவருமிலர். டாக்டர் மு.வரதராசனார் தம்முடைய 'தமிழ் இலக்கிய வரலாறு' என்னும் நூலில், "வடமொழியும் ஆங்கிலமும் நன்கு கற்றிருந்தும் அவருடைய (சாஸ்திரியாருடைய) உள்ளம் தமிழ் இலக்கிய வளர்ச்சியையே முதன்மையாகக் கொண்டது. அவருடைய தமிழ்நடை கடுமை உடையதாக இருந்த போதிலும், ஒரு வகை உயிரோட்டம் அதில் அமைந்திருந்தது. அடுக்குச் சொற்கள்பல கலந்த பழைய இலக்கிய நடையாக இருந்தபோதிலும், அவர் உணர்த்திய கருத்துக்களில் புதுமை இருந்தது; நன்மை இருந்தது. ஆகையால் அவருடைய நூல்கள் பயனுள்ளவாக ஆயின" என்பார்.

சாஸ்திரியார் சிறந்த கல்வியாளராக விளங்கியதால், மேல்நாட்டுக் கல்வி, தமிழை அனைத்துத்துறைகளிலும் வளர்க்கப்பயன்பட

வேண்டும் என்று விரும்பினார். தமிழில் புதுமை புக வேண்டும் என்ற தணியாத தாகம் அவருக்கு இருந்தது. அவரது நாடகங்கள், தனிப்பாசுரத்தொகை ஆகியன இதற்குச்சான்று. மேலை நாட்டு இலக்கியம் மட்டுமல்ல அறிவியல் அறிவும் தொழில் நுட்பங்களும் தமிழ் மொழிக்குள் வந்து சேரவேண்டும் என்ற அவாவினால், ''அம்மேற்புல விஞ்ஞானிகளைப் போல நாமும் உழைத்துப் பொருளியல் உணர வேண்டாவோ? தமிழ் வல்லீர்! எழுமின்! எழுமின்!!'' என்பார். விவேகாநந்தரின் எழுச்சியும், பாரதியாரின் ''சென்றிடுவீர் எட்டுத்திக்கும்'' என்ற அறிவுரையும், இச்செய்தியில் வெளிப்பட்டு, சாஸ்திரியார் பல முயற்சிகளில் முன்னோடி என்பதை நமக்கு நினைவுறுத்துகிறது. சாஸ்திரியார் ஆங்கிலம் படிக்க வாய்ப்பு இல்லாதவர்களுக்கும், நல்ல நூல்களை அறிய இயலாதவர்களுக்கும் நல்ல கருத்துக்கள் சென்று சேர வேண்டும் என்ற பேராவல் கொண்டிருந்தார். சாஸ்திரியார் ஒரு முன்னோடி என்பதற்கு நிலை பெற்ற சான்று 'தமிழ்மொழியின் வரலாறு.'

அதே நேரத்தில் தம் அறிவினாலும் அனுபவத்தாலும் இள வயதிலேயே பண்பட்ட சாஸ்திரியார் வடமொழி, ஆங்கிலம் இவற்றிடையே வேற்றுமை பாராட்டவில்லை. மொழிகள் எல்லாம் மக்களின் ஆக்கப்பொருள்கள். அவற்றிற்கிடையே ஏற்றத்தாழ்வுகள் காணக்கூடாது. ஒவ்வொரு மொழிக்கும் சிறப்பியல்பும் உண்டு, குறையும் உண்டு என்ற மொழி நூற்கொள்கைகளை நன்கு அறிந்தவர். தம்படைப்பின் உண்மையான மதிப்பை அறியவேண்டியே தம் வடமொழிப் பெயரைப் ''பரிதிமாற் கலைஞன்'' என்று மாற்றிக் கொண்டார். எனினும் தம் தாய் தந்தையர் தமக்குச் சூட்டிய சூரியநாராயணன் என்ற பெயரையே பெரிதும் பயன்படுத்தினார். வடமொழி, ஆங்கிலம் இவற்றைப் போலத் தமிழும் தனக்குரிய தகுதியை அடையவேண்டும் என்பதே இவரது நோக்கம். எனவே தான் தமிழ் ''உயர் தனிச்செம்மொழி!'' என்று நிலைநாட்டினார். 2004ஆம் ஆண்டு, தமிழைச் ''செம்மொழி'' என்று நடுவண் அரசு அறிவித்தது இவரது அன்றைய முயற்சிக்குக் கிடைத்த இன்றைய வெற்றி.

சாஸ்திரியாரின் புதுமைவேட்டல், புரட்சிக் கருத்துக்கள், சீர்திருத்தக் கொள்கைகள் அவரது எழுத்துக்களில் பரவலாகக் காணப் படுகின்றன. தமிழ் இலக்கணத்தில் குறிப்பாகச் சொல்லாராய்ச்சியில்

அவர் செய்த, செய்ய விரும்பிய திருத்தங்கள் பலப்பல. அவரது 'அறு' என்ற பகுபத ஆராய்ச்சி இன்றைக்கும் தமிழறிஞர்களால் பாராட்டப்படுகிறது. கடின சந்திகளைப் பிரித்து எழுத வேண்டும் என்ற அவரது அறிவுரை, ஆங்கிலத்தைப் போலத் தமிழிலும் 'குறியீட்டிலக்கணம்' பயன்படுத்தப்பட வேண்டும் என்ற அவரது விருப்பம் இன்றைக்கு நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கின்றன. குறியீடுகளால் பொருள் தெளிவும் விரைவுணர்ச்சியும் மொழியில் சேருகிறது என்பதைச் சுட்டிக்காட்டி, அதனைத் தமிழில் பயன்படுத்திய ஆறுமுகநாவலரை "வசனநடை கைவந்த வல்லாளர்" எனப் பாராட்டுகிறார் சாஸ்திரியார்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே பெண் உரிமை பற்றிச்சாஸ்திரியார் பேசுவது பெரு வியப்பு. பெண்மையைப் போற்றவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தும் அவர் மணமக்களின் விருப்பத்தையறிந்தே மணமுடிக்க வேண்டும். இல்லாவிட்டால் மனவேறுபாடுநேர்ந்து பல தீங்குகளுக்கு இடனாகும் என்பார். இளவயதில் திருமணம் செய்விப்பது தவறு; துறவறத்தைவிட இல்லறமே மேல் எனவாதிடுவார். குழந்தைகள் 12 வயது வரை தமிழ்மொழியிலேயே கல்வி கற்க வேண்டும் என்ற கருத்தையும் ஆங்கிலேய ஆட்சிக் காலத்திலேயே முழங்கியவர் அவர். 1902ஆம் ஆண்டு 'நாடகவியலுரை' உரைகாரர் ந.பலராம ஐயர் அவர்கள். "இவர் (சாஸ்திரியார்) உண்மையாய சீர்திருத்தக்காரரென்பதும் புதுமை வழியா லுழைப்பவரென்பதும் அவர்தம் நூல்களால் இனிது பெறப்படும்" என்று கூறியுள்ளதே இதற்குச் சான்றாகும்.

1905ஆம் ஆண்டு இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சியில் வங்காளப் பிரிவினை நிகழ்ந்தது. அப்போதுதான் இலக்கியவாதிகள், சமூக சீர்த்திருத்தவாதிகள், சிந்தனையாளர்கள் வெள்ளையரின் ஆட்சியிலிருந்து இந்திய நாடு விடுதலை பெற வேண்டும் எனத் தீவிரமாகச் சிந்திக்கத் தொடங்கினர். சாஸ்திரியார் மறைந்த ஆண்டு 1903. எனவே மொழிப்பற்று, சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்களைக் கொண்டிருந்த சாஸ்திரியார் 'தேசாபிமானம்' கொள்ளாது இருந்தார் எனக் கூறுவது கால வழுவாகும்.

தாம் வாழ்ந்த முப்பத்து மூன்றாண்டுகளுக்குள் 74 நூல்களைப் பதிப்பித்து, முத்தமிழுக்காகப் பன்னிரண்டு நூல்களை எழுதி, கிறித்தவக் கல்லூரியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்து, 'ஞான

போதினி' இதழாசிரியராகச் செயல்பட்டு, தாமியற்றிய நாடகங்களில் நடித்தும் காட்டிய சாஸ்திரியாருக்குத் தமிழ் மொழி, இலக்கிய வரலாற்றில் தனி இடம் உண்டு.

காலவரிசைப்படி சாஸ்திரியாரின் படைப்புகளைப் படிப்பவருக்கு அவரது பன்முகப் பரிணாம வளர்ச்சி கண்டிப்பாகப் புலப்படும். ஆனால் அவ்வளர்ச்சி முற்றுப்பெறாமல் மொட்டாக மட்டும் நின்றது விதியின் சதி; தமிழுக்கு அது பேரிழப்பு.

பரிதிமாற்கலைஞரின் புகழ் நூறாண்டுகளுக்குப் பின்னும் குறையவில்லை. அவரது பெருமையை உணர்ந்த மாண்புமிகு டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் தலைமையில் இயங்கும் தமிழக அரசு, ''விளாச்சேரி கிராமத்தில் அவர்பிறந்த வீட்டை நினைவில்லமாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அவரது நூல்கள் அரசுடைமையாக்கப்பட்டு, அவரது வழித் தோன்றல்களுக்கு உரிய பரிவுத் தொகை வழங்கப்படும்; அவருக்கு அஞ்சல்தலை வெளியிட மத்திய அரசை இந்த அரசு வலியுறுத்தும்'' என்று 2006ஆம் ஆண்டு ஜூலை 22ஆம் நாள் நிதி நிலை அறிக்கையில் அறிவித்துள்ளது.

அந்த அறிவிப்பின்படி, 13.9.2006 அன்று பரிதிமாற்கலைஞர் அவர்களின் நூல்கள் தமிழக அரசால் நாட்டுடைமையாக்கப்பட்டன. தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் 2.12.2006 அன்று பரிதிமாற்கலைஞரின் மரபுரிமையர் 19 பேருக்கு, பரிவுத்தொகை ரூ. 15 இலட்சம் பகிர்ந்தளிக்கப் பட்டது.

சுருங்கக்கூறின் சூரியநாராயண சாஸ்திரியார் தமிழ் பயில் வோரிடம் இருந்த அறியாமை இருளை ஓட்டிய பரிதி; தமிழை வாழவைத்த மால்; தன் ஆற்றலால் தமிழின் தகுதியை உலகுக்கு உணர்த்திய கலைஞர்.

# பின்னிணைப்பு - 1

# Dedication

V.G. Suriyanarayanasastri, B.A.

*A sincere friend and colleague true*
*Who worked a decade hard and grew*
*In fame as teacher great, and bright*
*In making noble verse outright,*
*In playing parts in dramas writ*
*By him and framing rules to fit,*
*Till snatch'd away in flush of life*
*And mourn'd by darlings three and wife,*
*By kith and kin and scholars twelve*
*Knit well to him by bonds of love*
*For teaching old Tamil classics high;*
*To such a friend belov'd do I*
*This book dedicate enlarg'd, but late,*
*Since long detach'd by cruel fate.*

மு.சி. பூரணலிங்கம் பிள்ளை அவர்கள், 1904ஆம் ஆண்டு, தாம் ஆங்கிலத்தில் வெளியிட்ட 'தமிழ் இலக்கியம்' என்ற நூலை, விரிவு செய்து, பற்பல புதிய விவரங்களுடன் 1929ஆம் ஆண்டு ஆங்கிலத்தில் அதே பெயருடன் வெளியிட்டார். அந்நூலைத் தமது நண்பராகிய சூரியநாராயண சாஸ்திரியாருக்கு உரிமையாக்கினார்.

(பக். 21)

# பின்னிணைப்பு - 2

## வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியாரின் படைப்புக்கள் - கால வரிசைப்படி

| | | | |
|---|---|---|---|
| 1. | 1892 | ஆகஸ்டு | 18ஆம் நூற்றாண்டில் தமிழ்ப் பாஷாபிவிர்த்தி (விவேகசிந்தாமணி)T |
| 2. | 1892 | அக்டோபர் | கவிஞர் டென்னிசன் இறந்த போது இயற்றிய கையறுநிலைச் செய்யுள்$ |
| 3. | 1892 | அக்டோபர் | வைத்தியநாதநாவலர் (வி.சி.)* |
| 4. | 1892 | நவம்பர் | சுப்பிரமணிய தீக்ஷிதர் (வி.சி.)* |
| 5. | 1892 | டிசம்பர் | மயிலேறும் பெருமாள் பிள்ளை, (வி.சி)* |
| 6. | 1893 | ஜனவரி | சுவாமிநாத தேசிகர் (வி.சி)* |
| 7. | 1893 | ஏப்ரல் | அருணாசல கவிராயர் (வி.சி)* |
| 8. | 1893 | ஏப்ரல் | நமது பார்வைக்கு வந்த புஸ்தகங்கள் 'செய்யுள் இலக்கணம்' என்ற நூலின் விமரிசனம் (வி.சி) |
| 9. | 1893 | மே | ஜீவராசிகளின் நாநாவித வர்ணங்கள் (வி.சி)T |
| 10. | 1893 | ஆகஸ்டு | கடிகை முத்துப்புலவர் (வி.சி)* |
| 11. | 1893 | செப்டம்பர் | பொய்த் தோற்றங்கள் (வி.சி)T |
| 12. | 1894 | | மணியசிவனார் கலிவெண்பா (செய்யுள்)$ |
| 13. | 1894 | | அவயவ அறிக்கை (செய்யுள்)$ |

| | | |
|---|---|---|
| 14. 1895 | ஜனவரி | 'லீலாவதி - சுலோசனை அல்லது இருசகோதரிகள்' நூலுக்குச் சாற்று கவி வழங்கியது |
| 15. 1895 | ஆகஸ்டு | தற்காப்பு நியமம்T |
| 16. 1895 | | ரூபாவதி (நாடகம்) |
| 17. 1896 | | சபாபதி முதலியாரின் 'திருக் குளந்தை வடிவேலன் பிள்ளைத் தமிழ்' பதிப்பித்தது - சிறப்புப் பாயிரம் வழங்கியது. |
| 18. 1896 | | ஸ்ரீ மணிய சிவனார் சரித்திரம் |
| 19. 1897 | | சித்திர கவி விளக்கம் |
| 20. 1897 | | 'சரசாங்கி நாடகம்' என்ற நூலுக்குச் சிறப்புப் பாயிரம் வழங்கியது |
| 21. 1897 | | இயற்றமிழ் மாணவருள் ஒருவரான சலசலோசனச் செட்டியார் இறந்தபோது கையறு நிலை பாடியது.$ |
| 22. 1897 | | 'ஞானபோதினி' வாயிலாக 'மதிவாணன்' வெளிவரத் தொடங்கியது. |
| 23. 1897 | | 'நாடகவியல்' நூலை, 112 நூற்பாக்களுடன் பதிப்பித்தது - முதற்பதிப்பு. |
| 24. 1897 | ஏப்ரல் | 'கலாவதி' நாடகம் அரங்கேற்றம் செய்யப்பெற்றது. |
| 25. 1898 | ஜனவரி | 'வர்ண வைத்திய சாஸ்திரம்' என்ற நூலுக்குச் சாற்று கவிகள் வழங்கியது. |
| 26. 1898 | | 'பஞ்ச தந்திரம்' நூலைப் பார்வையிட்டுச் சிறப்புரை வழங்கியது. |

| | | |
|---|---|---|
| 27. 1898 | | 'மழவை மகாலிங்கையர் இலக்கணம்' என்ற நூலைப் பார்வையிட்டுப் பதிப்பித்தது. |
| 28. 1898 | | 'கலாவதி நாடகம்' - முதற்பதிப்பு. |
| 29. 1898 | | கலிங்கத்துப் பரணி பதிப்பித்தது. |
| 30. 1898 | மே | "Padmavathi Charitham' - A New Tamil Novel, (Madras Christian College Maga zine) A Review. |
| 31. 1898 | | கடவுள், அறிவு, அன்பு, துயில், மலர் - பரிதிமாற்கலைஞன் என்ற புனைபெயரில் தனிப்பாசுரங்கள் எழுதியது. (ஞா.போ.)© |
| 32. 1898 | | கடல், முகில், மலை, யாறு - தனிப்பாசுரங்கள் (ஞா. போ.)© |
| 33. 1898 | | பரிதி, மதி, விண்மீன் - தனிப் பாசுரங்கள் (ஞா.போ.)© |
| 34. 1898 | | கல்வி, பொழில் - தனிப் பாசுரங்கள் (ஞா போ.)© |
| 35. 1898 | | 'மதிவாணன்' - முதல் ஏழு அத்தியாயங்கள் (ஞா.போ.) |
| 36. 1898 | செப்டம்பர் | குரு, உடல், நிலன் - தனிப்பாசுரங்கள் (ஞா.போ.)© |
| 37. 1898 | அக்டோபர் | இரவு, காலை - தனிப்பாசுரங்கள் (ஞா. போ.)© |
| 38. 1898 | நவம்பர் | மதிவாணன் எட்டாம் அத்தியாயம் (ஞா. போ.) |
| 39. 1898 | டிசம்பர் | மதிவாணன் ஒன்பதாம் அத்தியாயம் (ஞா. போ.) |
| 40. 1898 | டிசம்பர் | வளி, இசை, மனைவி, புள் - தனிப்பாசுரங்கள் (ஞா. போ.)© |

| | | |
|---|---|---|
| 41. 1899 | ஜனவரி | மனிதன், மாதர், வரைவின்மகளிர் - தனிப்பாசுரங்கள் (ஞா.போ)© |
| 42. 1899 | பிப்ரவரி | இல்லறம், அழகு - தனிப் பாசுரங்கள் (ஞா. போ.)© |
| 43. 1899 | பிப்ரவரி | சபாபதி முதலியார் இறந்தபோது பாடிய கையறுநிலை.$ |
| 44. 1899 | | 'நளவெண்பா' பதிப்பித்தது |
| 45. 1899 | | புகழேந்திப் புலவர் - நளவெண் பாவில் முன்னுரையாக எழுதியது. * |
| 46. 1899 | பிப்ரவரி | B.A. Tamil Text with complete notes. |
| 47. 1899 | மார்ச் | மதிவாணன் பத்தாம் அத்தியாயம் (ஞா.போ.) |
| 48. 1899 | மார்ச் | காதல், வரைவு - தனிப்பாசுரங்கள் (ஞா. போ.)© |
| 49. 1899 | செப்டம்பர் | மதிவாணன் பதினோராம் அத்தியாயம் (ஞா. போ.) |
| 50. 1899 | செப்டம்பர் | கற்பு, மனன், கணவன், வாய்மை, காமம் - தனிப்பாசுரங்கள் (ஞா.போ.)© |
| 51. 1899 | அக்டோபர் | வெகுளி, மயக்கம் - தனிப் பாசுரங்கள் (ஞா. போ.)© |
| 52 1899 | நவம்பர் | நூல், மாணவன், தொழில் - தனிப் பாசுரங்கள் (ஞா.போ.)© |
| 53. 1899 | | தனிப்பாசுரத்தொகை - முதற் பதிப்பு |
| 54. 1900 | பிப்ரவரி | கடற்கரையுலா (ஞா.போ.)$ |
| 55. 1900 | மே | முத்திரா ராட்சசம் - அங்கம் 1 முதற்களம் (ஞா.போ.) |

| | | |
|---|---|---|
| 56. 1900 | ஜூன் | முத்திரா ராட்சசம் - அங்கம் 1 - இரண்டாம்களம் (ஞா.போ.) |
| 57. 1900 | ஜூலை | தாமரைத்தடம் (ஞா போ.)$ |
| 58. 1900 | செப்டம்பர் | மானவிஜயம் - கட்டுரை (ஞா.போ.) |
| 59. 1900 | அக்டோபர் | நூல், போர் - தனிப்பாசுரங்கள் (ஞா.போ.)© |
| 60. 1900 | நவம்பர் முதல் நாள் | 'குணசீலன்' நூலுக்குச் சிறப்புரை வழங்கியது |
| 61. 1900 | நவம்பர் | கலங்கரை விளக்கம் (ஞா.போ.)$ |
| 62. 1901 | ஜனவரி (1.1.1901) | சி.வை. தாமோதரம் பிள்ளை இறந்தமைக்காக வருந்தி, 'தமிழுலகம்' என்ற கட்டுரை எழுதியது (ஞா.போ.)* |
| 63. 1901 | ஜனவரி | சி.வை. தாமோதரம்பிள்ளை இறந்தபோது பாடிய கையறு நிலை$ |
| 64. 1901 | பிப்ரவரி | விக்டோரியா அரசி இறப்புக்குக் கையறுநிலை பாடியது (ஞா.போ.)$ |
| 65. 1901 | மார்ச் | தி.மி. சேஷகிரி சாஸ்திரியார் இறந்தபோது பாடிய கையறு நிலை$ |
| 66. 1901 | ஜூலை | மதிவாணன் - 12ஆம் அத்தியாயம் (ஞா.போ.) |
| 67. 1901 | ஜூலை | பாவலர் விருந்து பதிப்பித்தது. |
| 68. 1901 | ஜூலை | திருவள்ளுவர், போர் - தனிப் பாசுரங்கள் - (Madras Christian College Magazine)© |
| 69 1901 | ஆகஸ்டு | எறும்பு - தனிப்பாசுரம் (Madras Christian College Magazine)© |

| | | | |
|---|---|---|---|
| 70. | 1901 | ஆகஸ்டு | சொற்பொருளாராய்ச்சி (ஞா.போ.)T |
| 71. | 1901 | செப்டம்பர் | தமிழ் நூலாராய்ச்சியின் தற்கால நிலைமை (Madras Christian College Magazine)T |
| 72. | 1901 | செப்டம்பர் | ஓர் நண்டுத் தெறுக்கால் (ஞா.போ.)T |
| 73. | 1901 | செப்டம்பர் | புத்தகக்குறிப்பு - இராமாநுச சரிதம் (ஞா.போ.) |
| 74. | 1901 | செப்டம்பர் | பத்திராதிபர் குறிப்பு (ஞா.போ.) |
| 75. | 1901 | அக்டோபர் | இராமாநுச சரிதம் ஆராய்ச்சி விடையும், அது போலியாமாறும் (ஞா.போ.) |
| 76. | 1901 | நவம்பர் | வறுமையும் தமிழ்ப் புலமையும் (ஞா.போ.)T |
| 77. | 1901 | டிசம்பர் | மனவமைதி (ஞா.போ.)T |
| 78. | 1901 | | பாவலர் விருந்து பதிப்பித்தது. |
| 79. | 1901 | | உத்தரகோசநல்லூர் மங்களேசுவரி பிள்ளைத்தமிழ் 'பரிசோதித்தது' |
| 80. | 1901 | | 'மதுரை மாலை' சிறப்புப்பாயிரம் வழங்கிப்பதிப்பித்தது. |
| 81. | 1901 | | 'நாடகவியல்' நூலை 272 நூற்பாக்களுடன் பதிப்பித்தது. |
| 82. | 1901 | | 'தனிப்பாசுரத்தொகை' இரண்டாம் பதிப்பு |
| 83. | 1902 | ஜனவரி | தமிழ்ப்புலவர் பொறாமை (ஞா.போ.)T |
| 84. | 1902 | பிப்ரவரி | தமிழ் அகராதி (ஞா.போ.)T |
| 85. | 1902 | பிப்ரவரி | 'மானவிஜயம்' - நாடகம், முதற்களம் (Madras Christian College Magazine) |

| | | |
|---|---|---|
| 86. 1902 | மார்ச் | 'மானவிஜயம்' - இரண்டாம், மூன்றாம் களங்கள் (Madras Christian College Magazine) |
| 87. 1902 | ஏப்ரல் | 'மானவிஜயம்' - நான்காம் களம் (Madras Christian College Magazine) |
| 88. 1902 | மே | 'மானவிஜயம்' - ஐந்தாம் களம் (Madras Christian College Magazine) |
| 89. 1902 | மே | 'மதிவாணன்' - புதினம் பதிப்பித்தது. |
| 90. 1902 | மே | தமிழ்நூலாதரிப்போர்(ஞா.போ)T |
| 91. 1902 | ஜூன் | 'மானவிஜயம்' - ஆறாம் களம் (Madras Christian College Magazine) |
| 92. 1902 | ஜூன் | பரிந்துரை (ஞா.போ.)$ |
| 93. 1902 | ஜூன் | சுதேசபாஷை நீக்கம் (ஞா.போ)T |
| 94. 1902 | ஜூலை | பண்டித நாட்டம் (ஞா.போ )$ |
| 95. 1902 | ஜூலை | இந்தியர் ராஜபக்தி (ஞா.போ.)T |
| 96. 1902 | ஆகஸ்டு | நமது ஆறாம் ஆண்டு (ஞா.போ.) |
| 97. 1902 | ஆகஸ்டு | முடிசூட்டிரட்டை மணிமாலை (ஞா.போ.)$ |
| 98. 1902 | ஆகஸ்டு | முடிசூட்டிரட்டை மணிமாலை (Madras Christian College Magazine)$ |
| 99. 1902 | செப்டம்பர் | சர்வகலாசாலை விசாரணை- 1 (ஞா.போ.)T |
| 100. 1902 | அக்டோபர் | சர்வகலாசாலை விசாரணை 2 (ஞா.போ.)T |

| | | | |
|---|---|---|---|
| 101. | 1902 | நவம்பர் | 'சங்கீத சந்திரிகை' நூலுக்குச் சிறப்புரையும் சாற்றுகவியும் வழங்கியது. |
| 102. | 1902 | நவம்பர் | சர்வகலாசாலை விசாரணை 3 (ஞா.போ.)T |
| 103. | 1902 | நவம்பர் | உயர்தனிச் செம்மொழி (செந்தமிழ்)T |
| 104. | 1902 | நவம்பர் | பத்திராதிபர் குறிபபு (ஞா.போ.) |
| 105. | 1902 | | 'மானவிஜயம்' பதிப்பித்தது. |
| 106. | 1902 | | 'ரூபாவதி' இரண்டாம் பதிப்பு |
| 107. | 1902 | | 'ஜோதிமாலை' சிறப்புப்பாயிரம் வழங்கிப் பதிப்பித்தது. |
| 108. | 1902 | | 'சேயூர் முருகன் பிள்ளைத் தமிழ்' நூலுக்குச் சிறப்புப் பாயிரம் வழங்கியது. |
| 109. | 1903 | பிப்ரவரி | சுதேச பாஷையாக்கம் (ஞா.போ.)T |
| 110. | 1903 | ஏப்ரல் | 'தமிழ் மொழியின் வரலாறு' நூலைப் பதிப்பித்தது. |
| 111. | 1903 | மே | தமிழ்ப் பாடசாலைகள் (ஞா.போ.)T |

*நாள் தெளிவாகத் தெரியாதன*

112. மறைசையந்தாதி - சிறப்புப் பாயிரம் வழங்கியது.

113 நீதிநெறி விளக்கம் - 51 பாடல்களுக்கு எழுதிய உரை.

114 சை. இரத்தினச் செட்டியார் இறந்தபோது இயற்றிய கையறுநிலை.$

115. மதுரை மாநகர் (செய்யுள்)$

116. போலி ஆராய்ச்சியன் (செய்யுள்)$

117. ஓர் ஐயப்பாடு (செய்யுள்)$

118. பட்டினக் காட்சி (செய்யுள்)$

119. ஆசானுருநிலை (செய்யுள்)$

120. சயங்கொண்டான்*

121. தமிழ்ப்புலவர் சரிதம்*

122. அரங்கநாத கவிராயரின் மகாபாரதம் நூலுக்குச் சிறப்புப்பாயிரம் சொல்லியது.

*சாஸ்திரியார் இறந்தபின் பதிப்பிக்கப்பட்டவை*

123. 1904 எட்டாம் வாசகம் (பள்ளி மாண்வர்க்கான பாடநூல்)

124. 1904 ஒன்பதாம் வாசகம் (பள்ளி மாணவர்க்கான பாடநூல்)

*குறியீட்டின் விளக்கம்*

$- ‘பாவலர் விருந்து’ என்னும் நூலில் உள்ளன.

T- ‘தமிழ் வியாசங்கள்’ என்னும் நூலில் உள்ளன.

*- ‘தமிழ்ப்புலவர் சரித்திரம்’ என்னும் நூலில் உள்ளன.

©- ‘தனிப்பாசுரத்தொகை’ என்னும் நூலில் உள்ளன.

ஞா.போ. - ஞானபோதினி

வி.சி. - விவேகசிந்தாமணி

# பின்னிணைப்பு - 3

*வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார் எழுதி வெளியிடாமல் அல்லது கிடைக்காமல் உள்ள நூல்கள்:*

1. குணவதி
2. சீதாபகரணம்
3. பார்வதீபரிணயம்
4. உமைதிருமணம் - குமாரசம்பவத்தின் முதல் ஏழு சருக்கத்தின் மொழிபெயர்ப்பு - செய்யுள்நூல்
5. அவ்வைக்காட்சி - புதுவழியால் யாக்கப்பட்டுள்ளதோர் இனிய செய்யுள் நூல். மெய்க்கோள் பல விளக்குவது.
6. சூர்ப்பணகை - பிரகசனம் என்னும் ஒருவகை நாடகம். ஈரங்கம் உள்ள நகைச்சுவை நாடகம்.
7. முத்திராராட்சசம் - ஏழு அங்கங்களாலாகிய நாடகம் - இந்நாடகத்தின் முதல் அங்கத்தின் முதற் களமும் இரண்டாம் களமும் கிடைத்துள்ளன
8. இன்னுமா? - எளிய தமிழ் நடையில் இயற்றப்பட்ட கதை.
9. இழிசினர் வழக்குரை வரையறை - ஆந்திர மொழியில் வேதம் - வேங்கடராய சாஸ்திரியார் இயற்றியதன் மொழிபெயர்ப்பு. நாடகங்களில் இழிசினர் வழக்குரை வழங்குமாற்றைத் தெளிவுறக் காட்டுவது.
10. வித்தியா விருத்தி - சிவ வித்தையை விளக்கும் வடமொழி மொழிபெயர்ப்பு. ஞானநூல்

# பின்னிணைப்பு - 4
## துணைநூற்பட்டியல்

I. *வி.கோ சூரியநாராயண சாஸ்திரியார் அவர்களின் நூல்கள். முதற்பதிப்புப் பதிப்பித்த ஆண்டு வரிசைப்படி.*


1. ரூபாவதி-வி.சூ.சுவாமிநாதன், மதுரை, ஐந்தாம் பதிப்பு, ஜனவரி, 1957
2. ஸ்ரீமணிய சிவனார் சரித்திரம்-வி.சூ.சுவாமிநாதன், மதுரை,1939.
3. சித்திர கவி விளக்கம்-வி.சூ.சுவாமிநாதன், மதுரை,1939.
4. கலாவதி-வி.சூ.சுவாமிநாதன், மதுரை, நான்காம் பதிப்பு, ஜனவரி, 1957
5. நாடகவியல்-வி.சூ.சுவாமிநாதன், மதுரை, நான்காம் பதிப்பு, டிசம்பர், 1956.
6. பாவலர் விருந்து-வி.சூ.சுவாமிநாதன், மதுரை, 1957.
7. தனிப்பாசுரத் தொகை-வி.சூ.சுவாமிநாதன், மதுரை, மூன்றாம் பதிப்பு, 1957.
8. மதிவாணன்-வி.சூ.சுவாமிநாதன், மதுரை, ஆறாம்பதிப்பு, 1955
9. மானவிஜயம்-வி.சூ.சுவாமிநாதன், மதுரை, ஆறாம்பதிப்பு, 1960
10. தமிழ்மொழியின் வரலாறு-வி.சூ.சுவாமிநாதன், மதுரை பன்னிரண்டாம் பதிப்பு-1968
11. தமிழ்ப்புலவர் சரித்திரம்- வி.சூ.சுவாமிநாதன், மதுரை, ஆறாம் பதிப்பு, 1968.
12. தமிழ் வியாசங்கள்-வி.சூ.சுவாமிநாதன், மதுரை, நான்காம் பதிப்பு, 1958.

## II. *வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியாரைப் பற்றிய*

### (i) நூல்கள்


1. சுப்ரமண்யன், ந., வி.கோ.சூரியநாராயண சாஸ்திரியார், வி.சூ.சுவாமிநாதன், மதுரை, முதற்பதிப்பு, மார்ச், 1950.
2. சுப்ரமண்யன், ந., பரிதிமாற் கலைஞரும் நாடகத்தமிழும், டாக்டர். ந. சுப்ரமண்யன், உடுமலைப்பேட்டை, முதற்பதிப்பு,1994
3. நடராஜ சாஸ்திரி, வி.சூ., வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி.ஏ., வி.சூ.சுவாமிநாதன்,மதுரை, முதற்பதிப்பு, 1939.
4. பலராமையர்,ந., நாடகவியலுரை, சடகோபாசாரியர் அண்டு கம்பெனியார், சென்னை.1902.


### (ii) மலர்


* சுப்ரமண்யன், ந., (ப.ஆ.), பரிதிமாற்கலைஞர் நூற்றாண்டு விழாமலர், வி.சூ. சுவாமிநாதன், மதுரை, முதற்பதிப்பு, 1970


### (iii) ஆய்வேடு


* வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியாரின் நாடகவியல், கோவிந்தன், வி.சு., (எம்.ஃபில் பட்ட ஆய்வேடு), மதுரை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், 1985.


## III. *பயன்பட்ட நூல்களும் இதழ்களும்*

### (அ) தமிழ் நூல்கள்


1. கலியாண சுந்தரனார், வி., திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புக்கள், சாது அச்சுக்கூடம், சென்னை, 1944.
2. சக்தி பெருமாள், தமிழ்நாடக வரலாறு, வஞ்சிக்கோ பதிப்பகம், மதுரை, முதற்பதிப்பு, டிசம்பர் 1979.
3. சபாபதிமுதலியார்,சு., சூரியநாராயண சாஸ்திரியார், வி.கோ., (ப.ஆ.) மதுரை மாலை, சென்னை, 1901.
4. சம்பந்த முதலியார், ப., நாடகத்தமிழ், சென்னை, முதற்பதிப்பு, 1933.

5. சம்பந்த முதலியார், பம்மல், யான்கண்ட புலவர்கள், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை, முதற்பதிப்பு, அக்டோபர் 1962.

6. சாமிநாதையர், உ.வே. (ப.ஆ.)., சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும், சென்னை, ஏழாம்பதிப்பு, 1960.

7. சுந்தராசாரியர், சருக்கை, கி., கலாவதி நாடகவாராய்ச்சி, சென்னை, 1901.

8. சுப்ரமணியன், ந., அமரர் ந. பலராம ஐயரவர்கள் வாழ்க்கை வரலாறும் - செய்யுள் தொகையும், கூடல் பப்ளிஷர்ஸ், மதுரை, 1976.

9. ஞானபூரணி, வ.சு.செ., முதலியோர் (தொ.ஆ.), தணிகைமணி, டாக்டர் வ.சு. செங்கல்வராயபிள்ளை அவர்கள் வரலாறு, வ.சு.செ. தணிகைநாயகன், சென்னை, முதற்பதிப்பு, செப்டம்பர், 1972.

10. முத்துசாமி ஐயர், வே. தனிப்பாக்கோவை, மதுரை, 1919.

11. வரதராசன், மு.தமிழ் இலக்கியவரலாறு, சாகித்ய அகாதெமி, புதுதில்லி, முதற்பதிப்பு, 1972.

## (ஆ) ஆங்கில நூல்

Purnalingam Pillai, M.S., Tamil Literature, The Bibliotheca, Munnirpallam. 1929.

## (இ) தமிழ் இதழ்கள்

1. ஞானபோதினி, ஸம்புடம், V. செப்டம்பர் 1901.

2. ஞானபோதினி, தொகுதி VII, ஜனவரி 1904.

3. விவேகசிந்தாமணி, தொகுதி XI, எண் 6, அக்டோபர் 1902.

## (ஈ) ஆங்கில இதழ்கள்

1. Purnalingam Pillai, M.S., "Kalavati - A New Tamil Play", The Madras Christian College Magazine, Madras, Vol. XVI., No.2, August 1898, pp. 77-86.

2. The Hindu, Wednesday, 4th November, 1903, p.4.

3. The Editor, "College Notes" The Madras Christian College Magazine, Vol. XXI. No.5, November, 1903, pp. 295-296.



**'பரிதிமாற் கலைஞர்'** என்ற புனைபெயரால் தமிழ் கூறு நல்லுலகம் முழுவதும் அறியப்பெறுபவர் பேராசிரியர் வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார், **(1870– 1903)** சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியவர். தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மும்மொழிப் புலமை வாய்ந்தவர். கவிஞர், நாடக ஆசிரியர், நடிகர், ஆய்வாளர், பத்திரிகையாளர். ஏறத்தாழ 74 நூல்களின் பதிப்பாசிரியர் என்ற பல தன்மைகளில் சிறந்து விளங்கியவர். முதன் முதலில் தம்பெயரைத் தனித்தமிழ்ப் பெயராக மாற்றிக் கொண்ட இந்த அறிஞர், 'தமிழ் மொழியின் வரலாறு' என்னும் நூல்வழி, மொழி ஆய்வின் முன்னோடி. இந்தத் 'திராவிட சாஸ்திரி', 'நாடகவியல்' என்ற நாடக இலக்கணத்தையும், நாடக நூல்களையும் படைத்துள்ளார். தமிழை 'உயர்தனிச்செம்மொழி' என்று 1902 ஆம் ஆண்டே மெய்ப்பித்த இவர், 12 நூல்களின் ஆசிரியர். தமிழ்–தமிழர் முன்னேற்றம் பற்றியே சிந்தித்துச் செயலாற்றியவர் சூரியநாராயண சாஸ்திரியார்.

**வி.சு.கோவிந்தன்** : பரிதிமாற் கலைஞரின் மகன் வழிப்பேரனான இவர், மதுரையில் உள்ள மதுரைக்கல்லூரி (தன்னாட்சி) யில் தமிழ்த்துறைப் பேராசிரியராக 31ஆண்டுகள் பணிபுரிந்து, பணிநிறைவு செய்தவர். இவர், தமிழ்த்துறைத் தலைவராக விளங்கியபோது, மதுரைக் கல்லூரித் தமிழ்த்துறையை உயர் ஆய்வுமையமாகமாற்ற முயற்சி மேற்கொண்டவர். சூரியநாராயண சாஸ்திரியாரின் 'நாடகவியல்' பற்றி ஆய்ந்து எம்.ஃபில் பட்டம் பெற்றவர். 'செந்தமிழ்' இதழில் கட்டுரைகள் எழுதியுள்ளார். தற்கால இலக்கியங்கள், தொல்காப்பியம் ஆகியவற்றுள் ஈடுபாடு கொண்ட இவர் மாணவர்களால் பெரிதும் விரும்பப் பெறும் பேராசிரியர்.

Paridhimar Kalaignar *(Tamil)* **Rs. 25**
ISBN - 81-260-2463-1

சாகித்திய
அகாதெமி